**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 29-5-2012 Issued : 29-5-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 3, 2012—தொகுதி 19—எண் 1**

**Friday, the 3rd February 2012—Volume 19—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**3–2–2012**

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | *பக்கங்கள்* |
| | *ஆளுநரும் அமைச்சரவையும்* | v-x |
| | Governor and Council of Ministers | xi-xv |
| | *பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்* | xvii-xx |
| | *பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)* | xxi-xxxi |
| **1.** | **வினாக்கள்—விடைகள்—** | |
| | *(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்* | 1-29 |
| | *(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 1)* | 29-106 |
| **2.** | **அறிக்கைகள் அளித்தல்—** | |
| | *(அ) பொதுக் கணக்குக் குழு* | 106 |
| | *(ஆ) மனுக்கள் குழு* | 106 |
| **3.** | **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| | *(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012* | 107 |
| | *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 107 |
| | *(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012* | 107-108 |
| | **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* | 108 |

பக்கங்கள்

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி

*(இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012* 108-110

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* 108, 109

*(ஈ) தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிச் சட்டமுன்வடிவு, 2012* 109-110

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* 109, 110

*(உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012* 110-111

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* 110, 111

*(ஊ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012* 111-112

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* 111, 112

*(எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012* 112-113

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* 112, 113

*(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2012* 113

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* 113

*(ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012* 120

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 120





பக்கங்கள்

**4. அறிவிப்புகள்—**

*(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)* 110

*(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)* 111

*(இ) கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012 (ஆ.செ.)* 114-115

*(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)* 120

**5. அரசினர் தீர்மானங்கள்—**

*(அ) விதி 13(2)–ஐத் தளர்த்துதல்* 114

*(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்* 192

**6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, வாக்கெடுப்பு** 115-119

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—**தொடர்ச்சி

*திரு. இரா. துரைக்கண்ணு* 121-128

**டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்* 129

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* 129-136

*திரு. என்.ஆர். ரெங்கராஜன்* 133-135, 149, 157-158

*திரு. கே. கோபிநாத்* 136-138, 140-149

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 138, 142-143, 155-158, 162-163, 168-169, 173

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* 138-142, 182-183,185

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—*தொடர்ச்சி*


| | |
|---|---|
| *திரு. எம். ஆறுமுகம்* | 149-155, 157-161 |
| **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி* | 159-161, 167-168, 170 |
| **திரு. அ. சவுந்தரராசன்* | 162-163, 165-179 |
| **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி* | 164-165 |
| **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 171-172 |
| **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி* | 174-175 |
| *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்* | 176-178, 180-182, 184-186 |
| **மாண்புமிகு திரு. பி. தங்கமணி* | 176-177 |
| **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* | 178-179, 187-188, 189, 191 |
| *திரு. எல். வெங்கடேசன்* | 179-182, 184-188, 191 |
| **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்* | 181-182 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 186,190 |
| *திரு. ச. இராமச்சந்திரன்* | 189 |

**8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

| | |
|---|---|
| *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012* | 192-194 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 193,194 |

| | |
|---|---|
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 195 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

**2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்

**3. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

**4. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

**5. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**6. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு



**10. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**11. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**12. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**13. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**16. ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் சத்துணவுத் திட்டம்

**17. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்*

**18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**19. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**20. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**21. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*



**24. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**26. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**27. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு*

**28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**29. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

**30. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**33. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister .. The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance .. The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Revenue .. The Hon. Thiru K.A. Sengottaiyan:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

**4. Minister for Electricity & Prohibition and Excise .. The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**5. Minister for Municipal Administration & Rural Development .. The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**6. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

**7. Minister for Social Welfare** **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms

**8. Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

**9. Minister for Commercial Taxes & Registration, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes & Registration and Stamp Act, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**10. Minister for Agriculture..** **The Hon. Thiru S. Damodaran:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

**11.Minister for Co-operation..** **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare



**12. Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

**13. Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

Highways & Minor Ports

**14. Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

**15. Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

**16. Minister for Rural Industries and Nutritious Noon Meal** **The Hon. Thiru M.C. Sampath:**

Rural Industries including Cottage Industries and Small Industries and Nutritious Noon Meal

**17. Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

**18. Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

**19. Minister for Industries ..** **The Hon. Thiru P. Thangamani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

**20. Minister for Handlooms & Textiles ..** **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

**21. Minister for Khadi and Village Industries ..** **The Hon. Thiru P. Sendur Pandian:**

Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan

**22. Minister for Tourism ..** **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

**23. Minister for Environment ..** **The Hon. Thiru B.V. Ramanaa:**

Environment and Pollution Control

**24. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**25. Minister for Transport ..** **The Hon. Thiru V. Senthil Balaji:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act

**26. Minister for Fisheries ..** **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation

**27. Minister for School Education and Sports and Youth Welfare ..** **The Hon. Thiru N.R. Sivapathi:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture

**28. Minister for Information Technology ..** **The Hon. Thiru N. Subramanian:**

Information Technology



**29. Minister for Information and Special Programme Implementation ..** **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

**30. Minister for Labour ..** **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

**31. Minister for Health ..** **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

**32. Minister for Backward Classes and Minorities Welfare ..** **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

**33. Minister for Hindu Religious and Charitable Endowments ..** **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. எல். வெங்கடேசன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

*# 31—1—2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. குழு அலுவலர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | |
|---|---|
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. சக்திவேலு, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி அ. ராஜலெட்சுமி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. .. தலைமை நிருபர்

திரு. கு. தண்டபாணி, பி.காம். .. செயலாளரின் தனிச் செயலர்

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல்., .. தலைமை நிருபர்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. .. கலசப்பாக்கம்
2. அசோக், திரு. எம்.கே. .. வேளச்சேரி
3. அண்ணாதுரை, திரு. இரா. .. மதுரை தெற்கு
4. அப்துல் ரஹீம், திரு. எஸ். .. ஆவடி
5. அரங்கநாதன், திரு. ஆ.க. .. கீழ்பெண்ணாத்தூர்
6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. .. திருத்தணி
7. அருண் பாண்டியன், திரு. செ. .. பேராவூரணி
8. அருள்செல்வன், திரு. ஆர். .. மயிலாடுதுறை
9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. .. சேலம் வடக்கு
10. அழகுவேலு, திருமதி க. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
13. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
14. அன்பழகன், திரு. ஜெ. .. சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி
15. அஸ்லம் பாஷா, திரு. அ. .. ஆம்பூர்
16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. .. கவுண்டம்பாளையம்
17. ஆறுமுகம், திரு. எம். .. வால்பாறை (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். .. திருப்பூர் வடக்கு
19. இந்திராகாந்தி, திருமதி த. .. துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
49. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
51. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
56. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
58. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு
65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
67. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
68. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
69. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
70. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
71. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
72. சாமி, திரு. ஆர். .. மேலூர்
73. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
74. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
75. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
76. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
77. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
78. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
79. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
80. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
81. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
82. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
83. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
84. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
85. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
86. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
87. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)
88. சுரேஷ்குமார், திரு. டி .. செங்கம் (செ.வ.)



89. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
90. செங்கோட்டையன், திரு. கே.ஏ... கோபிசெட்டிப்பாளையம்
91. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
92. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
93. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
94. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
96. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
97. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
98. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
99. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
100. செழியன், திரு. கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
101. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
102. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
104. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
105. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
106. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
107. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
108. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை
109. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
110. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு
111. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)

112. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
113. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
115. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
116. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
117. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
118. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
119. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
120. தினகரன், திரு. க. .. சூலூர்
121. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
122. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
123. துரைமுருகன், திரு. .. காட்பாடி
124. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
125. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
126. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
127. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
128. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
129. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
130. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
131. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி
135. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)
136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி
137. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு
138. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்
139. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்
140. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி
141. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்
142. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி
143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
144. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்
145. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி
146. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
147. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்
148. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்
149. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்
150. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
151. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி
152. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
153. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்
154. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
155. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்
156. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

157. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

158. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

161. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

162. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

166. போஸ், திரு. ஓ.கே. .. மதுரை வடக்கு

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி. .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமரன், திரு. எஸ்.பி. .. புதுக்கோட்டை



178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

179. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

206. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

218. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். .. பழனி

219. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

221. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்



222. வைகைச்செல்வன், டாக்டர் .. அருப்புக்கோட்டை

223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

224. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

227. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

229. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

230. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

232. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

233. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் .. நியமனம்

235. (வெற்றிடம்) .. சங்கரன்கோவில் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 20

## 2012 பிப்ரவரி 3, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்.”*

*ஒழுக்கம் உள்ளவர் என்பதே அவர் உயர்ந்த குடியில் பிறந்தவர் என்பதற்கு அடையாளம் ஆகும். ஒழுக்கம் இல்லாதவர் இழிந்த குடிப் பிறப்பின் தன்மையை உடையவர் ஆவார்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**30—**

**மின் கம்பிகள்**

***6334—திரு. மு. முருகன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கம், ஏர்வாடி, முந்தல், ஒப்பிலான் கிராமங்களிலுள்ள பழைய மின் கம்பிகளை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கம், ஏர்வாடி, முந்தல், ஒப்பிலான் போன்ற கடற்கரை கிராமங்களிலுள்ள பழைய மின் கம்பிகளை மாற்ற அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்படவுள்ளது. மதிப்பீடுக்கு அனுமதி பெற்றவுடன் மின் கம்பிகளை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, அனுப்பானடி மின் பகிர்வு நிலையத்திலிருந்து செல்லும் பவர் லைன், குடியிருப்புப் பகுதிகளில் மிகத் தாழ்வாகச் செல்கிறது. கடந்த 8 ஆண்டுகளில் 10 பேர் பவர் லைனில் சிக்கி மரணமடைந்துவிட்டனர். சமீபத்தில் ஒரு சிறுவனும் இறந்துவிட்டான். இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வந்து பார்வையிட்டு, இதற்கு மாற்று ஏற்பாடு செய்வதற்கு, தமிழக அரசுக்குக் கடிதம் எழுதுவதாகத் தெரிவித்தார். எனவே, தாழ்வாகச் செல்லும் பவர் லைனுக்கு மாற்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கோரிக்கையைக் குறித்து ஏற்கெனவே நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நான் அங்கே வந்திருந்தபொழுது நேரிலே என்னிடத்திலே தெரிவித்து இருந்தார்கள். அப்பொழுதே, அதுசம்பந்தமாக, தலைமைப் பொறியாளர் மற்றும் மேற்பார்வைப் பொறியாளரையும் அழைத்து, பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளை நேரிலே கண்டறிந்து, எந்தெந்த இடங்களிலே தாழ்வாகச் செல்கின்ற மின் கம்பிகளை மாற்றி அமைக்க முடியுமோ, அந்தந்த இடங்களிலெல்லாம் மாற்றி அமைக்க



2012 பிப்ரவரி 3]

வேண்டுமென்று ஏற்கெனவே அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**31—**

## பேருந்து நிலையம்

***1303—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் பணியை விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தப் பேருந்து நிலையம் விரைவில் திறக்கப்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்குச் சுற்றுச்சுவர் கட்டித் தருவார்களேயானால் நிச்சயமாக நிறைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அது அமையும். அணுகு சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு நகராட்சி நிருவாகத்தை அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அதனுள்ளே கடைகள் நிச்சயமாக அமைந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால், மக்கள் வந்து

[2012 பிப்ரவரி 3

செல்லக்கூடிய அந்தப் பகுதிகளிலுள்ள நிறைய இடங்களில் நடமாடும் கடைகளை வைத்து ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பேருந்து நிலையத்தில் அந்த மாதிரி ஆக்கிரமிப்புகள் வராமலிருக்க, கண்காணிப்புடன் இருக்க வேண்டுமென்று நகராட்சி நிருவாகத்திற்கு அமைச்சகம் அறிவுறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல; இப்போது பேருந்துகளை ஒரு சந்தையின் உள்ளே நிறுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சந்தையை இப்போது காலி செய்கிற வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்திற்கு அந்தப் பேருந்துகளையெல்லாம் கொண்டு வந்துவிடலாம். அந்தச் சந்தையை நகராட்சி நிருவாகம் நினைத்தால் முறையான சந்தையாக விரிவுபடுத்தலாம். ஏற்கெனவே அதன் பக்கத்தில் இருக்கிற சந்தைகளிலெல்லாம் நிறைய குப்பைக் கூளங்கள் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் சுத்தம் செய்து, ஒரே சந்தையாக உருவாக்குவதற்கு ஒரு கோரிக்கையும் வைத்து, நகராட்சி நிருவாகத்தை அறிவுறுத்தி முழுமையாகப் பெற்றுத் தருமாறு அமைச்சகம் இதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வினாவில் ஐந்து வினாக்களை எழுப்பிவிட்டு அமர்ந்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். ஏற்கெனவே இந்தப் பேருந்து நிலையம் 14 கடைகளும், 13 பேருந்து நிறுத்தங்களும் உள்ள ஒரு பேருந்து நிலையமாக இருந்து வந்தது. அதை விரிவுபடுத்துகின்ற வகையிலே 3 கோடியே 65 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய்க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதே பேருந்து நிலையத்தில் 24 கடைகளும், 28 பேருந்து நிறுத்தும் இடங்களும் என்ற வகையிலே இப்பொழுது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அநேகமாக அந்தப் பேருந்து நிலையத்தை நேரடியாகச் சென்று பார்க்கவில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், ‘அங்கு அப்படி இருந்தால் அதை மாற்றுங்கள்’ என்று சொன்னதால் நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன். இந்தப் பேருந்து நிலையம் கிட்டத்தட்ட இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிவடைந்து விடும். ஏற்கெனவே சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. சுற்றுச்



2012 பிப்ரவரி 3]

சுவரைக் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். சுற்றுச் சுவர் கட்டப்பட்டு, இப்பொழுது பூச்சு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, முழுவதுமாக கடைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அங்கே கழிப்பிட வசதிகள், அதாவது பெண்களுக்கென்று தனி இடமும், ஆண்களுக்கென்று தனி இடமும், குளியலறை மூன்றும், கழிப்பிட வசதிக்காக 6 Toilet-களும் கட்டப்படவிருக்கின்றன. இதுவரை 35 விழுக்காடு கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் வருகின்ற 31-3-2012-க்குள் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியது நடமாடும் கடைகள்மாதிரி வைத்து ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்று. மற்ற பேருந்து நிலையங்களிலும் இதை நாம் பார்க்க முடிகிறது. இது புதியதாக வரக்கூடிய பேருந்து நிலையம் என்பதால், இதிலே கொஞ்சம் கண்டிப்பாக இருந்து அந்த மாதிரி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கடைகளை வைத்து வாசலை முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்துவிடுகிறார்கள். இப்போது மக்கள் நடமாடுவதற்கு, மக்கள் பயன்பாட்டிற்கு இடம் இருப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், கேள்விக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** ஆகையால், அதையும் நிச்சயமாக, கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். குறிப்பாக எங்கள் பகுதியில் கன்னியாகுமரி மாவட்டத்தில், இப்படி நிறைய நடக்கிறது. ஆகையால் அதைக் கண்டிப்பாகத் தடுத்து, ஆக்கிரமிப்பு இல்லாமல் நீங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக நான் இந்தக் கோரிக்கையை வைத்தேன். நான் போய் பார்த்ததனால்தான் சொல்கிறேன். இந்த அணுகு சாலைகளெல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஆகையால், இந்த அணுகு சாலைகளைச் சீர்படுத்தி, சந்தையை மாற்றம் செய்ய வேண்டும். இப்போது பேருந்து நிற்பது சந்தைக்கு உள்ளே. அந்தச் சந்தையை முழுவதுமாக சந்தைப் பயன்பாட்டிற்கே கொண்டுவந்து அந்தச் சந்தையைக் கட்டிக் கொடுத்துவிட

[2012 பிப்ரவரி 3

வேண்டும். மேடைகள் போட்டு கட்டிக் கொடுத்துவிட்டால், அந்தக் காய்கறி வியாபாரிகள் எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கும். அதாவது ஒன்று வரும்போது இன்னொன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், கேள்விக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கேள்வி ஒன்று வரும்போது இன்னொரு விஷயத்தையும் கேட்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கிறது. அதனால்தான் நான் அதைக் கேட்டுப் பெற வேண்டும் என்ற ஆசையில் கேட்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டப்பட்டு, அந்தப் பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வருகின்றபோது சிறிய, சிறிய கடைகள் வைக்கின்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இங்கே தெரிவித்தார்கள். பொதுவாகவே, எந்த நகரங்கள் ஆனாலும் சரி, எந்தப் பேரூராட்சியாக இருந்தாலும் சரி, அந்தத் துறையினுடைய அலுவலர்கள் அங்கே தன்னிச்சையாக கடை வைப்பதற்கு யாரையும் அனுமதிக்கமாட்டார்கள். உள்ளூரிலே இருக்கின்ற முக்கிய நபர்களுடைய வற்புறுத்தலின்பேரில்தான் அங்கே கடை வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வருகிறது. ஆங்காங்கே இருக்கின்ற முக்கிய நபர்கள், நம்மைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அதற்கு முறையாக நடவடிக்கை எடுத்தால், இதுபோன்ற நிலை உருவாகாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லாத் துறைகளையும் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பேருந்து நிலையம் கேட்டுக்கொண்டிருக்கின்ற அதேநேரத்தில், அதன் அருகில் இருக்கின்ற சந்தையை மேம்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நகராட்சியிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால், அதற்கு



2012 பிப்ரவரி 3]

ஒன்றும் பெரிய நிதி ஆதாரம் தேவையில்லை. நகராட்சி நிதியிலிருந்து அந்த மேடைகள் கட்டுவதற்குரிய வாய்ப்பு உருவாக்கப்படும். அந்த நகராட்சியினுடைய தலைவர் அவர்களிடத்திலும் எடுத்துச் சொன்னால், அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வாலாஜாபாத் திரு. பா. கணேசன் அவர்கள்.

**திரு. பா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, உத்திரமேரூர் தொகுதியில், உத்திரமேரூர் பஸ் நிலையம், வாலாஜாபாத் பஸ் நிலையம் போன்றவற்றில் இட நெருக்கடியின் காரணமாக சாலையிலே பஸ்கள் நின்று செல்கின்றன. அங்கே புதிய பஸ் நிலையங்களைக் கட்டித் தருவதற்கும் அதோடு உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பழைய கட்டடத்தில் இயங்கி வருவதால் அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதேபோன்று குழித்துறை பகுதியிலே ஏற்கெனவே இருந்த பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு ஏற்ற நிலம் அங்கே இருந்தது, அதனால் உடனே அது விரிவுபடுத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த நகரப் பேருந்து நிலையம் விரிவுபடுத்துவதற்குரிய நிலம் அங்கே இருந்தால் நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 பிப்ரவரி 3

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** *திருப்பூர் மாநகராட்சியினுடைய பழைய பேருந்து நிலைய கட்டட வேலை கிட்டத்தட்ட கடந்த ஆட்சியிலிருந்து தற்போது 8 மாதங்களாகியும் முடியாமல் அதனால் மிகப் பெரிய பாதிப்பு அந்தப் பகுதியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், அதேபோல் புற நகரில் ஒரு புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கான ஆலோசனை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றியும் விளக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த நகரம், தொழில் துறை உள்ள நகரம். பொதுவாகவே தொழில் துறை உள்ள நகரங்கள், வளர்ந்து வருகின்ற நகரங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்களில் அதற்கான போதிய வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், வளர்ந்து வருகின்ற நகரங்களில், ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்களை விரிவுபடுத்துவதற்குரிய நிலங்கள் நிச்சயமாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, இதுபோன்ற நகரங்களில் வேறு இடங்களில் நிலங்களைக் கையகப்படுத்தி புதிய பேருந்து நிலையங்களை அமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனை வழங்கியிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே அந்த நகரத்திற்கும் நிலம் கையகப்படுத்துகின்றபட்சத்தில், நிச்சயமாக புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.*

**டாக்டர் த. ஹரிதாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி*



2012 பிப்ரவரி 3]

*திண்டிவனம் நகரத்தில் பல வருடங்களாக பேருந்து நிலையமே இல்லாமல் தேசிய நெடுஞ்சாலையில் பேருந்துகளை நிறுத்தும் அவலநிலை இருக்கிறது. அதற்கு கடந்தகால ஆட்சியில் ஓர் ஏரியைத் தேர்வு செய்து, அங்கே பஸ் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த இடத்தில் இப்போது தண்ணீர் தேங்கி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் நகரத்திற்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தருவாரா என்று இந்த நேரத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திண்டிவனம் பேருந்து நிலையம், ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2006-ல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து, அதற்கான நிலங்களைக்கூட கையகப்படுத்தி, பணிகள் நடைபெறுவதற்குரிய வாய்ப்பு வந்தபோது, ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், அதற்கு அடுத்துவந்த ஆட்சி, ஏற்கெனவே இருந்த அரசால் கொண்டு வரப்பட்டதை நடைமுறைப்படுத்தக்கூடாது என்பதற்காக வேறு இடங்களை ஆய்வு செய்த காரணத்தினால், அங்கே இருக்கின்ற பொது மக்கள், வசதியாக இருக்கின்ற இடத்தை விட்டுவிட்டு வேறு இடங்களுக்கு மாற்றுவதை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு முடிந்தவுடனேயே அங்கே நகரப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

**திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் பாராத தனிப்பெரும் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், துறையூர் நகராட்சிக்கு 77 இலட்சம் ரூபாயில், அங்குள்ள பேருந்து நிலையத்தைப் பராமரிப்பு செய்வதற்காக நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். சென்ற வாரம்*

[2012 பிப்ரவரி 3

கூட அங்கே மேற்கூரை இடிந்து விழுந்த நிலையில் இன்னும் அதற்கான நிருவாக அனுமதி பெறாத நிலையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் அதற்கான ஏற்பாட்டைச் செய்து தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

**திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கள்ளக்குறிச்சி நகராட்சியில், மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் 1980-ல் 25 பேருந்துகள் நிற்கக்கூடிய வசதி மற்றும் 250 பேருந்துகள் வந்து செல்லக்கூடிய வசதியுடன்கூடிய பேருந்து நிலையத்தை உருவாக்கிக் கொடுத்தார்கள். தற்போது 1,000 பேருந்துகள் வந்து செல்கின்றன. கடந்த கால ஆட்சியாளர்களிடம் இந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தருமாறு மூன்று முறை கருத்துரு அனுப்பப்பட்டும் நிராகரித்துவிட்டார்கள். பேருந்து நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு ஏக்கரில் நகராட்சிக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக தமிழகத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். இந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்தும், ஒரு புறநகர்ப் பேருந்து நிலையம் உருவாக்கிக் கொடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையத்திற்கு விரிவாக்கம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதோடுமட்டுமல்லாமல், அருகிலேயே ஒரு ஏக்கர் நிலம் நகராட்சிக்குச் சொந்தமானதாக இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். அந்த ஒரு ஏக்கர் நிலத்தை வேறு ஏதாவது பணிக்காக நகராட்சி நிருவாகம் கையகப்படுத்தியிருந்தால் அதைப் பேருந்து நிலையத்திற்கு வழங்க இயலாது என்று கருதுகிறேன். அதோடுமட்டும் நின்றுவிடாமல், புறநகர்ப் பேருந்து நிலையமும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அப்படி அதிக நெரிசல் உள்ள பேருந்து நிலையமாக இருக்கிறபட்சத்தில், புறநகரில் நிலம் கையகப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கின்றபோது அங்கே புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறநகர்ப் பேருந்து நிலையங்களில் மாற்றுத் திறனாளிகளுக்குக் கழிப்பறை வசதி, வயதானவர்களும், மூத்தவர்களும் வருகின்றபோது உள்ளே வருவதற்கான சக்கர நாற்காலி வசதி ஆகியவை ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு எல்லா வகைகளிலும் உதவவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து அதற்கேற்ற நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 15 நாட்களுக்கு முன்புகூட நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடியாகக் கீழே வந்து அவர்களுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பேருந்துகளை அவர்களே கொடியசைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாற்றுத் திறனாளிகள் ஏறி அமரக்கூடிய* lift-ஐ-operate *செய்து, அதில் மாற்றுத் திறனாளிகள் ஏறி அமர்ந்து பயணம் செய்கின்ற கண்கொள்ளாக்*

காட்சியைப் பார்க்கும் விதத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு, பரிவோடு (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சர் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தத் தமிழகத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழங்கிய நல்ல ஆலோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி-பழனி பிரதான சாலையில் உடுமலையின் மையப் பகுதியில் இப்பொழுது ஒரு பேருந்து நிலையம் நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யவேண்டும் என்பதற்காக அருகிலே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 2 ஏக்கர் நிலம் காலி செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நிலப் பரிமாற்றப் பணிகளை உடனடியாகச் செய்து உடுமலை நகராட்சியில் பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகளை உடனடியாகத் தொடங்குவதற்கும், அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே 2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறியிருக்கின்றபட்சத்தில் நிச்சயமாக அதன் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து, உடனடியாகப் பணிகள் தொடங்குவதற்குரிய வாய்ப்பு உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



**32—**

## பூச்சித் தடுப்பு

***1104—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரவையின் அனுமதியோடு திருத்திய விடையினை அளிக்கின்றேன். மத்திய, மாநில அரசு நிதியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் பருத்தி தொழில்நுட்பக் குழுமத்தின் சிறு குழுமம்-II திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் நடத்தப்பட்டு, பருத்திப் பயிரைத் தாக்கும் பூச்சிகள், அதன் இயற்கை எதிரிகள், ஒருங்கிணைந்த பூச்சி நிருவாகம் முதலியன குறித்து போதிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு 2011-2012 ஆம் ஆண்டு 100 வயல்வெளிப் பள்ளிகள் ரூ.17.00 இலட்சம் நிதி இலக்கில் மாநிலம் முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வினத்தின்கீழ் பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகள் தவிர, மற்ற பூச்சிகள் மற்றும் நோய்கள் குறித்தும், அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் போதிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கக்கூடிய பஞ்சாலைகள் அதிகம் இருக்கின்றன. இப்போது 5 இலட்சம் bale பருத்திதான் உற்பத்தி செய்யப்படுகிறது. நம்முடைய தமிழகத்திற்கு 45 இலட்சம் bale தேவை. எனவே, பருத்தியை அதிகமாக உற்பத்தி

செய்வதற்கான செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உண்டா? அப்படியானால், பருத்தியை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு, விளைவிக்கக்கூடியவர்களுக்கு மானியம் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் உங்கள் கேள்வி, பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தது. ஆனால், நீங்கள் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பது குறித்து கேட்கிறீர்கள். அதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு சவால் விடுகிற முறையில் நீர் நிலைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஆகாயத் தாமரைச் செடிகளை ஒழித்துக் கட்டுவதற்கும், ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்ட பார்த்தீனியம் செடிகளை ஒழித்துக் கட்டுவதற்கும் அரசு முழுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**33—**

## நியாய விலைக் கடை

*__1147—திரு. கே.பி. கந்தன்:__ மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, உத்தண்டி ஊராட்சி, நைனார் குப்பம் பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உத்தண்டி ஊராட்சியில் உள்ள KG 005 சோழிங்கநல்லூர் நியாய விலைக் கடையில் 1,089 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் நைனார்குப்பம் பகுதி மக்களின் 279 குடும்ப அட்டைகளும் அடங்கும். இப்பகுதிவாழ் மக்களின் நலன் கருதி, மேற்படி தாய்க் கடையிலிருந்து 279 குடும்ப அட்டைகளைப் பிரித்து, நைனார்குப்பத்தில் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடத்தில் புதிய பகுதிநேரக் கடை மார்ச் 2012-க்குள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.

**திரு. கே.பி. கந்தன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது வணக்கத்தையும், பணிவையும் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உத்தண்டியில் உள்ள நைனார்குப்பம் பகுதி மக்களின் நலன் கருதி, 279 குடும்ப அட்டைகளைப் பிரித்து நைனார்குப்பம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

[2012 பிப்ரவரி 3

**திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட தரமணி பகுதியில் இரண்டு நியாய விலைக் கடைகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவற்றைக் கூடிய விரைவில் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அதிவிரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**34—**

**பாலம்**

****129—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையிலுள்ள பழைய பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையிலுள்ள பழைய பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும்*



2012 பிப்ரவரி 3]

*பணி பன்மாநிலங்களை இணைக்கும் திட்டத்தின்கீழ் (Inter State Connectivity) செயல்படுத்த மைய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்று அழாத குழந்தை உண்டோ; குழந்தையின் அழுகுரல் கேட்டு சும்மா இருந்துவிட்ட தாயும் உண்டோ என்பதற்கிணங்க, தமிழ்நாட்டையும் கேரளத்தையும் இணைக்கும் இந்த முக்கிய சாலையில் அமைந்துள்ள, நீண்டநாள் கோரிக்கையான கேரள எல்லைக்கு மிக அருகிலுள்ள இந்தப் பாலம் மிகவும் குறுகலாகவும், பழமையானதாகவும் இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கானோர் தினமும் பயன்படுத்தக்கூடிய இந்தப் பாலத்தைச் செப்பனிட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடன் விரைந்து நடவடிக்கை எடுத்து, புதுப் பாலம் கட்டும் பணிக்கு ஆவன செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றிதனைக் கூறிக்கொண்டு, இந்தப் பணி எப்போது துவங்கும்; எவ்வளவு தொகையிலே இந்தப் பாலம் கட்டப்படவிருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலுடன் இருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் கி.மீ. 122/0, வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையில் கிலோ மீட்டர் 13/4-லிருந்து 17/4 வரை மேம்பாடு செய்து, கிலோ மீட்டர் 16/8-ல் மாற்று நேர்பாட்டில் பாலம் கட்டும் பணியை பன்மாநில இணைப்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்வதற்கு ரூ.259.66 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு மைய அரசின் நிருவாக ஒப்புதல் பெறுவதற்கு முன்மொழிவு 19-7-2011 அன்று அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2012 பிப்ரவரி 3

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.*

**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-ரேணிகுண்டா சாலை ஆவடி தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர், பட்டாபிராம், திருமுல்லைவாயில் பகுதி நெடுஞ்சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து சாலை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையை ஆய்வு செய்து, அது பழுதடைந்திருந்தால் அதைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**35—**

## அடிப்படை வசதிகள்

***4560—திரு. துரை. மணிவேல்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரியலூர் தொகுதி, ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலயப் பகுதியில் சுற்றுலா நிதி உதவித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் மற்றும் தங்கும் வசதிகள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி என்னும் வீரமாமுனிவர் வசித்த புனித இடத்தில் சுற்றுலாத் தலமாக உள்ள அடைக்கல மாதா திருத்தலத்திற்கு கிறிஸ்துவர்கள் மட்டுமின்றி அனைத்து மதத்தினரும் வழிபாடு செய்யவரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்ததைக் கருத்தில்கொண்டு, 2004-2005 ஆம் நிதியாண்டிலேயே மாநில அரசு சுற்றுலா நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ.3.30 இலட்சம் மதிப்பில் அடிப்படை வசதிகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறை வசதிகள் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அது இன்று பயன்பாட்டிலே இருக்கின்றது. 7 ஆண்டுகளுக்குப் பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி ஏலாக்குறிச்சி, அடைக்கல மாதா திருத்தலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக மேலும் பல அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும் என்று 2011-2012 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத் துறை அறிவிப்பு எண் 13-ஆக வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, ஏலாக்குறிச்சி, அடைக்கல மாதா திருத்தலத்தில் சிமென்ட் கான்கிரீட் அணுகுசாலை, மாதா குளத்திற்குச் சுற்றுச் சுவர் மற்றும் படிக்கட்டுகள், குடிநீர், கழிப்பறை வசதிகளுடன் பக்தர்களுக்கான ஓய்வறை ஆகிய சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த கோரிக்கையையும் ஏற்று 3 மாதத்திற்குள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூ.43.95 இலட்சத்தை மாநில அரசு திட்டத்தின்கீழ் அனுமதித்து, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை ஆணை எண் 216-ஆக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வெளியிட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தப் பணிகளை விரைவாக நடத்தி சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக, ஏதுவாக முடிக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

[2012 பிப்ரவரி 3

**திரு. துரை. மணிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவியெல்லாம் புகழ் மணக்கும் பொற்கால ஆட்சி தந்த புரட்சித் தலைவி அம்மா, என் உயிர் தமிழகத்தில் ஏழ்மை இனி விளைந்திடவே கூடாது என ஆழ உழுது, அநீதியை, அக்கிரமங்களைக் களையெடுத்து, தகர்த்திட்ட, களம் கண்ட வேங்கையே, கண்துஞ்சா உழைப்பே, காவியத் தலைவியே அம்மா, திக்கெட்டும் புகழ் மணக்கும் வறுமை ஒழித்திடும் திட்டங்கள், தாய்த்திரு நாட்டிற்கு தலைமையேற்க அழைப்புகள், உங்கள் உழைப்பிற்கு உலகம் தலை வணங்கும் காலமே, எங்கள் வசந்த காலம். எந்த இனம், எந்த நிறம், எந்த கட்சி என்ற நிலைமையை மாற்றி, அரியலூர் தொகுதி, ஏலாக்குறிச்சி, அடைக்கல மாதா அன்னை ஆலயத்திற்கு சிறிய தொண்டனான என்னுடைய வேண்டுகோளையேற்று, 43.95 இலட்சம் ரூபாயைச் சுற்றுலாத் தலத்திற்கு ஒதுக்கீடு செய்த 1000 கோடி நிலவே, எங்கள் அம்மா அவர்களுக்கு, ஆயிரமாயிரம் நறுமலர்களை உங்கள் காலடியில் கொட்டி வணங்குகிறேன் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகையை வழங்குவதற்குப் பரிந்துரை செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன். கரைவெட்டி ஏரி சுமார் 350 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. அதில் 12,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடிய ஏரி, சுற்றுலாத் தலமாக 2003 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இதுவரையிலும் எந்தப் பணிகளும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. எப்பொழுதெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி வருகிறதோ, அப்பொழுதெல்லாம் அத்தனை வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு சாட்சியே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா அன்னை ஆலயத்திற்கு வழங்கிய நிதி என்பதைக் காரணம் சொல்லி, இந்தச் சுற்றுலாத் தலத்திற்காகும் 3 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சமர்ப்பித்திருக்கின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்த நிதியைக் கொடுத்து அந்த ஏரியையும், சுற்றுலாத் தலத்தையும் பெருமைப்படுத்த ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சுற்றுலாத் துறை சம்பந்தமான, உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கோரிக்கைகளையெல்லாம் அன்போடு பரிசீலனை செய்து, நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி அளித்து, அதற்கு ஆவன செய்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எல்லாமுமாக இருக்கக்கூடிய, தமிழக மக்களுக்கு அனைத்துமாக இருக்கக்கூடிய அம்மா அவர்களுக்கு மட்டுமே நன்றி சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோரிக்கையாகச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள சில கண்மாய்கள் தூர் வாரப்பட வேண்டும்; அங்கே சுற்றுலா வளர்ச்சிக்காக, நிதி ஒதுக்கீடுகள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார். அதுவும் நிறைவேற்றப்படும்.*

*அதேபோல, அரியலூர் பகுதியில் கரைவெட்டி என்ற பறவைகள் சரணாலயம் இருக்கின்றது. திருச்சியிலிருந்து 50 கிலோ மீட்டர், அரியலூரிலிருந்து 20 கிலோ மீட்டர், தஞ்சை மாவட்டத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரமுள்ள, அதிகமான அளவில் சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய அந்த இடத்திற்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி, இதற்காகத் தேவைப்படும் 3 கோடியே 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்குரிய ஆரம்பப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

**திரு. துரை. மணிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரைவெட்டி பறவைகள் சரணாலயத்திற்கு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை அரியலூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறி, நன்றியோடு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

[2012 பிப்ரவரி 3

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் அபிராமி ஆலயத்திற்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயில் பக்தர்களின் வசதிக்காக, தங்கும் விடுதி கட்டுவதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி, நான் வணங்கும் தெய்வம் அம்மா அவர்களுடைய பொற் பாதங்களை வணங்கி, நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, அம்மா அவர்கள் குறிப்பாக, அதிகமாக பக்தர்கள் வரக்கூடிய திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் அபிராமி அம்மன் கோயிலுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியதன் அடிப்படையிலே இந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஓய்வு அறையும், கழிப்பறைகளும் ஒரு மாதத்திற்கு முன்பாகவே கட்டப்பட்டு அவர்களுடைய பயன்பாட்டிற்காக விடப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

**திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் ஒரு திட்டம் தந்து தமிழகத்தை, இந்தியத் துணைக் கண்டத்தின் முதன்மை மாநிலமாக்க சபதம் ஏற்று, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற நான் வணங்கும் தாய், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற் பாதங்களை வணங்கி, என்னுடைய வினாவைத் தொடுக்கின்றேன். தஞ்சை நகரம் ஒரு புராதனமான நகரம். பாரம்பரியமான வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். அந்த நகரத்திலே இயற்கையாகவே அகழி ஒன்று சுற்றுப்புற வடிவத்தில் இருக்கிறது. அந்த அகழியைத் தூர் வாரி, சிறப்பான முறையிலே படகு சவாரி விடுகின்ற ஒரு சிறந்த திட்டத்தை உருவாக்கினால், தினந்தோறும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து சுற்றுலாப்



2012 பிப்ரவரி 3]

பயணிகளும் தஞ்சை பெரிய கோயிலுக்கு வந்து குவிந்து கொண்டிருக்கக்கூடிய நிலையிலே, இன்னும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு அந்தத் திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த அகழியைத் தூர் வாருவதற்குரிய நிதி ஒதுக்கீடு குறித்த கருத்துருவினை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெற்று, ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் தஞ்சை, திட்டையிலே உள்ள முக்கியமான கோயிலான வஸிஷ்டேஸ்வரர் கோயிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு 54.60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பரகல்லக்கோட்டையிலுள்ள முக்கிய ஸ்தலமாக இருக்கக்கூடிய மதியபுரீஸ்வரர் கோயிலுக்கும் 77.45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, தஞ்சை பெரிய கோயிலுக்கு பொங்கல் விழா எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே, மூன்று இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் சுற்றுலாப் பயணிகள் வந்து அந்த விழாவைப் பார்த்து மிகவும் ரசித்தார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய ஆட்சியிலே, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக எல்லா மாவட்டங்களுக்கும் வளமான திட்டங்களைக் கொடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவி, தமிழகத்தின் காலம் தந்த கற்பூரப் பெட்டகம் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியினைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திலே கொடும்பாளூர்சத்திரம் என்ற வரலாற்றுப் புகழ் பெற்ற இடம் ஒன்று உள்ளது. அந்தக் கோயில் அருங்காட்சியகத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தக் கோயிலிலே சிவபெருமான் நடனம் செய்யக்கூடிய ஓர் அற்புத சிலை இருந்தது. அந்தச் சிவபெருமான் சிலை, முகத்திலே ஒரு மந்தகாசப் புன்னகை, வெற்றிப் புன்னகை இருக்கக்கூடிய அளவிலே வடிவமைக்கப்பட்டது. அந்தச் சிலையின் கீழே இருக்கக்கூடிய பால அசுரனுடைய சிலை முகத்திலே ஒரு கலக்கம், ஒரு மிரட்சி, ஒரு பய உணர்வு இருக்கக்கூடிய வகையிலே அமைக்கப்பட்டுள்ளது. ஒரு சித்திரத்திலே வேண்டுமானால், இதுபோன்ற முகபாவங்களை வரைய முடியும். ஆனால், சிற்பத்திலே காட்டுவது என்பது இயலாத காரியம். இன்னும் சொல்லப்போனால், அந்தச் சிலை உலக அதிசயங்களிலே ஒன்றாக இருக்க வேண்டியது. அப்படிப்பட்ட சிலை இன்றைக்கு வட மாநிலத்திலே பண்டித ஜவஹர்லால் நேருவுக்குச் சொந்த இடமான திருமூர்த்திபவனிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு, ஒரு சிவபெருமான்தான் இருக்கிறார்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** அந்த ஒரு சிலையைத்தான் தமிழக அரசு மீண்டும் பெற்றுக்கொண்டு வந்து தமிழ்நாட்டிலே கொடும்பாளூர்சத்திரத்திலே வைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா சுற்றுலாத் துறை தொடர்பானது அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராமநாதபுரம் தொகுதியிலே திருஉத்தரகோசமங்கை கோயில் இருக்கின்றது. தமிழகம் முழுவதிலிருந்தும் அந்தக் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். தேவையான அடிப்படை வசதிகள், பேருந்து வசதிகள் போன்றவை அங்கே இல்லை. இந்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது 100 சதவிகிதம் சரியான ஒன்றுதான். அதிகமான சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய அந்த திருஉத்தரகோசமங்கை கோயில் ஒரு பழமைவாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில். அங்கே சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கழிப்பறை வசதிகளும், தங்கும் விடுதிகளும், குடிநீர் வசதியும் ஏற்கெனவே உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் பற்றி ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெற்று, அதற்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 பிப்ரவரி 3

**36—**

**பணிமனை**

*473—**திரு. பி.கே. வைரமுத்து:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமயம் தொகுதி, திருமயத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து தரக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நிலம் கிடைக்கப்பெற்றதும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று திருமயத்தில் புதிய பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

**திரு. பி.கே. வைரமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடை திறந்த வெள்ளம்போல், கடைக்கோடி மக்களெல்லாம் அடைந்தது போன்ற மகிழ்ச்சி. மகிழ்ச்சியைத் தந்தது அம்மா அவர்களின் ஆட்சி. மடை திறந்த வெள்ளம் போன்று மட்டற்ற களப் பணிகளை விரைந்து முடித்ததால் பெற்றிட்ட மட்டற்ற மகிழ்ச்சிக்கு அளவுதான் இல்லையே அம்மா! எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில், திருமயத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத்தலமான ஊமையன்கோட்டையில் பல்லவ மன்னரால் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான சிவபெருமான் குடவரை ஆலயங்கள், ஒரே சுற்றுச் சுவருக்குள் கல்லிலே கலைவண்ணம் கொண்ட பெருமைமிகு*



2012 பிப்ரவரி 3]

*திருமயத்தில், சிறப்புமிகு வைணவத்தலமாக விளங்கும் திருமயத்தில், 5 ஏக்கர் நிலம் கிடைத்தவுடன் அந்தப் பேருந்து பணிமனை அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் போக்குவரத்துக் கழகப் பணிமனை, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. நமது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுராந்தகம் நகரத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கட்டடம் கட்டித் தருவாரா என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதற்குண்டான நிலம் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான தென்காசி தொகுதி, வி.கே. புதூர் வட்டம், சுரண்டையிலிருந்து சேந்தமங்கலம் வழியாக சங்கரன்கோவில், புளியங்குடிக்கும், வாரியூர், வரங்குன்றாபுரம், ஊத்துமலை, கலங்கல் வழியாக சங்கரன்கோவிலுக்கும், வி.கே. புதூர், அத்தியூத்து, ஆலங்குளம் வழியாக திருநெல்வேலிக்கும், ஆயக்குடிக்கும், சாம்பவர் வடகரை வழியாக செங்கோட்டைக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், சுரண்டையிலிருந்து தினந்தோறும் பேருந்துகள் புறப்படவும், இரவில் பேருந்துகள் நிறுத்தும் இடமாகவும் உள்ளது. எனவே, தென்காசி தொகுதி, வி.கே. புதூர் வட்டம்,*

சுரண்டையில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆணையிடுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உரிய நிலம் கிடைக்கப்பெறும்பட்சத்தில், ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**37—**

## கட்டட வசதி

*__2390—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:__

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், திசையன்விளை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.6 இலட்சம் செலவில் புறநோயாளிகள் பிரிவுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், தடுப்பூசி அறை கட்ட ரூ.3.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் இருக்கையில் இல்லை.*

*உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் தாமதமாக வந்தால் நான் என்ன செய்ய முடியும்?*

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

### (பட்டியல் 1)

**1—**

### ஊதியம்

**வினா எண் 287—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி எண்ணெய்வித்துப்பண்ணை, குடுமியான் மலை அறிஞர் அண்ணா பண்ணைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிலுவையில் உள்ள ஊதியத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*அண்ணா அரசு விதைப்பண்ணை, வெள்ளாளவிடுதி எண்ணெய்வித்துப்பண்ணை மற்றும் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இதர அரசு விதைப்பண்ணைகள் மற்றும் எண்ணெய்வித்துப்பண்ணைகள் ஆகியவற்றில் பணிபுரியும்*

---

* *இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

[2012 பிப்ரவரி 3

தினக்கூலிப் பணியாளர்களுக்கான கூலித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 2011-2012-க்கான முன்னளி மானியக் கோரிக்கையில் (Vote on account) பெறப்பட்டு, அரசு விதிகளின்படி மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நிலுவைத் தொகையினை நேர் செய்வதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2—**

## சிறப்புத் திட்டங்கள்

**வினா எண் 1538—திரு. ந. நஞ்சப்பன்**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு சிறப்புத் திட்டங்களை வகுத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் இதுவரை மொரப்பூர், தருமபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பெண்ணாகரம், காரிமங்கலம் ஆகிய வட்டாரங்களில் 94 நீர்வடிப் பகுதிகளில் ரூ.25.80 கோடி செலவில் 47,000 எக்டேர் பரப்பு மத்திய மற்றும் மாநில அரசின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை மத்திய மற்றும் மாநில அரசின் நிதியாக ரூ.24.26 கோடி பெறப்பட்டு, ரூ.22.54 கோடி செலவில் 41,806 எக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின் மூலம் 2009-2010 முதல் 8 திட்டங்கள் 81 நீர்வடிப் பகுதிகளில் 40,429 எக்டேர் பரப்பு மேம்படுத்தத் திட்டமிடப்பட்டு 5 வட்டாரங்களில் ரூ.48.51 கோடி செலவில் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



2012 பிப்ரவரி 3]

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் இதுவரை மத்தூர், ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனப்பள்ளி, சூளகிரி, ஓசூர், கெலமங்கலம் மற்றும் தளி ஆகிய வட்டாரங்களில் 126 நீர்வடிப் பகுதிகளில் ரூ.34.40 கோடி செலவில் 63,000 எக்டேர் பரப்பு மத்திய மற்றும் மாநில அரசின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை மத்திய மற்றும் மாநில அரசின் நிதியாக ரூ.32.62 கோடி பெறப்பட்டு ரூ.31.44 கோடி செலவில் 61,725 எக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின்மூலம் 2009-2010 முதல் 8 திட்டங்கள் 76 நீர்வடிப் பகுதிகளில் 43,313 எக்டேர் பரப்பு மேம்படுத்த திட்டமிடப்பட்டு 7 வட்டாரங்களில் ரூ.51.97 கோடி செலவில் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் நீர்வடிப் பகுதிகளில் நிலவள மேம்பாட்டுப் பணிகளான மண் வரப்பு அமைத்தல், நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், கல் வரப்பு அமைத்தல் போன்ற பணிகளும், நீர்வள மேம்பாட்டின் கீழ் கால்நடைக் குட்டை, பண்ணைக் குட்டை, கண்மாய் தூர்வாருதல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டை அமைத்தல் போன்ற பணிகளும், தாவர வள மேம்பாட்டில் வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப் பயிர் மேம்பாடு செய்தல் ஆகிய பணிகளும் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**3—**

## மண் பரிசோதனை

**வினா எண் 4380—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்கள்தோறும் சென்று ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மண் பரிசோதனை இலவசமாக செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிராமங்கள்தோறும் சென்று 6 மாதங்களுக்கு ஒரு முறை மண் பரிசோதனை இலவசமாக செய்து கொடுக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.*

**4—**

### மேற்பார்வையாளர் அலுவலகம்

**வினா எண் 6285—திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் இயங்கும் தமிழ்நாடு மின் வாரிய மின் மேற்பார்வையாளர் அலுவலகத்தினை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரியில் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் இயங்கும் தமிழ்நாடு மின் வாரிய வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தினை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக் கொண்டு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தினை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாரியத்தின் அனுமதி பெற்று கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அமைக்கப்படும்.*

**5—**

### ஊராட்சி

**வினா எண் 114—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 பிப்ரவரி 3]

*(அ) மக்கள் தொகை அதிகமாக உள்ள பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மக்கள் தொகை அதிகமாக உள்ள பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.*

**6—**

### ஊராட்சி

**வினா எண் 845—திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, ஏ. சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஏ. சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பது குறித்து முன்மொழி ஏதும் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பெறப்படவில்லை. எனவே, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை, ஏ. சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதும் இல்லை.*

**7—**

### ஊராட்சி

**வினா எண் 846—திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தமங்கலம் ஊராட்சியை இரண்டு அல்லது மூன்று ஊராட்சிகளாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்பொழுது ஊராட்சிக்கான பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருவதாலும், உள்ளாட்சித் தேர்தல், அக்டோபர் 2011 இல் நடைபெற இருப்பதாலும் உள்ளாட்சி அமைப்புகளைத் தனியாகப் பிரித்தல், சேர்த்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றுமுடிந்த பின்னர், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தமங்கலம் ஊராட்சியை இரண்டு ஊராட்சிகளாகப் பிரிப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**8—**

## தூர் வாருதல்

**வினா எண் 1025—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள அனைத்துக் குளங்களையும் தூர்வாரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிப் பகுதியிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான குளங்களைத் தூர்வாரி சுத்தம் செய்து மேம்பாடு செய்திட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





**9—**

## குடிநீர்

**வினா எண் 1305—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளத்தில் குடியிருப்பின் மக்கட்தொகை 1,326 ஆகும். இக்குடியிருப்பிற்கு ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதைத் தவிர கடலோர மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட 113 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 61,100 லிட்டர் தாமிரபரணி ஆற்று நீரும் இந்த மேல்நிலைத் தொட்டியில் ஏற்றப்பட்டு முழு அளவில் இக்குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வாரிய விதிகளின்படி உள்ளூர் நீராதாரத்திற்கு எனத் தனியாகவும், தாமிரபரணி ஆற்று நீருக்கு எனத் தனியாகவும் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்க வழிவகை இல்லை.

**10—**

## நடைபயிற்சி வசதி

**வினா எண் 1381—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 பிப்ரவரி 3

*பட்டுக்கோட்டை நகரில் காசன்குளம் கரையினைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி காலை நேரங்களில் நடைபயிற்சி வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*பட்டுக்கோட்டை நகரில் காசன்குளத்தினைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் விதிமுறைகளின்படி வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினருடன் ஒருங்கிணைந்து அகற்றப்படும். ஆக்கிரமிப்புகளை அகற்றிய பின்பு 3 மாதத்திற்குள் சாலை ஓரங்களில் நடைபயிற்சி செய்ய பாதை அமைக்கப்படும்.*

**11—**

### பூங்கா

**வினா எண் 1784—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள பூங்கா நகரில் பூங்காவைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள பூங்கா நகர், பெரியார் நகர் மற்றும் கம்பன் நகர் ஆகிய இடங்களில் பூங்கா அமைத்து மேம்பாடு செய்திட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**12—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2125—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 பிப்ரவரி 3]

*(அ) புதுக்கோட்டை தொகுதி, 9ஏ நத்தம்பண்ணை, பாரதி நகர், பாலன் நகர் கிழக்கு, மாம்பட்டி பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், 9ஏ நத்தம்பண்ணை ஊராட்சியைச் சார்ந்த நத்தம்பண்ணை குடியிருப்பிற்கு மக்கட்தொகைக்கேற்ப 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் முழு அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பாரதிநகர் குடியிருப்பிற்கு மக்கட்தொகைக்கேற்ப 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு தனி மின்விசைத் திட்டம் மூலமும் மற்றும் பாரதிநகர் & கட்டியாவயல் குடியிருப்புகளுக்கு 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டமும், 43 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டமும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மாம்பட்டி குடியிருப்பின் மக்கட்தொகை 2006 மறு ஆய்வின்படி 100 ஆகும். 9ஏ நத்தம்பண்ணை ஊராட்சியைச் சார்ந்த அடப்பங்கரை சத்திரம் குடியிருப்பின் மக்கட்தொகை 480 ஆகும். இவ்விரு குடியிருப்புகளுக்கும் பொதுவாக மக்கட்தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 43 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பாலன்நகர் கிழக்கு தனிக் குடியிருப்பாக இல்லை. பாலன்நகர் குடியிருப்பில் 1995 ஆம் ஆண்டு மற்றும் 2003 ஆம் ஆண்டு 30,000 லிட்டர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, தனி மின்விசைத் திட்டம் மூலமும், புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 43 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் முழு அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**13—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2128—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, பாலன் நகர் மேற்கில் புதியதாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், 9ஏ நத்தம்பண்ணை ஊராட்சியைச் சார்ந்த பாலன்நகர் மேற்கு தனிக் குடியிருப்பாக இல்லை. பாலன்நகர் கிழக்குப் பகுதிக்கு 1995 ஆம் ஆண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், பாலன் நகர் மேற்குப் பகுதிக்கு 2003 ஆம் ஆண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, வாரிய விதிமுறைகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**14—**

## துணைப் பேருந்து நிலையம்

**வினா எண் 2197—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகரில் தனியாக துணைப் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை நகரில் தனியாக துணைப் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**15—**

## தனி அதிகாரி

**வினா எண் 3148—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடில் பாதாள சாக்கடைப் பணிகளைக் கண்காணிக்க தனி அதிகாரி நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஈரோடு மாநகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்டத்தின் பணிகளுக்கென தனி அதிகாரி நியமிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

*(ஆ) மேலும், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைக் கண்காணிக்க மேற்பார்வைப் பொறியாளர் நிலையில் ஓய்வுபெற்ற மேற்பார்வைப் பொறியாளர் நியமிக்கப்பட்டு, திட்டப் பொறியாளர் என்ற பெயரில் பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

**16—**

## குடிநீர்

**வினா எண் 4726—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரைவுபடுத்தி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்கும் வகையில் ரூ.1,928.80 கோடி அமைப்புச் செலவிற்கும், ரூ.63.67 கோடி பராமரிப்புச் செலவிற்கும் 29-1-2010 ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறையின் அரசு ஆணை (நிலை) எண் 19-இல், ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஒகேனக்கல் குடிநீர் மற்றும் ஃபுளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் இவ்விரு மாவட்டங்களில் உள்ள 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். இத்திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக ஐந்து தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஐந்து தொகுப்புகளிலும் தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2012-இல் முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**17—**

## மழை அங்கி

**வினா எண் 5053—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு, மழை அங்கி, கையுறை, காலுறை, மிளார், அகப்பை, குப்பை வண்டி ஆகியவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான மழை அங்கி, கையுறை, காலுறை, மிளார், அகப்பை, குப்பை வண்டி ஆகியவை அவ்வப்போது அவர்களுக்குத் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**18—**

## நியமனம்

**வினா எண் 5344—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்கள் பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 165 பணியிடங்களில், தற்போது 126 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். காலியாக உள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்திட அரசாணை (ப) எண் 19, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18-1-2007-ல் நகராட்சியின் செலவினம் 49 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, காலியாக உள்ள 39 பணியிடங்களை நிரப்ப பணியாளர்களின் ஊதியச் செலவினம் 49 சதவீதத்திற்கு மேல் உள்ளதால் காலிப் பணியிடம் பூர்த்தி செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2012 பிப்ரவரி 3

**19—**

## பழுது நீக்குதல்

**வினா எண் 6388—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, பாக்குடி ஊராட்சி, மங்களாப்பட்டி, விட்டாநிலைப்பட்டி, நெருங்களாகுடி ஆகிய இடங்களில் ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகளில் பழுது நீக்குவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில், அரசுத் திட்டங்களின்மூலம் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை, வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**20—**

## புதுப்பித்தல்

**வினா எண் 8185—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, கொங்கணாபுரம், கன்னந்தேரி ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி*



2012 பிப்ரவரி 3]

*நெறிமுறைகளில், அரசுத் திட்டங்களின்மூலம் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை, வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**21—**

## இடவசதி

**வினா எண் 1562—திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் சார் பத்திரப் பதிவு அலுவலகம் முன்பு அரசின் அனுமதி பெற்ற பத்திரப் பதிவு எழுத்தர்களுக்கு உரிய இடவசதி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆவணப் பதிவினைப் பொறுத்து ஆவணங்களைத் தயாரிக்கும் ஆவண எழுத்தர்களுக்கு பின்வரும் மூன்று வகையான உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன:*

**(அ) மாநில உரிமம் (A-Licence)**

*தமிழ்நாடு முழுவதிலும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் எழுதுவதற்கு மாநில* A-*உரிமம்* (A-Licence) *துணைப் பதிவுத் துறைத் தலைவரால் வழங்கப்படுகிறது. இந்த ஆவண எழுத்தர்கள் எழுதும் ஆவணங்கள் மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்படும்.*

**(ஆ) மாவட்ட உரிமம் (B-Licence)**

*பதிவு மாவட்டத்தில் ஆவணங்கள் எழுதுவதற்கு மாவட்ட உரிமம்* (B-Licence) *வழங்கப்படுகிறது. இந்த ஆவண எழுத்தர்கள் எழுதும் ஆவணங்கள் பதிவு மாவட்டம் முழுவதிலும் பதிவு செய்யப்படும்.*

**(இ) சார்பதிவக உரிமம் (C-Licence)**

ஒவ்வொரு சார்பதிவகத்திலும் ஆவணங்கள் எழுதுவதற்கு சார்பதிவக உரிமம் (C-Licence) வழங்கப்படுகிறது. இந்த ஆவண எழுத்தர்கள் எழுதும் ஆவணங்கள் அந்தந்த சார்பதிவகத்தில் மட்டும் பதிவு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் A, B, C உரிமம் பெற்ற 6,585 ஆவண எழுத்தர்கள் உள்ளனர். பதிவுத் துறைத் தலைவர் கடித எண் 46544/எஸ்2/2009, நாள் 30-11-2009-ன்படி ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள் அலுவலகத் தாழ்வாரத்தில் அமர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அரூர் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு அரசின் அனுமதி பெற்ற பத்திரப் பதிவு எழுத்தர்களுக்கு உரிய இடவசதி ஏற்படுத்தித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

**பணி நியமனம்**

**வினா எண் 1872—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உதவிபெறும் கல்லூரி மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை கடைப்பிடித்து உரிய பிரிவினருக்குப் பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு உதவிபெறும் கல்லூரிகளில், சிறுபான்மை கல்லூரிகள் தவிர மற்ற கல்லூரிகளில் அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு பணி நியமனம் மேற்கொள்ளப்படுகிறது. நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதில்லை.





**23—**

**ஊதியம்**

**வினா எண் 2982—திரு. எஸ். ஜான் ஜேக்கப்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளிலுள்ள சுயநிதி வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு அரசு ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எத்தகைய முறையில் அரசு ஊதியம் வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளிலுள்ள சுயநிதி வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு அரசு ஊதியம் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**24—**

**அனுமதி**

**வினா எண் 1061—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து பகுதிநேர நியாய விலைக் கடைகள் கட்ட அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நியாய விலை அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குச்

சட்டமன்ற உறுப்பினர் நிதி உதவியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்ட ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறப்பது தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அங்காடிகளுக்கு இலவசமாக அப்பகுதி மக்களால் கட்டடம் வழங்கப்படவேண்டும். இவ்வாறு இலவசமாக கட்டடம் கிடைக்கப்பெறும் இனங்களிலேயே பகுதிநேர நியாய விலை அங்காடி அமைக்க அனுமதிகள் வழங்கப்படுகின்றன. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவது குறித்த வினா எழாது.

**25—**

## அரசு ஊழியர்கள்

**வினா எண் 3559—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தனித் தனிக் கூட்டுறவு அமைப்புகளாகும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் நியமனம், பணி நிபந்தனைகள் ஆகியவை அச்சங்க பணியாளர் சிறப்புத் துணை விதியில் குறிப்பிட்டபடி இருக்கும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர் ஒவ்வொருவரும் அந்தந்த சங்கப் பணியாளர்கள் ஆவர். எனவே, இப்பணியாளர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் நிலை எழவில்லை. இதனால் இவர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**26—**

## பயிர்க் கடன்கள்

**வினா எண் 4447—திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வழங்கும் பயிர்க் கடன்களை விரைவாக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடி மேற்கொள்வதற்குப் பயிர்க் கடன்கள் வழங்கி வருகின்றன.

மாநிலத் தொழில்நுட்பக் குழுவால் அந்தந்த மாவட்டங்களுக்குப் பல்வேறு பயிர்களுக்கு நிர்ணயிக்கப்படும் கடன் அளவுகளின்படி (Scales of Finance) விவசாயிகள் கோரும் பயிர்க் கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன்கள், பதிவு செய்யப்பட்ட கரும்புப் பயிருக்கு 10 ஏக்கர் வரையிலும், இதர பயிர்களுக்கு ரூ.1,00,000/- வரையிலும் எவ்வித அடைமானமுமின்றி தனி நபர் பிணையம் பெற்றுக்கொண்டு வழங்கப்படுகிறது. இத்தொகைகளுக்கு மேல் தேவைப்படும் கடன்கள், சொத்து அடைமானத்தின் பேரில் வழங்கப்படுகின்றன. இத்தகைய கடன்கள் நகையீட்டின் பேரிலும் வழங்கப்படுகின்றன. மேலும், விவசாயிகள் தாங்கள் ஏற்கெனவே பெற்ற பயிர்க் கடனைத் திரும்பச் செலுத்தி பயிர்க் கடன் கோரினால் 7 நாட்களுக்குள் புதிதாகப் பயிர்க் கடன் வழங்கப்படுகின்றன. தவணைத் தேதிக்குள் பயிர்க் கடன்களை உரிய தவணைக் காலத்தில் திரும்பச் செலுத்தும் விவசாயிகளிடம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. இதனால் சங்கத்திற்கு ஏற்படும் வட்டி இழப்பை அரசே ஏற்றுக்கொள்கிறது.

2011-2012 ஆம் ஆண்டில் பயிர்க் கடன் வழங்கிட குறியீடு ரூ.3000 கோடி நிர்ணயிக்கப்பட்டு, 15-10-2011 முடிய

*4,54,993 விவசாயிகளுக்கு ரூ.1,702.54 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.*

*பயிர்க் கடன் கோரும் அனைத்து விவசாய உறுப்பினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களைப் பயிர்க் கடன்கள் வழங்குவதற்குப் பயன்படுத்தி வருகின்றன. நபார்டு வங்கியும் மறு நிதி உதவி அளித்து வருகிறது. எனவே, பயிர்க் கடன் கோரும் அனைத்து விவசாய உறுப்பினர்களுக்கும் எவ்வித சிரமமும் இன்றி அந்தந்தப் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விரைவாகப் பயிர்க் கடன்களை வழங்கி வருகின்றன.*

**27—**

## நிலவள வங்கிகள்

**வினா எண் 6839—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நிலவள வங்கிகளை மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நிலவள வங்கிகள் நீண்டகாலக் கடனமைப்பின் கீழும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் குறுகிய காலக் கடனமைப்பின் கீழும் வருகின்றன. நிலவள வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தேசிய வங்கியிடமிருந்து மறு நிதி உதவி பெற்று விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கிட இயலாத நிலை ஏற்பட்டதன் காரணமாக, தொடக்க நிலையிலுள்ள தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகள் பாதிப்படைந்துள்ளன. எனினும், அவற்றின் செயல்பாடுகளை வலுப்படுத்தும்பொருட்டு, நகைக் கடன்கள் அதிக அளவில் வழங்கிடவும், தவணை தவறிய பண்ணைசாராக் கடன்களை வசூலிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தொடக்க நிலை கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளைகளாக மாற்றுவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், நீண்டகாலக் கடனமைப்பின்கீழ் வரும் நிலவள வங்கிகளை குறுகிய காலக் கடனமைப்பின்கீழ் வரும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*





**28—**

## மரம் வளர்க்கும் திட்டம்

**வினா எண் 2060—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெருந்துறை மருத்துவக் கல்லூரியிலிருந்து வனத் துறைக்குக் குத்தகைக்கு அளித்த இடத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மரம் வளர்க்கும் திட்டம் துவக்கப்பட்டதை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டத்திலுள்ள பெருந்துறை மருத்துவக் கல்லூரியிடமிருந்து வனத் துறைக்காக எந்த நிலமும் குத்தகைக்குப் பெறப்படவில்லையானாலும், 2001-2002 ஆம் ஆண்டில் "தரிசு நிலம் பசுமையாக்கும் திட்டத்தின்" கீழ், பெருந்துறை மருத்துவக் கல்லூரிப் பகுதியில் 25.00 எக்டேர் நிலப்பரப்பில் செடிகள் நடப்பட்டு, தோட்டம் உருவாக்கப்பட்டது. தற்போது, இத்திட்டம் நடைமுறையில் இல்லை. இருப்பினும், தமிழகமெங்கும், விவசாயிகள் பயன்பெறும் வகையில் தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2011-2012 ஆம் ஆண்டில் 1.30 கோடி மரங்கள் ரூ.13 கோடி செலவில் நடப்பட உள்ளன. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 71,454 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.*

[2012 பிப்ரவரி 3

**29—**

## பணி நியமனம்

**வினா எண் 2845—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வனத் துறையில் பணிபுரிந்து இறந்த பணியாளர்களின் வாரிசுகள் கருணை அடிப்படையில் வேலை கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன?*

*(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது பணி நியமனம் வழங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்வேறு பணியிடங்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 348 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வனத் துறையில் சி & டி பிரிவில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு அரசு ஆணை (நிலை) எண் 154, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள் 19-9-2006-இன்படி விகிதாச்சார அடிப்படையிலும் மற்றும் கருணையின் அடிப்படையிலும் முதுநிலை வரிசையின்படியும், தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி தகுதியான வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம் செய்யப்படும். 2007 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 136 நபர்கள் கருணையின் அடிப்படையில் அவர்களது கல்வித் தகுதிக்கு ஏற்ப பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்களுக்கு வனத் துறையில் காலிப் பணியிடம் ஏற்படும்போது கருணையின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும்.*

**30—**

## யானைகளைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 5279—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 பிப்ரவரி 3]

*(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதிகளில் உள்ள விளை நிலங்களின் பயிர்களைச் சேதப்படுத்தும் யானைகளைக் கட்டுப்படுத்த வனத் துறை நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதிகளில் உள்ள விளைநிலங்களின் பயிர்களைச் சேதப்படுத்தும் யானைகளைக் கட்டுப்படுத்த, வன எல்லைக்கும் பட்டா நிலங்களுக்கும் இடையே சூரிய சக்தியில் இயங்கும் மின்வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. வன எல்லைக்கும் பட்டா நிலங்களுக்கும் இடையே வன உயிரினங்கள் காப்புக்காட்டை விட்டு பட்டா நிலங்களுக்கு வராமல் தடுக்க யானை புகா தடுப்பு அகழிகள் வெட்டப்பட்டுள்ளன.*

*உணவு மற்றும் நீர்ப் பற்றாக்குறை காரணமாக வனத்தை விட்டு வெளியே வரும் வன உயிரினங்களைத் தடுக்கும்வண்ணமாக அவற்றிற்கு வனத்திற்குள் கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.*

*வனத்தைவிட்டு வெளியேறி பொதுமக்களுக்கு ஊறு விளைவிக்கும் வன உயிரினங்கள் நடமாட்டம் குறித்து தகவலறிந்தும், தகவல் சேகரித்தும் அந்த இடங்களுக்கு வனப் பணியாளர்கள் வேட்டை தடுப்புக் காவலர்கள் அடங்கிய குழுக்கள் விரைந்து சென்று வன உயிரினங்களை வனத்திற்குள் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

*இரவு நேரங்களில் பொதுமக்கள் யாரும் வன உயிரினங்கள் நடமாடும் வனப் பகுதிகளுக்கு அருகில் தனியாகச் செல்ல வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு செல்பவர்கள் வனப் பணியாளர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.*

*இதனையும் மீறி யானைகள் காட்டைவிட்டு வெளியே வந்து ஏற்படுத்தும் மனித உயிர்/காயம் மற்றும் பயிர் சேதங்களின் தன்மைக்கேற்ப நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

[2012 பிப்ரவரி 3

கடந்த இரண்டு வருடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை விவரம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | காயம் | | பயிர்ச் சேதம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெறப் பட்ட மனுக்கள் | வழங்கப் பட்ட நிவாரணத் தொகை | பெறப் பட்ட மனுக்கள் | வழங்கப் பட்ட நிவாரணத் தொகை | பெறப் பட்ட மனுக்கள் | வழங்கப் பட்ட நிவாரணத் தொகை |
| 2010 | — | — | 23 | 2.00 | 23 | 2.00 |
| 2011 | 1 | 0.20 | 50 | 3.80 | 51 | 4.00 |
| மொத்தம் | 1 | 0.20 | 73 | 5.80 | 74 | 6.00 |

**31—**

## சுவர் கட்டுதல்

**வினா எண் 6286—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச்சரகக் குடியிருப்புப் பகுதிக்குள் யானைகள் புகாமல் தடுக்க, கருங்கல் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச்சரகக் குடியிருப்புப் பகுதியானது தேன்கனிக்கோட்டை நகர மையப் பகுதியில் அமைந்துள்ளது. பொதுவாக இக்குடியிருப்புப் பகுதிக்குள் யானைகள் நடமாட்டம் கிடையாது. மேலும், தேன்கனிக்கோட்டை நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்திலுள்ள தேன்கனிக்கோட்டை காப்புக்காட்டிலிருந்து யானைகள் நகரத்திற்குள் புகாவண்ணம் தேன்கனிக்கோட்டை



2012 பிப்ரவரி 3]

காப்புக்காடு எல்லையில் 2010-2011 ஆம் ஆண்டில் 3.7 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. தேன்கனிக்கோட்டை வனச்சரகக் குடியிருப்புப் பகுதிக்குள் யானைகள் புகாமல் தடுக்க கருங்கல் சுவர் கட்டுவது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

## தடுப்பணைகள்

**வினா எண் 8961—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வனப் பகுதிகளில் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில், தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை 1-க்கு சம்பந்தப்பட்ட 100 கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு ஒரு தடுப்பணை, ஒரு கசிவுநீர்க் குட்டை வீதம் 100 தடுப்பணைகள், 100 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கவும் மற்றும் அக்கிராமப் பகுதியில் தடுப்பணையோ, கசிவுநீர்க் குட்டைகளோ இருப்பின் அதனைப் பராமரிக்கவும் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**33—**

## அகலப்படுத்துதல்

**வினா எண் 270—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 பிப்ரவரி 3

(அ) பத்மனாபபுரம் தொகுதி, அழகியமண்டபம்-ஆற்றூர், தக்கலை-சித்திரங்கோடு மற்றும் வெண்டலிகோடு-குலசேகரம் ஆகிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணியை விரைந்து முடித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திங்கள் சந்தை—திருவட்டாறு மற்றும் மார்த்தண்டம்—பேச்சிப்பாறை சாலையை இணைக்கும் சாலை கி.மீ.0/0-3/9 நீளமுள்ள மாவட்ட இதர சாலையாகும்.

தக்கலை—தடிக்காரன்கோணம் சாலை கி.மீ.0/0—8/6 நீளமுள்ள பெரிய மாவட்ட சாலையாகும். இச்சாலை கி.மீ.0/0—5/6 வரை இருவழித்தடமாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கி.மீ.5/6—8/6 வரை இருவழித்தடமாக உள்ளது.

மேக்கோடு—குலசேகரம் சாலை கி.மீ.0/0—7/2 நீளமுள்ள பெரிய மாவட்ட சாலையாகும். இதில் கி.மீ.0/0—0/2 மற்றும் கி.மீ.3/5—7/2 ஒருவழித்தடமாக உள்ளது. கி.மீ.0/0—3/5 வரை ஏற்கெனவே இருவழித்தடமாக உள்ளது. மேலும் கி.மீ.0/0—0/2 மற்றும் 3/5—7/2 ஆகிய மேற்படி சாலைப் பகுதிகளை இருவழித்தடமாக மாற்றுவதற்கு உண்டான அவசியம், அவசரம் கருதி, வரும் காலங்களில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும்.

**34—**

## பாலம்

**வினா எண் 343—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2012 பிப்ரவரி 3]

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்திலிருந்து செங்கோட்டை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் ஆலம்பட்டி குறுகிய பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலத்திலிருந்து செங்கோட்டை செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் ஆலம்பட்டியில் கி.மீ.227/10-ல் உள்ள குறுகிய பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்ட 2011-2012 திட்டப் பணியில் (Annual Plan) ரூ. 7 கோடி (ரூபாய் ஏழு கோடி) மதிப்பில் அங்கீகாரத்திற்காக கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**35—**

## தண்ணீர் நிரப்புதல்

**வினா எண் 250—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கும் வெட்டன்குள நீர் வரத்து வாரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வெட்டன்குளத்திற்குத் தண்ணீர் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கும் வெட்டன்குளம் நீர்வரத்து வாரியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, வெட்டன்குளம் வரை கடந்த

[2012 பிப்ரவரி 3

*2010-2011 ஆம் ஆண்டு இறுதியில் சிறப்பு மராமத்துப் பணியின்கீழ் வரத்துவாரி தூர்வாரி பராமரிக்கப்பட்டுள்ளது.*

**36—**

## பேருந்து வசதி

**வினா எண் 873—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டூர் அணை 16 கண் பாலத்தின் வழியே பேருந்து போக்குவரத்து வசதியை அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*மேட்டூர் அணையின் கட்டமைப்பு மற்றும் அணையின் பாதுகாப்பு கருதி, அணைகள் பாதுகாப்பு இயக்குநரகத்தின் ஆய்வறிக்கை மற்றும் இந்திய அரசின் உள் துறை அமைச்சகத்தின் புலனாய்வுப் பிரிவு பரிந்துரையின் அடிப்படையில் 8-12-2010 முதல் போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும், இப்பாலம் வழியாக பாதசாரிகள், இரு சக்கர வாகனங்கள் மற்றும் அவசர கால ஊர்தி* (Ambulance Service) *மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மேட்டூர் 16 கண் பாலத்தின்மீது மீண்டும் வாகனப் போக்குவரத்தினை அனுமதிக்க இயலாது.*

**37—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 1659—திருமதி ர. சுபா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கெங்கவல்லி தொகுதி, புனல்வாசல் ஏரிக்கரையின் ஒரு புறம் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, புனல்வாசல் ஏரிக்கரையினை ஒட்டி கிராமப்புற சாலை செல்வதால் மேற்கொண்டு அதில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

**38—**

## பூங்காக்கள்

**வினா எண் 3891—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு ஏரியில் உள்ள ஆற்றுக் கால்வாயைச் சீரமைத்து மீதமுள்ள இடத்தில் பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், கமண்டல நாகநதியின் குறுக்கே ஒரு அணைக்கட்டு ரூ. 2.00 கோடி மதிப்பில் கட்ட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இம்மதிப்பீட்டில் இரும்பேடு மற்றும் பையூர் ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுசெல்லும் வகையில் ஆற்றுக் கால்வாய்களைத் தூர் வார வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த மதிப்பீட்டிற்கு திருத்திய நிருவாக ஒப்புதல் பெறப்படவுள்ளது. திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டபின் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்தப் பகுதியில் வெள்ளக் காலங்களில் மண் எடுத்து கரைகள் பலப்படுத்தப்பட வேண்டியுள்ளதால் காலியிடங்களில் பூங்கா அமைக்க இயலாது.*

[2012 பிப்ரவரி 3

**39—**

## செயற்கை மணல்

**வினா எண் 1833—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செயற்கை மணலை அறிமுகம் செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, தொழில் துறை அமைச்சர்:**

*ஆம். செயற்குறிப்பில் உள்ளது.*

**40—**

## விலை நிர்ணயம்

**வினா எண் 4668—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மணலுக்கு யூனிட் விலை நிர்ணயம் செய்திருப்பது போல், பாறைப் பொடி மணலுக்கு யூனிட் விலை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பொதுவாக கல் அரைக்கும் இயந்திரங்களிலிருந்து (கிரஷர்) பாறைப் பொடி மணல் பெறப்படுகிறது. ஜல்லி தயாரிக்க கிரஷருக்கு கொண்டு வரப்படும் சாதாரண கற்களுக்கு (சோலிங்) குத்தகைதாரர் ஏற்கெனவே உரிய சீனியரேஜ் தொகையை செலுத்தி அனுமதி பெற்றுள்ளதால், மீண்டும் கிரஷர் பாறை பொடி மணலுக்கு சீனியரேஜ் தொகை/ யூனிட் விலை நிர்ணயம் செய்ய தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளில் இடமில்லை.*



2012 பிப்ரவரி 3]

**41—**

## தடுத்தல்

**வினா எண் 1416—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையினால், ஒட்டப்பிடாரம் மற்றும் சுற்று வட்டக் கிராமங்களில் ஆஸ்துமா மற்றும் அபாயகரமான நோய்கள் ஏற்படுவதையும், விலங்கினங்கள் செத்துமடிவதையும், நிலத்தடிநீர் மாசுபடுவதையும் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளியேறும் புகையிலுள்ள மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களும், கழிவு நீரின் மாசுப் பொருட்களை நீக்கி மறுசுழற்சி செய்ய சுத்திகரிப்பு நிலையங்களும் மற்றும் அபாயகரமான திடக்கழிவுகளை வெளியேற்ற பாதுகாப்பான நிலப் புதைப்பு அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள் முறையாகத் தொடர்ந்து இயக்கப்படுவதையும் மற்றும் மாசுப் பொருட்கள் சுற்றுச்சூழலிலும் நிலத்தடி நீரிலும் தாக்கத்தை ஏற்படுத்தாமல் கட்டுப்படுத்தப்படுவதையும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மேலும், இத்தொழிற்சாலையின் வளாகத்திலுள்ளும் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுற்றுச்சூழல், காற்றின் தன்மை, நிர்ணயித்துள்ள தரத்திற்குட்பட்டிருப்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. சுற்று வட்ட கிராமங்களில் மாதந்தோறும் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, நிலத்தடி நீரின் தரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இத்தொழிற்சாலையின் அருகில் உள்ள கிராமங்களின் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் புள்ளிவிவரங்களின்படி, 1995 ஆம் ஆண்டிலிருந்து 13 வகையான குறியீட்டு சிறு நோய்களின் அதிகரிப்பு குறிப்பிடும்படி இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி*

[2012 பிப்ரவரி 3

மருத்துவமனையின் ஆய்வின்படி, நோய்களின் மாறுதல் மாசு காரணமாக ஏற்படவில்லை. இத்தொழிற்சாலையைச் சுற்றியுள்ள கிராமங்களில், மாசு காரணமாக கால்நடைகள் இறப்பு ஏதும் இல்லையென, தூத்துக்குடி கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநரகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற்சாலைமீது தொடரப்பட்ட சுற்றுச்சூழல் சம்பந்தமான பொது நலன் வழக்குமீது உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, இடைக்காலத் தடையினைப் பெற்று, தற்போது இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக நிறைவேற்றப்பட வேண்டிய மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் குறித்தும் உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட உள்ளது.

**42—**

## சுற்றுச்சூழல்

**வினா எண் 1883—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், புலியூர் அருகிலுள்ள தமிழ்நாடு குளோரேட்ஸ்மூலம் வெளியேறும் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், புலியூர் அருகிலுள்ள தமிழ்நாடு குளோரேட்ஸ் என்ற தொழிற்சாலைமூலம் வெளியேற்றப்படும் கழிவு நீரினை நிலத்திலோ அல்லது நீரோடைகளிலோ விட அனுமதி எதுவும்



2012 பிப்ரவரி 3]

வழங்கப்படவில்லை. அத்தொழிற்சாலையில் உருவாகும் கழிவுநீர் (1000 லிட்டர் நாளொன்றுக்கு) சூரிய ஒளி மூலம் ஆவியாக்கும் தொட்டியில் விடப்பட்டு ஆவியாக்கப்படுகிறது. மேலும், இத்தொழிற்சாலை வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**43—**

## கண்காணித்தல்

**வினா எண் 2023—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவுளித் துறை நிறுவனங்கள் அனைத்தும் மக்கும் தன்மையுடைய துணிப் பை பயன்படுத்துவதைக் கண்காணிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள், கப்கள், டம்ளர்கள், விரிப்புகள், தட்டுகள் மற்றும் ஏனைய பொருட்களின் பயன்பாட்டைத் தடை செய்ய தீர்மானம் இயற்ற வலியுறுத்தியுள்ளது மற்றும் வலியுறுத்தி வருகிறது. ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் ஏனைய மேற்கண்ட பொருட்களினால் மக்களுக்கு உண்டாகும் தீய விளைவுகளைப் பற்றியும் மற்றும் இவற்றுக்கு மாற்றாக உள்ள துணிப் பைகள், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவதில் உள்ள நன்மைகள் பற்றியும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல விழிப்புணர்வு முகாம்களை நடத்தியுள்ளது. பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டைக் குறைக்கும் பொருட்டும் மற்றும் பிளாஸ்டிக்

பைகளுக்கு மாற்றாக உள்ள துணிப் பை போன்றவற்றின் பயன்பாட்டை அதிகரிக்கும் பொருட்டும், 40 மைக்ரான் தடிமனுக்குட்பட்ட புதிய அல்லது மறு சுழற்சி செய்யப்பட்ட அல்லது இரண்டும் கலந்த எந்த விதமான பிளாஸ்டிக் பைகளையும் உற்பத்தி செய்யவோ, சேமித்து வைக்கவோ, பகிர்ந்து கொடுக்கவோ மற்றும் விற்கவோ கூடாது என்று 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. எனவே, பிளாஸ்டிக் பைகளின் பயன்பாடு படிப்படியாகக் குறைந்து, மாற்றுப் பொருட்களான துணிப் பை, சணல் பை ஆகியவற்றின் பயன்பாடு கூடும். மேலும் இதுகுறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் மாற்றுப் பொருட்களான துணிப் பை, சணல் பை ஆகியவற்றையே பயன்படுத்த வழிவகுக்கும்.

**44—**

## தடுத்தல்

**வினா எண் 2214—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதியில் இயங்கும் நவீன அரிசி ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வெட்டன்விடுதியில் அமைந்துள்ள இராமன் நவீன அரிசி ஆலையில் இருந்து தற்போது கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அவர்களது சொந்த நிலத்தில் பயன்படுத்தப்பட்டு வருவதால் குடிநீர் பாதிப்படைய வாய்ப்பில்லை.





**45—**

## குடியிருப்புகள்

**வினா எண் 1632—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் இயங்கி வரும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் இயங்கி வரும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதிக்குக் குடியிருப்புக் கட்டடம் ரூ. 30.97 இலட்சம் செலவில் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்புதல் கோரும் சென்னை உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

**46—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 1652—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் இயங்கிவரும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் இயங்கிவரும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு ரூ.148.00 இலட்சம் செலவில் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்புதல் கோரும் சென்னை உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.*

**47—**

**சிலை**

**வினா எண் 2987—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பொன்னப்ப நாடாருக்குச் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பொன்னப்ப நாடார் அவர்களுக்குச் சிலை அமைக்கும் கருத்துரு, அரசின் பரிசீலனையில் இல்லை.*

**48—**

**மணி மண்டபங்கள்**

**வினா எண் 5281—திரு. எல். வெங்கடேசன்:** *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருக்கோவிலூர் தொகுதி, திருவெண்ணெய்நல்லூரில், சிவபெருமானின் திருவிளையாடலை நினைவுபடுத்தும்வகையிலும், சடையப்ப வள்ளல் வாழந்ததைக் குறிக்கும் வகையிலும் மணி மண்டபங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**49—**

**நினைவு மண்டபம்**

**வினா எண் 5348—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கையில் கவிஞர் மீராவுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. எழவில்லை.*

**50—**

**நினைவுச் சின்னம்**

**வினா எண் 6861—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரியில் தீரன் சின்னமலையைத் தூக்கிலிட்ட இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில், அரச்சலூர் என்ற கிராமத்தில் தீரன் சின்னமலை அவர்கள் நினைவாக மணி மண்டபம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், சங்ககிரி தொகுதி, சங்ககிரியில் தீரன் சின்னமலையைத் தூக்கிலிட்ட இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**51—**

## மேம்படுத்துதல்

**வினா எண் 2050—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெருந்துறை தொகுதி, குன்னத்தூர் மற்றும் ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டங்களில் நலிவடைந்துள்ள கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் பனை விவசாயத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

*பனைவெல்ல கொள்முதலுக்கென அரசு வழங்கிய நடைமுறை மூலதனத் தொகை ரூ.50.00 இலட்சத்தில் நடப்பு ஆண்டில் கோவை—ஈரோடு மாவட்ட விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளத்திற்கென ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2010-2011 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் மொத்த பனைப் பொருட்கள் விற்பனையான ரூ.13.40 கோடியில், கோவை—ஈரோடு மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் மட்டும் ரூ.7.42 கோடி பனைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இது தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் மொத்த விற்பனையில் 55 விழுக்காடு ஆகும். அத்துடன், நடப்பு ஆண்டின் ஜுலை 2011 முடிய மொத்த விற்பனை ரூ.343.14 இலட்சத்தில், மேற்படி சம்மேளனம், ரூ.180.48 இலட்சம் பனைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இது மொத்த விற்பனையில் 53 விழுக்காடு ஆகும்.*





*தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தைப் பொறுத்தவரை, கோவை—ஈரோடு மாவட்ட பனைத் தொழிலாளர்களிடமிருந்து அதிகளவில் பனைப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதன்மூலம் குன்னத்தூர், பெருந்துறை, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்ட பனைத் தொழிலாளர் சங்கங்களின் நிலையும், பனை விவசாயமும் மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**52—**

## நிதியுதவி

**வினா எண் 3953—திருமதி மனோரஞ்சிதம்:** *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊத்தங்கரை தொகுதி, மத்தூரில் செயல்பட்டு வரும் தருமபுரி மாவட்ட பனைப் பொருள் உற்பத்தியாளர் சம்மேளனத்திற்கு நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டங்களில் பனைப் பொருட்களைக் கொள்முதல் செய்திட ரூ.15.00 இலட்சம் நடைமுறை மூலதனமாக வழங்கப்பட்டுள்ளது.*

*மத்தூர், தருமபுரி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், 2010-2011 ஆம் ஆண்டில், பனைத் தொழிலாளர்களிடமிருந்து ரூ.30,000/- மதிப்புள்ள பனை வெல்லம், ரூ.23,000/- மதிப்புள்ள பதநீர் மற்றும் ரூ.4,000/- மதிப்புள்ள நார் பொருட்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.*

[2012 பிப்ரவரி 3

இது தவிர, தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையம் மத்தூர் கிளையில் ரூ.76,000/- மதிப்புள்ள நார்ப் பொருட்கள் பனைத் தொழிலாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் மேலும், பனைத் தொழிலாளர்களிடமிருந்து அதிக அளவில் உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**53—**

## உணவு விடுதி

**வினா எண் 2578—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் சுற்றுலாத் துறையின் சார்பாகப் பயணிகள் தங்கும் வசதியுடன் கூடிய ஒரு உணவு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக சுற்றுலாத் துறையின்மூலம் தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்கள், அதிகம் அறியப்படாத சுற்றுலா இடங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்ள அரசின்மூலம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு அவ்விடத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தற்சமயம் ஓட்டல்கள் கட்டும் கொள்கையினைக் கைவிட்டுள்ளது. இருப்பினும், மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தங்கும் வசதியுடன் கூடிய உணவு விடுதி கட்டுவதற்குத் தனியார் முன்வருவாரேயானால், நடவடிக்கை எடுக்கப்படும்.



2012 பிப்ரவரி 3]

**54—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 2579—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்வது குறித்து, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் பெறப்படும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த அடிப்படையில், மானாமதுரை பகுதியில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடியதாக உள்ள குறிப்பிட்ட இடம் பற்றி சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்கும்பட்சத்தில் அரசின் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**55—**

## பராமரித்தல்

**வினா எண் 3485—திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சுற்றுலாத் தலங்களில் உள்ள விடுதிகள் மற்றும் உணவு விடுதிகள் இவற்றைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

[2012 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் சுற்றுலாப் பயணிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தில் மாமல்லபுரம், காஞ்சிபுரம், உளுந்தூர்பேட்டை, சென்னை, கொடைக்கானல், இராமேஸ்வரம், பழனி, கன்னியாகுமரி, குற்றாலம், ஏற்காடு, ஒகேனக்கல், கிருஷ்ணகிரி, ஓசூர், திருச்சி, தஞ்சாவூர், உதகமண்டலம், முதுமலை, திருச்செந்தூர், கோயம்புத்தூர் ஆகிய சுற்றுலாத் தலங்களில் தங்கும் விடுதிகள் நடத்தப்படுகின்றன.*

*வண்டலூர், சென்னைத் தீவுத்திடல், புதுடில்லி ஆகிய இடங்களில் உணவகங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.*

*மேற்கண்ட தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்களில் ஒப்பந்த அடிப்படையில் தேவைக்கேற்ப பணியாளர்களை நியமித்து நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாத் தலங்களில் உள்ள தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் ரூ.13.60 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.*

**56—**

**மானியம்**

**வினா எண் 2858—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கண் பார்வையற்ற ஊனமுற்ற குடும்பத்தினருக்கு வங்கி கடன் பெற்று, மானியத் திட்டத்தில் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி செல்வி இராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் தொடங்கிட அதிகபட்ச மானியம் ரூ.3,000/- உடன் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது மற்றும் மாற்றுத் திறனாளிகள் சுயதொழில்*



2012 பிப்ரவரி 3]

*தொடங்கிட அதிகபட்சம் பெட்டிக் கடை மானியம் ரூ.5,000/-உடன் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. மேலும்* National Handicapped Finance and Development Corporation-*ன்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண் நபராக இருப்பின் 4% வீதமும், பெண்ணாக இருப்பின் 3% வட்டியுடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.* THADCO *திட்டத்தின்கீழ்* SC/ST *இனத்தைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்குச் சுயதொழில் தொடங்கிட மாவட்ட ஆட்சியர் தன் விருப்புரிமை நிதியுதவியாக அதிகபட்சமாக ரூ.9,000/- வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. அதுபோக, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட தொழில் மையம் வாயிலாக மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் தொடங்கிட வங்கிக் கடன் அனுமதிக்கப்பட்டு வங்கிக் கடன் தொகையில்* 5% (Margin Money) *வழங்கிடும் திட்டம் நடைமுறையில் உள்ளது. தற்போது மானியத்துடன் குறைந்த வட்டியிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் புரிவதற்கான வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.*

*(ஆ) வினா எழவில்லை.*

**57—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 2860—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதியில் கண் பார்வையற்றவர்களுக்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி செல்வி இராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை தொகுதியில் கண் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் தற்போது அரசிடம் ஏதுமில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2012 பிப்ரவரி 3

**58—**

## மறுவாழ்வுத் திட்டம்

**வினா எண் 6251—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் படிகளில் அமர்ந்துள்ள பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி செல்வி இராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம், 1945 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மேற்படி சட்டத்தின்படி, பொது இடங்களில் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்கள், காவல் துறை மூலம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தண்டனைக் கைதியாக மற்றும் விசாரணைக் கைதியாக மேல்பாக்கம், அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் சேர்க்கப்படுகின்றார்கள். அங்கு அவர்களுக்கு தையல் பயிற்சி, மண்பாண்டப் பயிற்சி மற்றும் தச்சுப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. இதனால், பிச்சைக்காரர்கள் தண்டனைக் காலம் முடித்து வெளிவரும் சமயங்களில், இவ்வில்லத்தில் அளிக்கப்பட்ட பயிற்சியின்மூலம் பிச்சை எடுக்காமல் சுய தொழில் செய்து பிழைக்கும் வகையில் மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. அவ்வாறே, திருத்தணி கோயில் படிகளில் அமர்ந்து பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்களைக் கைது செய்து, சென்னை, மேல்பாக்கம், அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்திற்கு அனுப்பி மறுவாழ்வு பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*(ஆ) வினா எழவில்லை.*



2012 பிப்ரவரி 3]

**59—**

## உதவித் தொகை

**வினா எண் 7303—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 50% உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி செல்வி இராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) கடுமையாக 75 சதவிகிதத்திற்குமேல் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 11,269 மற்றும் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத 60 சதவிகிதத்திற்குமேல் உள்ள மனவளர்ச்சிக் குன்றியோர் 64,138 நபர்களுக்கும், 40% மேல் தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 1,000 நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு வருமானம் மற்றும் வயது வரம்பின்றி மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை மாநில அரசால் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இது தவிர, வருவாய்த் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை வழங்கும் இரு திட்டங்களிலும் 1,54,750-க்கு மேற்பட்ட நபர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுகிறது. 40 சதவிகிதத்திற்குமேல் ஊனத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர் மாற்றுத் திறனாளி என சான்றளிக்கப்பட்டு, மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது. தேசிய அடையாள அட்டையைக் கொண்டு கல்வி உதவித் தொகை, இலவசப் பேருந்துச் சலுகை, வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்பு மானியங்கள் மற்றும் அரசின் இதர வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பலனைப் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2012 பிப்ரவரி 3

**60—**

**நிவாரணம்**

**வினா எண் 3227—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, மாதர்பாக்கம், பாதிரிவேடு, மாநெல்லூர் கிராமத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மழைக் காலத்தில் நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, மாதர்பாக்கம், பாதிரிவேடு, மாநெல்லூர் கிராமங்களில் உள்ள 67 கைத்தறி நெசவாளர் குடும்பங்களில், 85 கைத்தறிகள் உள்ளன. மழைக்காலத்தில் பாதிப்பு ஏற்பட்டு அரசால் நிவாரணம் வழங்கும்போது, பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரண உதவி தக்க தருணத்தில் வழங்கப்படும்.*

*(ஆ) வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படும் சமயத்தில், கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அச்சமயத்தில் தகுந்த நிவாரண உதவி வழங்கப்படும்.*

**61—**

**சாதிச் சான்றிதழ்**

**வினா எண் 758—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற்றுள்ள "கொண்டாரெட்டி" இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?*



2012 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற்றுள்ள கொண்டாரெட்டி இன மக்களுக்கு அவர்களின் இருப்பிடம் மற்றும் உரிய ஆவணங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் வருவாய்க் கோட்டாட்சியரால் தல விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தகுதி அடிப்படையில் சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.*

**62—**

**சிறப்புத் திட்டங்கள்**

**வினா எண் 1290—திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தொல் பழங்குடி மக்களின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் சிறப்புத் திட்டங்களை வகுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*தொல் பழங்குடி இனத்தவர்களில் காட்டுநாயகன், குரும்பாஸ், தோடா, இருளர், கோட்டா, பணியன் இனத்தவர்கள் அழிவின் விளிம்பிலுள்ள (தொல்) பழங்குடிகளாக (*Particularly Vulnerable Tribal Groups) *கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களின் பாதுகாப்பிற்கும், மேம்பாட்டிற்கும் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி, திட்டங்களை வகுத்து, மைய அரசின் நிதியுதவிமூலம் செயல்படுத்தி வருகிறது. அம்மக்களை 'தொல் பழங்குடி' (அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்) என்ற நிலையிலிருந்து மீட்பதற்கு ஏதுவாக மைய அரசின் அறிவுரைக்கேற்ப பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (2007-2008 முதல் 2011-2012) முழுமைக்குமான "அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களின்*

பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (Conservation-cum-Development Plan for PTGs)" வகுக்கப்பட்டு, அதனடிப்படையில் வழங்கப்படும் மானிய உதவியைக் கொண்டு அம்மக்களுக்குப் பல்வேறு நலப் பணிகள், அதாவது வருவாய் ஈட்டும் திட்டங்களான ஆடு அலகுகள், விசை உழுவை, நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு மின் இணைப்பு, கோழிப் பண்ணை அமைத்தல், மீன்வலை பின்னுதல், செங்கல் சூளைகள் அமைத்தல், விசை மருந்து தெளிப்பான், தையல் இயந்திரங்கள் போன்றவை முழு மானியமாக வழங்குவதுடன், அவர்கள் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை வசதித் திட்டங்களும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென 11 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மைய அரசால் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.2,224.94 இலட்சம் ஆகும். இதில் 2011-2012 ஆம் ஆண்டில், மைய அரசால் ஒப்பளிப்பு செய்த ரூ.1,075.94 இலட்சமும் அடங்கும். இத்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பல்வேறு துறைகள்மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கும், மேற்குறிப்பிட்ட அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் வகுப்பதற்கு மைய அரசு இவ்வரசை அறிவுறுத்தியதன் அடிப்படையில், திட்டம் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**63—**

## பெயர் மாற்றம்

**வினா எண் 1719—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பள்ளர், குடும்பர், காலாடி, பண்ணாடி, தேவேந்திரகுலத்தான் எனும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டுவரும் ஒரே சமுதாய மக்களை தேவேந்திரகுல வேளாளர் எனும் ஒரே பெயரில் அழைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேற்காணும் வினா தொடர்பான பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.*

**64—**

## பயன்பாடு

**வினா எண் 2053—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெருந்துறை சிப்காட்டிலிருந்து ஆதி திராவிட மக்களுக்கு தொழிற் கூட்டுறவுச் சங்கம்மூலம் பல்வேறு தொழில் துவக்கி, பயன்பாட்டுக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், பெருந்துறையை அடுத்துள்ள ஈங்கூரில் அரசு ஆணை எண் 59, ஆதி (ம)பந துறை, நாள் 28-03-1995-ன்படி 150.35 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ.20.38 கோடி செலவில் 200 தொழிற் கூடங்கள் ஒவ்வொன்றும் 2000 சதுர அடியில் 1996 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கட்டி முடிக்கப்பட்டு இதுவரை ஒதுக்கீடு செய்யப்படாமல் 15 ஆண்டுகளாகப் பயன்படுத்த முடியாமல் உள்ளன. இத்தொழிற் கூடங்கள் ஆதி திராவிடர்களின் பொதுப் பயன்பாட்டிற்குத் கொண்டுவருவதற்குக் கருத்துரு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.*

**65—**

## நில உரிமை

**வினா எண் 2071—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 பிப்ரவரி 3

*(அ) மலைவாழ் பழங்குடி மக்கள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் நிலங்களுக்கு நில உரிமை ஆவணங்களை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மலைவாழ் பழங்குடி மக்கள் பாரம்பரியமாக அனுபவித்துவரும் நிலங்களுக்கு நில உரிமை ஆவணங்கள் வழங்கிட நாளது வரையில் 21,781 கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இக்கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டதில், 3,723 உரிமைப் பட்டா வழங்க அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. வன உரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தடையாணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது அத்தடையாணையை நீக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத் தடையாணை விலக்கிக் கொண்ட பிறகு, உரிமைப் பட்டாக்கள் வழங்கப்படும்.*

**66—**

## மலை வேளாளர்

**வினா எண் 5319—திரு. பி.எல். சுந்தரம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டத்திலுள்ள மலை வேளாளர் இன மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டத்திலுள்ள மலை வேளாளர் இன மக்கள் தற்போது எந்தப் பட்டியலில் உள்ளனர் என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை. மலை வேளாளர் இன மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் பொருள் தொடர்பான கோப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



2012 பிப்ரவரி 3]

**67—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 5567—திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்று வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதியில் உள்ள உண்மையான மலைவாழ் மக்கள், சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்டாட்சியருக்கு முறையாக தக்க ஆவணங்களுடன் விண்ணப்பித்து பழங்குடியினர் சாதிச் சான்று பெற்றுக்கொள்ளலாம்.*

**68—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 8833—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டூர் தொகுதியிலுள்ள பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு சாதிச் சான்றிதழ் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*மேட்டூர் தொகுதி, பழங்குடியின மாணவ/மாணவியர்கள்*

[2012 பிப்ரவரி 3

பழங்குடியினர் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பெற்ற வருவாய் கோட்டாட்சியருக்கு முறையான ஆவணங்களுடன் விண்ணப்பித்தால், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு ஆய்வு செய்த பின்னர் அவரால் சாதிச் சான்றிதழ் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**69—**

## பேருந்து வசதி

**வினா எண் 359—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, ஆலங்குடியிலிருந்து வாணக்கன்காடு, கரு. தெற்குத்தெரு, கரு. கீழத்தெரு மற்றும் நெடுவாசல் வழியாக இயக்கப்படும் தடம் எண் 13 பழைய பேருந்தை மாற்றி புதியதாக இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆலங்குடியிலிருந்து வாணக்கன்காடு, கரு. தெற்குத்தெரு, கரு, கீழத்தெரு மற்றும் நெடுவாசல் வழியாக தடம் எண் 13-இல் இயக்கப்படும் பழைய பேருந்திற்குப் பதிலாக தற்போது குறைந்த வயதுள்ள பேருந்து மாற்றப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் புதிய பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**70—**

## பேருந்து வசதி

**வினா எண் 2084—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு-திருப்பூர் மார்க்கத்தில் செல்லும் பேருந்துகளை விஜயமங்கலம், மேட்டுக்கடை மற்றும் சரளை ஆகிய ஊர்களில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?*



2012 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*ஈரோடு-திருப்பூர் மார்க்கத்தில் செல்லும் பேருந்துகள் விஜயமங்கலம், மேட்டுக்கடை மற்றும் சரளை ஆகிய ஊர்களில் நின்று செல்கின்றன. இது தணிக்கையாளர்கள்மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட ஊர்களில் நிற்காமல் செல்லும் பேருந்துகளின் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள்மீது துறைரீதியான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**71—**

## பேருந்து வசதி

**வினா எண் 2085—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு முதல் கோவை செல்லும் பேருந்துகளை விஜயமங்கலத்திற்குள் வந்து நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*ஈரோடு முதல் கோவை செல்லும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் விஜயமங்கலத்திற்குள் சென்று நின்று செல்லும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. இது தணிக்கையாளர்கள்மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், விஜயமங்கலத்தில் நிற்காமல் செல்லும் பேருந்துகளின் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள்மீது துறை ரீதியான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.*

[2012 *பிப்ரவரி* 3

**72—**

## பதவி உயர்வு

**வினா எண் 2883—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநர்களாகப் பணிபுரியும் (செலக்சன் கிரேடு) பட்டதாரி நடத்துநர்களுக்கு மதுரை, நெல்லை, போக்குவரத்துக் கழகங்களில் பயணச் சீட்டு ஆய்வாளராகப் பதவி உயர்வு வழங்கவும், இதில் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தேர்வு நிலை நடத்துநர்களாகப் பணிபுரியும் பட்டதாரி நடத்துநர்களில் பணிமூப்பில் உள்ளவர்களுக்குப் பயணச் சீட்டு ஆய்வாளர் பதவி உயர்வு 25 சதம் ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு கழக பொதுப் பணி விதிகளில் வழிவகை உள்ளது. இதனடிப்படையில் இவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நடத்துநர்கள், அவர்கள் பெற்ற பட்டப்படிப்பின் தகுதியான அடிப்படையில் முதுநிலைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு காலியிடங்களுக்கேற்ப, அவர்களின் முதுநிலை வரிசைப்படி பதவி உயர்வு வழங்கப்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களில் மாற்றுத் திறனாளிகளை ஓட்டுநர், நடத்துநர் பதவிக்கு பணி நியமனம் செய்யக் கூடாது என அரசு கடித எண் 25074/*SW-IV*/89-4, (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 1-6-90) மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால் ஓட்டுநர், நடத்துநர் பதவிக்கு மாற்றுத் திறனாளிகளை நியமிப்பது முற்றிலும் தவிர்க்கப்பட்டு வருகிறது.*

**73—**

## பேருந்து வசதி

**வினா எண் 2891—திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 *பிப்ரவரி* 3]

*(அ) ஓசூர்-பொன்னல்நத்தம் (வழி) சூளகிரி, சின்னார், சொரக்கால்பள்ளி, பஸ்தலப்பள்ளி வழியாக நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஓசூர்-பொன்னல்நத்தம் (வழி) சூளகிரி, சின்னார், சொரக்கால்பள்ளி, பஸ்தலப்பள்ளி தடத்தின் நீளம் 39.0 கி.மீ. ஆகும்.*

*இத்தடத்தில் ஓசூரிலிருந்து சூளகிரி, சின்னார் வழியாக கிருஷ்ணகிரிக்கு ஒவ்வொரு 2 நிமிட இடைவெளி நேரத்தில் பேருந்து வசதியுள்ளது.*

*இக்கழக நகர் தடம் எண் கே.36-ன் மூலம் கிருஷ்ணகிரியிலிருந்து சாமல்பள்ளம், ஒட்டையனுார் கிராஸ், பஸ்தலப்பள்ளி வழியாக காளிங்காவரம் வரை நாளொன்றுக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

**74—**

## பேருந்து வசதி

**வினா எண் 2900—திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேப்பனஹள்ளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து கெலமங்கலம், உத்தனப்பள்ளி வழியாக சூளகிரிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தேன்கனிக்கோட்டை-சூளகிரி (வழி) கெலமங்கலம், உத்தனப்பள்ளி வழித்தடத்தின் நீளம் 32.0 கி.மீ. ஆகும்.*

[2012 பிப்ரவரி 3

தேன்கனிக்கோட்டை-கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை-உத்தனப்பள்ளி (வழி) கெலமங்கலம், உத்தனப்பள்ளி—சூளகிரி வரை வழித்தடம் முழுவதும் பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், இதில் பயணிகளின் அடர்வு சுமார் 48 விழுக்காடே உள்ளதாலும், மேலும் கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**75—**

## பேருந்து வசதி

**வினா எண் 2901—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி முதல் உலகம் வரை–குருபரப்பள்ளி, மேலுமலை, சாமல்பள்ளம், கீழ்மொரசம்பட்டி மற்றும் அஞ்சாலம் வழியாக புதிய பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி–உலகம் (வழி) குருபரப்பள்ளி, மேலுமலை, சாமல்பள்ளம், கீழ்மொரசம்பட்டி, அஞ்சாலம் வழித்தடத்தின் நீளம் 31.5. கி.மீ. ஆகும்.

இத்தடத்தில் நகர் தடம் கே.49-ன் மூலம் கிருஷ்ணகிரியிலிருந்து குருபரப்பள்ளி, மேலுமலை, சாமல்பள்ளம், கும்மனூர் வழியாக கீழ்மொரசம்பட்டி வரை நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதிய பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2012 பிப்ரவரி 3]

**76—**

## பேருந்து வசதி

**வினா எண் 2902—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி முதல் வேப்பனஹள்ளி வரை மேல்பட்டி, பி.ஜி. புதூர், போத்திநாயனப்பள்ளி, மாதினாவூர் வழியாக புதியதாக பேருந்து இயக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலே குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் ஏற்கெனவே கிருஷ்ணகிரி–மாதினாவூர் (வழி) மேல்பட்டி, பி.ஜி. புதூர், போத்திநாயனப்பள்ளி வரை 9.8 கி.மீ. தூரத்திற்கு இக்கழக நகர் தடம் எண் கே.25–ன்மூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்படுகின்றன. கிருஷ்ணகிரி–வேப்பனஹள்ளி தடத்தில் நேரடி பேருந்து வசதியுள்ளது.

**77—**

## பேருந்து வசதி

**வினா எண் 2903—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி முதல் ஓசூர் வரை–வேப்பனஹள்ளி நெல்லூர், கொடிதிம்மனஅள்ளி, மடம் செம்பரசனபள்ளி மற்றும் சூளகிரி வழியாக புறநகர்ப் பேருந்து இயக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி—ஒசூர் (வழி) வேப்பனஹள்ளி, நெல்லூர், கொடிதிம்மனஅள்ளி, மடம் செம்பரசனஅள்ளி, சூளகிரி வழித்தடத்தின் நீளம் 81.3 கி.மீ. ஆகும்.*

*இத்தடத்தில் ஏற்கெனவே கிருஷ்ணகிரி முதல் நெல்லூர் வரையும், ஓசூர் முதல் கொடிதிம்மனஅள்ளி வரை பகுதி வாரியாக பேருந்து வசதியுள்ளது.*

*புறநகர்ப் பேருந்து வசதி கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் நெல்லூர் முதல் கொடிதிம்மனஅள்ளி வரை சாலை 5.0 கி.மீ. தூரத்திற்கும் மண் சாலையாகவும், குறுகலாகவும், பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாத நிலையுள்ளது. எனவே, தற்போது பேருந்து இயக்க இயலாது.*

**78—**

## பேருந்து வசதி

**வினா எண் 2904—திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி–ஒசூர் வழி வேப்பனஹள்ளி, நெல்லூர், கொடிதிம்மனஅள்ளி, சூளகிரி வழியாக புறநகர்ப் பேருந்து இயக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு.வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி—ஓசூர் (வழி) வேப்பனஹள்ளி, நெல்லூர், கொடிதிம்மனஅள்ளி, சூளகிரி வழித்தடத்தின் நீளம் 81.3 கி.மீ. ஆகும்.*



*இத்தடத்தில் ஏற்கெனவே கிருஷ்ணகிரி முதல் நெல்லூர் வரையும், ஒசூர் முதல் கொடிதிம்மனஅள்ளி வரையும் பகுதி வாரியாக பேருந்து வசதியுள்ளது.*

**79—**

## பேருந்து வசதி

**வினா எண் 4293—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இலவச பயண அட்டையில் பயணம் செய்யும் மாணவ, மாணவியர்களுக்கென தனியாக காலை மற்றும் மாலையில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களை செயற்பரப்பாகக் கொண்டு இயங்கிவரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் லிமிடெட் மூலம் 831 நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் அனைத்தும் மேற்படி நான்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளி மாணவ, மாணவியருக்கும் காலையிலும் மாலையிலும் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன.*

**80—**

## பேருந்து வசதி

**வினா எண் 4297—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோட்டிலிருந்து கோயம்புத்தூர் மற்றும் சேலத்திற்கு தொடர் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு–கோயம்புத்தூர் வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை மண்டலம்) மூலமாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சேலம்–ஈரோடு வழித்தடத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் 820 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**81—**

## நியமனம்

**வினா எண் 4343—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் அனைத்துக் கோட்டங்களிலும் பெண்களை ஓட்டுநர் மற்றும் நடத்துநர் பணிக்கு நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர மற்ற தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பெண் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் பணியில் எவருமில்லை. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் அதிகப்படியான பேருந்துகளை இரவு நேரங்களிலேயே தொலைதூரங்களுக்கு இயக்கி வருவதால் பெண்களை ஓட்டுநர் மற்றும் நடத்துநர் பணிக்கு நியமனம் செய்யும் திட்டம் இல்லை. மேலும், மற்ற போக்குவரத்துக் கழகங்களில் நியமிக்க பலவாறான இயற்கை நடைமுறை சிரமங்கள் (தாய்மையுற்ற காலங்களில்/மகப்பேறு காலங்களில்) உள்ளன. குறிப்பாக பேருந்து சென்றடையும் எல்லைகளில் பெண்களுக்கென தனிக் கழிப்பறை வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஓய்வறை வசதிகள் போன்றவற்றை உருவாக்கித் தருவதில் சிரமம் உள்ளது. அதைத்தவிர வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெண் ஓட்டுநர்/ நடத்துநர்களுக்கு மிகக் குறைவான அளவில் பெயர் பட்டியல் பரிந்துரைக்கப்படுவதுடன் அவர்கள் அப்பதவிக்கான உடற் தகுதிகளைப் பெற்றிருப்பதில்லை. மேலும், பேருந்து இயக்கங்கள் 24 மணி நேரம் தொடர்ந்து இருப்பதால் அதற்கேற்றாற் போல் அவர்களது பணி நேரத்தை ஒதுக்கீடு செய்வதிலும் சிரமம் உள்ளது. இதுபோன்ற காரணங்களுக்காக ஓட்டுநர்/நடத்துநர் பதவிக்குப் பெண்கள் நியமனம் செய்யப்படுவதில்லை.*





**82—**

## நிதி

**வினா எண் 4676—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விபத்தில் மரணமடையக்கூடியவர்களுக்கு தற்போது வழங்கும் நிதியை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சாலை விபத்தால் உயிரிழந்தவர் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிதியை உயர்த்தி வழங்க கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**83—**

## துறைமுகம்

**வினா எண் 1312—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் மீன்பிடித் துறைமுகம் கட்டும் பணியை முடித்து, மீன்பிடித் தொழிலைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

[2012 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு முதற்கட்ட பணியான மேற்கு அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி 530 மீட்டர் நீளத்திற்கு 430 மீட்டர் நீளம் வரையிலும், கிழக்கு அலைத் தடுப்புச் சுவர் 118 மீட்டர் நீளத்திற்கு 103 மீட்டர் நீளம் வரையிலும் பணி முடிவு பெற்றுள்ளது. அலை தடுப்புச் சுவரினை பலப்படுத்திட கோர்லாக் அச்சுகள் வார்க்கப்பட்டு, அவை அலைத் தடுப்புச் சுவரின் மீது அடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

*அலைத் தடுப்புச் சுவரின் நுழைவாயிலிலும், உட்புறத்திலும் மணல் அதிகமாக சேர்ந்து வருவதால், இவற்றைத் தவிர்ப்பதற்கு தொழில்நுட்ப வல்லுநர் குழு அளித்த பரிந்துரையின்படி மத்திய நீர் சக்தி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்மூலம் மாதிரி ஆய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாய்வு முடிவுற்ற பின்னரே, அலைத் தடுப்புச் சுவர் முழுமையாக முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டப் பணிகள் துவக்கப்பட்டு, மீன்பிடித் துறைமுகம் பயன்பாட்டிற்கு வரும்.*

**84—**

## தூண்டில் வளைவு

**வினா எண் 1313—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதி, குறும்பனை, கோடிமுனை, சைமன் காலனி, கொட்டில்பாடு கடற்கரைப் பகுதிகளில் தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*பொதுப் பணித் துறையால் 21-3-2001 அன்று வழங்கப்பட்ட நிருவாக ஒப்புதலின்படி குறும்பனை மற்றும் சைமன்காலனி மீனவ கிராமங்களில் ஏற்கெனவே நாகர்கோவில் கோட்டத்தினால் இரண்டு தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (குறும்பனை – ரூ. 400.00 இலட்சம்) (சைமன் காலனி – ரூ. 255.00 இலட்சம்).*



2012 பிப்ரவரி 3]

*மேலும், கடலரிப்புத் தடுப்புப் பணிகள் செய்திட மத்திய அரசின் 13-வது நிதிக் குழுவிலிருந்து நிதி பெறுவதற்கு நாகர்கோவில் கோட்டத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள கருத்துருவில் கோடிமுனையில் தூண்டில் வளைவை நீட்டித்து அமைக்க ரூ. 490.00 இலட்சமும், குறும்பனையில் தூண்டில் வளைவு அமைக்க ரூ. 428.00 இலட்சமும் சேர்க்கப்பட்டுள்ளது.*

*கொட்டில்பாடு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்திட மேற்படி கருத்துருவில் ரூ. 660.00 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.*

*இக்கருத்துருக்கள்மீது அரசு ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பொதுப் பணித் துறையால் பணிகள் துவக்கப்படும்.*

**85—**

## மீன் வளர்ப்பு

**வினா எண் 1892—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டத்திலுள்ள கண்மாய்கள், குளம், குட்டைகளில் நாட்டு மீன்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள 6 வருவாய் வட்டங்களிலுள்ள 3,818 எண்ணிக்கையிலான 75,593 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர்நிலைகளில், மானாமதுரை வருவாய் வட்டத்தில் மட்டும் 350 எண்ணிக்கையிலான 27,880 ஹெக்டேர் பரப்பளவுள்ள கீழ்க்காணும் நீர்நிலைகள் உள்ளன:*

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆறுகள் | 1 | 45 கி.மீ. நீளமுடையது |
| 2. | பொதுப் பணித் துறை நீர்ப்பாசனக் கண்மாய்கள் | 149 | 24,310 ஹெக்டேர் |
| 3. | சிறிய கிராமக் குளங்கள் | 200 | 3,064 ஹெக்டேர் |

மேலும், சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரை அரசுடைமையாக்கப்பட்ட நீர்நிலைகள் ஏதுமில்லை. நீர்வரத்து பெருகும் காலங்களில் அந்தந்தத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கண்மாய்கள், குளங்கள் ஆகியவற்றில் மீன்பாசிக் குத்தகைக்கு விடப்பட்டு விரைவில் வளரும் பெருங்கெண்டையின மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீன் வளர்ப்பு செய்யப்படுகிறது. இருப்பினும், சிவகங்கை மாவட்டத்தில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் 107 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு செய்து, 142 டன் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தினர்களுக்கு மீன் குஞ்சு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மீன் விதை வங்கி அமைக்கப்பட்டு முதல் 2 ஆண்டுகளுக்கு உள்ளீட்டுச் செலவினம், நுண்மீன் குஞ்சுகள் வாங்குதல், மீன்களுக்குத் தீவனம், மின்சாரச் செலவு மற்றும் பணியாளர் கூலியாக மொத்தம் ரூ.58,000/- ஆண்டுக்கு மானியமாக அளிக்கப்படுகிறது. மீன்விதைப் பண்ணைகளில் வளர்த்தெடுக்கப்படும் மீன்குஞ்சுகள், உபவடிநிலக் கோட்ட நீர்நிலைகளில் இருப்பு செய்யப்பட்டு மீன் வளம் பெருக்கப்படுகிறது.

மேற்சொன்னவாறு சிவகங்கை மாவட்டத்தில் மூன்று அலகுகள் அமைத்து, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உபவடிநிலக் கோட்டப் பகுதிகளில் விவசாயிகள் பயனடையும் வகையில் வண்ண மீன் வளர்ப்பு நிலையங்கள் 100 விழுக்காடு மானியத்தில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளுக்குச் சொந்தமான வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள 2500 ச.அ. நிலத்தில் அமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| முதலீட்டுச் செலவினம் | – | ரூ.1.50 இலட்சம் |
| உள்ளீட்டுச் செலவினம் | – | ரூ.0.50 இலட்சம் |
| மொத்தம் | – | ரூ.2.00 இலட்சம் |

இவ்வண்ண மீன் வளர்ப்பு அலகுகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 60,000 வண்ண மீன்கள் வளர்த்தெடுக்கப்பட்டு ரூ.60,000/- வருமானம் பெற இயலும்.

சிவகங்கை மாவட்டத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் ஐந்து அலங்கார மீன் வளர்ப்பு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மீன் வளர்ப்புப் பயனாளிகளுக்கு மீன் வளர்ப்புப் பயிற்சி



அளிக்கப்படுகிறது. மானாமதுரை அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் மேற்காணுமாறு மீன்வளர்ப்புப் பணிகளை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**86—**

## சுனாமி குடியிருப்புகள்

**வினா எண் 3234—திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு சுனாமி குடியிருப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு சுனாமி வீடுகள் மீன் துறைமூலம் கட்டித் தரப்படவில்லை.

**87—**

## இலவச அரிசி

**வினா எண் 1066—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலவச அரிசியினை நேரடியாக பயனாளிகள் இல்லங்களுக்கே சென்று வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்:**

ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகளின்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவரவர் விருப்பத்தின் அடிப்படையிலேயே அரிசி பெற தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும்,

வறுமைக் கோட்டிற்குமேல், வறுமைக் கோட்டிற்குக்கீழ் என்ற பாகுபாடின்றி தரமான அரிசி 1-6-2011 முதல் இலவசமாக அப்பகுதியின் அருகில் உள்ள நியாய விலைக் கடைகளின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நேரடியாக குடும்ப அட்டைதாரர்களின் இல்லங்களுக்குச் சென்று வழங்குவதற்கு அவற்றை பொட்டலங்களிட்டு தனியே வாகனங்களில் நகர்வு செய்து விநியோகிக்கப்பட வேண்டும். மேலும், நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள இல்லங்கள் நியாய விலைக் கடையிலிருந்து 15 கி.மீ. தூரம் வரை அமைந்துள்ளன. மேலும், பல்வேறு பகுதிகளில் குடும்பத்திலுள்ளவர்கள் வேலை நிமித்தம் காரணமாக பகல் (மற்றும்) மதிய நேரங்களில் வீட்டில் இருப்பது இல்லை. தூரத்தை கணக்கிட்டு பகுதிநேர கடைகள் திறக்கப்படுகின்றன. இல்லங்களுக்கு நேரடியாக வழங்குவது நிதிச் சுமையை அரசுக்கு ஏற்படுத்தும். எனவே, அத்தகைய திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

### கட்டடம்

**வினா எண் 7466—திருமதி ம. சக்தி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சியிலுள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் மானியத்தில் இயங்கும் கழகமாகும். எனவே, சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட தேவைப்படும் நிலம் சுமார் 33 1/3 சென்ட் (100 குழி) இலவசமாக, இனாம் சாசனமாக வாணிபக் கழகத்திற்கு கிடைக்கும்பட்சத்தில் அவ்விடத்தில் அரசு நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





(ஆ) கேள்வி எழவில்லை.

**89—**

### ஊதியம்

**வினா எண் 1623—திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் வேலைசெய்து வரும் 3,500 ஊழியர்களுக்கு ஊதியம் தொடர்ந்து கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், மத்திய அரசின் நிதி மற்றும் வழிகாட்டுதலின்படி மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் செயல்படும் திட்டமாகும். தமிழ்நாட்டில் தற்போது தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 16 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட இத்திட்டத்தின்கீழ் பணியாற்றும் கல்வி பயிற்றுநர்கள் (Educational Instructors) மற்றும் ஊழியர்கள் கௌரவப் பணியாளர்களாக (Honorary Post) மதிப்பூதியம் அடிப்படையில் (Honorarium) மாவட்ட ஆட்சியர்களால் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெறும் மதிப்பூதியத்துடன் மாதம் ரூ.500/- ஜூலை 2009 முதல் கூடுதல் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 1-4-2010 முதல் 31-3-2011 வரை மேற்படி பணியாளர்களுக்கு மாதம் ரூ.500/- வழங்க அரசாணை (நிலை) எண் 33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-2-2011-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டுக்கான மேற்படி பணியாளர்களுக்குக் கூடுதல் ஊதியம்

[2012 பிப்ரவரி 3

வழங்குவது குறித்து உரிய நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு மதிப்பூதியம் 1-4-2011 முதல் மத்திய அரசால் உயர்த்தப்பட்டுள்ளது:

| பதவியின் பெயர் | ஏற்கெனவே வழங்கப்பட்ட மதிப்பூதியம் | 1-4-2011 முதல் உயர்த்தப்பட்ட மதிப்பூதியம் |
|---|---|---|
| திட்ட இயக்குநர் | ரூ. 6000 | ரூ. 12000 |
| களப்பணியாளர் | ரூ. 4000 | ரூ. 8000 |
| கல்வி பயிற்றுநர் | ரூ. 1500 | ரூ. 4000 |
| எழுத்தர் மற்றும் கணக்கர் | ரூ. 1400 | ரூ. 3000 |
| உதவியாளர் | ரூ. 800 | ரூ. 2000 |
| சுருக்கெழுத்தர்/கணினி விவரப் பதிவாளர் (DEO) | ரூ. 2000 | ரூ. 3000 |
| ஓட்டுநர் | ரூ. 2000 | ரூ. 2750 |

மத்திய அரசிடமிருந்து 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதியின் முதல் தவணைத் தொகை இன்னமும் பெறப்படாமல் உள்ளது. அதனைப் பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்தொகை மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன், மேற்படி பணியாளர்களுக்கு நாளது தேதிவரை மதிப்பூதியம் வழங்கப்படும்.

**90—**

**பணியிடம்**

**வினா எண் 5816—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?



2012 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| பதவியின் பெயர் | ஒப்பளிக்கப் பட்ட பணியிடங்கள் | பணியிடங்கள் நிரப்பப் பட்டவை | காலியிடம் |
|---|---|---|---|
| உதவி இயக்குநர் | 1 | 1 | – |
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் | 1 | – | 1 |
| இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் | 6 | 6 | – |
| உதவியாளர் | 5 | – | 5 |
| இளநிலை உதவியாளர் | 5 | 3 | 2 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 1 | 1 | – |
| தட்டச்சர் | 2 | 2 | – |
| பதிவறை எழுத்தர் | 1 | 1 | – |
| அலுவலக உதவியாளர் | 3 | 3 | – |
| காவலர் | 1 | – | 1 |
| மொத்தம் | 26 | 17 | 9 |

மேற்படி காலிப் பணியிடங்களில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்/இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டியவை. மேலும், காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்குத் தகுதிவாய்ந்த

பணியாளர்கள் இல்லாததால் நிரப்பப்படவில்லை. பதவி உயர்வின் மூலம் விரைவில் காலியாக உள்ள அப்பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பணியிடம் சேலம் மாவட்டத்தில் காலியாக இருப்பினும், இம்மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகள் அனைத்தையும் தற்போது பணிபுரிந்து வரும் உதவி இயக்குநர், அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அனைத்து அலுவலர்கள் உதவியுடன் திறம்பட நிர்வகித்து வருகிறார்.

**91—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 4237—திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 5,000 மக்கள் வசிக்கும் இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை இயங்கி வருகின்றன. எனவே, 5,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**92—**

### நியமனம்

**வினா எண் 4363—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) புதுக்கோட்டை தொகுதி, கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக மருத்துவர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதி, கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். அரசு விதிமுறைகளின்படி, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குரிய 2 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 2 மருத்துவ அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**93—**

### புதுப்பித்தல்

**வினா எண் 4365—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி தாய் சேய் நல விடுதியை செயல்படுத்தவும் அதைப் புதுப்பிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கறம்பக்குடி வட்டாரம், வானாக்கன்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்கி வரும் வெட்டன்விடுதி துணை சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிய முடியாத நிலையில் உள்ளது.

[2012 பிப்ரவரி 3

மேற்படி வெட்டன்விடுதி துணை சுகாதார நிலையத்துக்கு முன்னுரிமை அடிப்படையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அந்தத் துணை சுகாதார நிலையத்தைப் பார்வையிட்டு புனரமைப்பதற்கு உட்பட்டதா என்ற விவரம் தெரிவிக்குமாறும், அவ்வாறெனில் செலவு மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்குமாறும் அறந்தாங்கி சுகாதாரப் பணிகள், துணை இயக்குநர் அவர்கள் 11-7-2011 அன்று அறந்தாங்கி பொதுப் பணித் துறை, கட்டடம், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். பொதுப் பணித் துறை அலுவலகம்மூலம் மதிப்பீடு பட்டியல் பெற்று முன்னுரிமை அடிப்படையில் பழுதுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**94—**

### கால்நடை மருத்துவக் கல்லூரி

**வினா எண் 1204—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை கால்நடைப் பண்ணையை கால்நடை மருத்துவக் கல்லூரியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை கால்நடை பண்ணையை கால்நடை மருத்துவக் கல்லூரியாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**95—**

### கால்நடை மருந்தகம்

**வினா எண் 1889—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2012 பிப்ரவரி 3]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வேதியரேந்தலில் கால்நடை மருந்தகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வேதியரேந்தல் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் மிகக் குறைவாக உள்ளதால் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**96—**

### அலுவலகம்

**வினா எண் 2329—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் கோட்ட அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, தென்காசி மற்றும் சேரன்மகாதேவி ஆகிய மூன்று கோட்டங்களில் உதவி இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகின்றது. எனவே வள்ளியூரில் உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2012 பிப்ரவரி 3

**97—**

## குடியிருப்பு

**வினா எண் 1991—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பத்மனாபபுரம் தொகுதி, குத்தியார் அரசு ரப்பர் கழகக் குடியிருப்பில் இருக்கும் பணி ஓய்வு பெற்ற இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தோட்டத் தொழிலாளர் சட்டம்* (Plantations Labour Act, 1951) *பிரிவு 15-ன்படி, தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியில் இருக்கும் காலத்தில் வீடு வழங்க வேண்டும் என்றும், அதன்படி அரசு ரப்பர் கழகக் குத்தியார் பகுதியில் பணியில் இருக்கும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் காலத்திற்கு வீடு ஒதுக்கப்பட்டது என்றும், அவர்கள் பணி ஓய்வு பெறும்போது ஒதுக்கப்பட்ட குடியிருப்பு நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அந்த நிர்வாக வேலையிலிருக்கும் பிற தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், மேலும் அரசு ரப்பர் கழகம், வனத் துறைக்குச் சொந்தமான காப்பு* (Reserved Forest) *வனப் பகுதிகளைக் குத்தகைக்கு எடுத்து ரப்பர்த் தோட்டத்தைப் பராமரித்து வருகிறது என்றும், நிர்வாக வீடுகள் காப்பு வனப் பகுதியில் உள்ளது என்றும் உள்ளதால், பணி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு நிரந்தர குடியிருப்பு வழங்க அரசு ரப்பர் கழகத்தில் விதி வழி இல்லை.*

*(ஆ) வினா எழாது.*



2012 பிப்ரவரி 3]

**98—**

## கல்விக் கடன்

**வினா எண் 4239—திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பிறமலைக்கள்ளர், சீர்மரபினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுக்குக் கல்லூரி கல்விக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*பிறமலைக்கள்ளர், சீர்மரபினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு வகையான கல்வி உதவித் தொகைகள் அரசால் வழங்கப்பட்டு வரும் நிலையில் இவர்களுக்குக் கல்விக் கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**99—**

## புதிய குடியிருப்புகள்

**வினா எண் 4410—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அகதிகள் முகாமில் புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*இலங்கையிலிருந்து இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு தமிழகம் வந்த இலங்கை அகதிகள் தங்குவதற்குக் குடியிருப்புகள்*

கட்டித்தரப்பட்டு தங்க வைக்கப்பட்டு வசித்து வருகின்றனர். அவர்களுக்குப் போதுமான அளவில் அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள 112 முகாம்களும் தேவைக்கேற்ப குடியிருப்புகள் கட்டித் தரப்படுவதுடன் அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டு வருகின்றன.

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 03-06-2011 ஆம் நாள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு அவர்கள் தமிழகத்திலேயே கௌரவமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும், இந்த முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை செய்து தரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2011-2012 நிதிநிலை அறிக்கையில் இலங்கைத் தமிழர் முகாம்களின் நிலையினை மேம்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்றும், முகாம்களில் உள்ள வீடுகளில் அடிப்படை வசதியை மேம்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள வீடுகளைப் பழுது பார்க்கவும் அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**100—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 4413—திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டியில் உள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமில் கழிவுநீர்க் கால்வாய், மின் விளக்குகள், குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசாணை எண் 1248, பொது (ம.வா.2)த் துறை, நாள் 16-12-2009-ன்படி மொத்தம் ரூ.56,93,200/-க்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டதில் மேற்படி கும்மிடிப்பூண்டி முகாமிற்கு மட்டும் கீழ்க்கண்டவாறு ரூ.49,05,100/- நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் கை பம்புகள் | 1,50,000/- |
| 2. | புதிய கழிப்பறைகள் கட்டுதல் | 30,02,400/- |
| 3. | புதிய கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல் | 13,30,000/- |
| 4. | கழிவுநீர்க் கால்வாய் பழுது நீக்கம் செய்தல் | 1,35,000/- |
| 5. | மின் கம்பங்கள் மற்றும் தெரு விளக்குகள் | 2,87,700/- |
| | மொத்தம் | 49,05,100/- |

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 03-06-2011 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு அவர்கள் தமிழகத்திலேயே கௌரவமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும், இந்த முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை செய்து தரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

[2012 பிப்ரவரி 3

மேலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2011-2012 நிதிநிலை அறிக்கையில் இலங்கைத் தமிழர் முகாம்களின் நிலையினை மேம்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்றும், முகாம்களில் உள்ள விடுதிகளில் அடிப்படை வசதியை மேம்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும் அறிவித்துள்ளார்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 1 முதல் 5 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், கழகக் குடும்பங்களின் ஒப்பற்ற தலைவி, தமிழர்களுக்கு எல்லாம் தலைசிறந்த தலைவியாக இருக்கிற எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் தொட்டுப் பணிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 2011-2012 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 1 முதல் 3 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.



2012 பிப்ரவரி 3]

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 பிப்ரவரி 3

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவ்ர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2012 பிப்ரவரி 3

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள்

## (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2012 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

முற்பகல் 10-50

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2012 பிப்ரவரி 3

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 13 (2)-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

## 4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (இ) கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2011-2012, (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*



2012 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the year 2011-2012."

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2011-2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 31-1-2012 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2011-2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

## நிறைவேற்றப்பெற்ற 2011–2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 5 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 2,21,04 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 32,00,26 | 7,79,00 | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 80,46,82 | 3 | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 14,81,34 | 2,00,01 | .. |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 13,47,04 | 1 | .. |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | .. | .. | 66,20,00 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்-பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 4,12,55 | 1,42,93 | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1,04,20 | .. | .. |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1,08,80 | .. | .. |
| 12 | கூட்டுறவு ( கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 110,03,27 | 5,27,35 | .. |



| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 2,50,01 | 1,96,81 | .. |
| 14 | எரிசக்தித் துறை | .. | 3,500,00,00 | 2,955,16,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1 | .. | 2,55,00 |
| 16 | நிதித் துறை | 8,85,40 | .. | 22,00,00 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | .. | .. | 69,00 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 21,16,72 | 2,00,02 | .. |
| 20 | உயர் கல்வித் துறை | 20,50,65 | 3 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 1 | 5,50,07 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 14,48,51 | 2 | .. |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,13,57 | 1 | .. |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5,28,69 | 3 | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 8,00,02 | 1 | .. |

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 40,00,02 | .. | 116,11,00 |
| 27 | தொழில் துறை | .. | .. | 35,00,00 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 4,04,86 | .. | .. |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 19,93 | 7,47,51 | .. |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | .. | 1,10,00 | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1 | .. | 3,00,00 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 1,17,14 | 3 | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 1 | 118,55,52 | 41,96,00 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 2,00,28 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 78 | 1 | .. |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,90,01 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 13,92,38 | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 2 | 20,20 | .. |



| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 1,86,01 | 2,57,58 | .. |
| 41 | வருவாய்த் துறை | 4,65,80 | 1 | .. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 9 | 4 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 1,26,60 | .. | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 16,34,55 | .. | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 51,64 | .. | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,26,19 | .. | .. |
| 47 | இந்துசமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 60,00,51 | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 86,50,00 | .. | 248,45,65 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,03,63 | .. | .. |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 10,26,89 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1,004,63,97 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 2,01,43 | .. | .. |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,00,02 | 9,49,46 | .. |
| | **பெருமொத்தம்** | 1,597,81,73 | 3,665,36,69 | 3,491,12,65 |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதம். இன்று ஏழு உறுப்பினர்கள் விவாதத்தில் பேசவுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது உரையினை சுருக்கமாக முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

*முற்பகல் 10-55*

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழகத்தின் நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களை வணங்குகின்றேன் அம்மா.

அம்மா, தாங்கள் தொட்ட இடம் துலங்க வரும்
தாய்க்குலமே வருக! (மேசையைத் தட்டும் ஒலி)

கண்பட்ட இடம் பூமலரும் பொன்மகளே வருக!
பொன்மகளே வருக!

கருணை என்ற தீபம் இரு கண்களில் ஏற்றிய தாயே!

காணும்போதும் நெஞ்சில் வந்து கோயில்கொண்ட தாயே!

பூமுகத் தாமரை மேலே அருள்புரிகின்ற தெய்வத் தாயே!

பூமுகத் தாமரை மேலே அருள்புரிகின்ற தெய்வத் தாயே!
(மேசையைத் தட்டும் ஒலி)

வானம் பார்த்த பூமிக்கெல்லாம் மாரி என்பது நீயே!

அம்மா, மாரி என்பது நீயே!

அம்மா, மாரி என்பது நீயே! (மேசையைத் தட்டும் ஒலி)

இதயம் உம்மைப் பாடும்; நல்ல எண்ணங்கள்
மாலைகள் போடும்!

இன்னல் வந்த நேரம்; உந்தன் புன்னகை ஆறுதல் கூறும்!
(மேசையைத் தட்டும் ஒலி)

வா என வேண்டிடும்போது எதிர்வருகின்ற செல்வம் நீயே!

ஏழையின் வாழ்வுக்கெல்லாம் தலைவியாகியத் தாயே!
(மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, புரட்சித் தலைவியே நீயே!

அம்மா, புரட்சித் தலைவியே தாயே!

[திரு. இரா. துரைக்கண்ணு] [2012 பிப்ரவரி 3

எங்களின் குலவிளக்கே, இதயதெய்வமே, கழகத்தின் காவல் தெய்வமே, தமிழக மக்களின் கண்கண்ட தெய்வமே, தமிழகத்தின் நிரந்தர முதல்வரே, புரட்சித் தலைவி அம்மா, தங்களை வணங்கி, தாங்கள் இருக்கும் திசைநோக்கித் தங்களின் பொன்மலர்ப் பாதம் வணங்குகின்றேன் அம்மா!

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த எங்களின் குல விளக்கு, தமிழகத்தின் ஒளி விளக்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களுக்குக் கோடானு கோடி நன்றி மலர்களை மீண்டும் காணிக்கையாக்குகின்றேன் அம்மா.

குழந்தைகள் பசி கண்டு பொறுக்காத தாயாக, ஏழைகளின் வறுமை போக்க ஓடி வரும் வள்ளலாக, தமிழகத்தை வளமாக்க தமிழ்த் திருநாட்டின் வளத்தையும், வாழ்வையும் பெருக்க வரும் காவிரி அன்னையாய் விளங்கி வரும் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, தங்களை வாழ்த்த வயதில்லை, தகுதியும் இல்லை, வணங்குகிறேன் அம்மா.

69 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுத் தந்த சமூக நீதி காத்த வீராங்கனை, (மேசையைத் தட்டும் ஒலி) கருவறையிலிருந்து கல்லறை வரை உதவக்கூடிய, வரலாறு படைக்கும் உழவர் பாதுகாப்புத் திட்டம், ஏழையெளிய மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் வழங்கும் திட்டம், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை விலையில்லா பாடப் புத்தகம் வழங்கும் திட்டம், விவசாயத்தில் பசுமைப் புரட்சித் திட்டம், வரலாற்றில் பொறிக்கக்கூடிய திருக்கோயில், தர்கா மற்றும் தேவாலயங்களில் அன்னதானத் திட்டம் போன்ற அற்புதமான திட்டங்களை அறிவித்ததோடு அல்லாமல், செயல்படுத்திக் காட்டிய சாதனைத் தலைவி, தங்கத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்று நாயகி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

எதிரிகளின் சிம்ம சொப்பனமாய் விளங்கும் சிங்கநிகர் தலைவி, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் நல்லாட்சியில் இடைநிற்றலைக் குறைக்க 10 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை ரூ.5,000/- வழங்க ஆணையிட்ட எங்கள் கல்விக் காவல் தெய்வமே!



2012 பிப்ரவரி 3] [திரு. இரா. துரைக்கண்ணு]

அங்கீகாரம் இல்லாமல் இருந்தவர்களுக்கெல்லாம் அங்கீகாரம் பெற்றுத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனாதையாய்த் திரிந்தவர்களுக்கு எல்லாம் அடைக்கலம் தந்து ஆளாக்கிவிட்டவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் பிடித்து வைத்தால் அது பிள்ளையார், வழித்தெறிந்தால் அது சாண உருண்டை. (மேசையைத் தட்டும் ஒலி) யாரை நம்பியும் அம்மா அவர்கள் இல்லை. அம்மாவை நம்பித்தான் இந்த நாடே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களைச் சுற்றி அரணாக ஒன்றரைக் கோடி உண்மை விசுவாசக் கழகத் தொண்டர்களும், தமிழக மக்களும் இருக்கின்றார்கள். ஏன், தெய்வமே துணையாக நிற்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் தன்னம்பிக்கை கொண்ட ஓர் இரும்பு மனிதர். ஆனால், கரும்பு இதயம் கொண்டவர்கள். அம்மா அவர்கள் இமயம் போன்றவர்கள். எந்தக் கொம்பனாலும் அசைத்துப் பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) மோதிப் பார்ப்பவர்கள் காணாமல் போய்விடுவார்கள். நன்றி கெட்டவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்றால் அம்மாதான். மற்றவர்கள் எல்லாம் சும்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு, கடத்தல், நில அபகரிப்பு, கட்டப் பஞ்சாயத்து இவற்றை குலத் தொழிலாகச் செய்து வந்த முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள், சாத்தான் வேதம் ஓதுவதுபோல அம்மா அரசைக் குறை கூறுகின்றார்கள்.

திடமான முடிவுகளைத் துணிச்சலுடன் மேற்கொண்ட இரும்பு மனிதர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திறமைமிக்க தன் தலைமையின்கீழ் எண்ணற்ற நலத் திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் துவக்கிச் செயல்படும் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், கடுமையான நிதி நெருக்கடியிலும் தேர்தல் வாக்குறுதிகளை மட்டுமல்லாமல், நாட்டு மக்களின் எண்ணங்களையும், தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள்.

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் அம்மா அவர்களின்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை, தெள்ளத்தெளிவாக வெளிப்படுகிறது.

நேர்மையாக, அமைதியாக நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தலைக் கண்டு, மாண்புமிகு அம்மா அவர்களைச் சமுதாயத்தின் அனைத்து தரப்பினரும், ஊடகங்களும் பாராட்டி உள்ளார்கள்.

சமூகப் பொருளாதார மேம்பாட்டில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகின்றார்கள். ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும் பொருளாதார மேம்பாட்டில் சம வாய்ப்பு பெறும் வகையில் நலத் திட்டங்களை அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். நாட்டிலேயே முதன்முறையாக விலையில்லா அரிசி வழங்கியவர் அம்மா அவர்கள்தான். ஏழைக் குடும்பங்களுக்கு கறவை மாடுகள், நான்கு வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்குதல், (மேசையைத் தட்டும் ஒலி) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியுடைய அனைத்துக் குடும்பங்களுக்கும் விலையில்லா mixie, grinder, fan வழங்குதல், மாணவர்களின் எதிர்காலம் கருதி மடிக்கணினி வழங்குதல், (மேசையைத் தட்டும் ஒலி) கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும் 8,000 கோடி ரூபாய் கூடுதல் நிதியை பல்வேறு புதிய நலத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லாட்சி செய்து வருகின்றார்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு முதல்வராகப் பொறுப்பேற்ற நாள்முதல் சமூக விரோத சக்திகளுக்கு எதிரான நடவடிக்கை எடுத்து சட்டம், ஒழுங்கை நிலை நாட்டியதன்மூலம் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் அமைதி திரும்பி உள்ளது.

உள்கட்டமைப்புக்கும், சமூகப் பாதுகாப்பிற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வரும் பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,85,000 கோடி ரூபாயை திட்டப் பணிகளுக்குச் செலவிடத் திட்டமிட்டுள்ளார்கள். இது பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட 85,000 கோடி ரூபாயைவிட இரண்டு மடங்கு அதிகமானதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர் இலக்கு தமிழ்நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் துரிதமாகக் கொண்டு செல்லும்.



தமிழ்மொழியை வைத்து பிழைப்பு நடத்தியவர்கள், செம்மொழி மாநாடு என்று குடும்ப மாநாடு நடத்தியவர்கள் தி.மு.க.-வினர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்க பெரு முயற்சி எடுத்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் மூத்த தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஒய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக, இரு மடங்காக உயர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்மீது தனக்குள்ள உண்மையான பற்றை வெளிப்படுத்தி உள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'தானே' புயலால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பயிர்கள், குடிசைகள், படகுகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகள் மிகப் பெருமளவில் சேதமடைந்ததையடுத்து நிவாரணப் பணிகளுக்காகவும், இழப்பீடுகளுக்காகவும் மின்சாரம், குடிநீர், சாலைகள் இவற்றைச் சீரமைக்கவும் 850 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி போர்க்கால நடவடிக்கை மேற்கொண்டு, அனைத்து அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள், மற்ற மாவட்ட அலுவலர்களை அனுப்பி நிவாரணப் பணிகளை மேற்கொண்டதன் விளைவாக 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இன்று இயல்பு நிலைமைக்கு வந்திருக்கின்றன என்றால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்வேக நடவடிக்கைதான் காரணம். 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்கள்கூட உறங்கி இருப்பார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கியிருக்க மாட்டார்கள்.

சுனாமி வந்தபோது அடுத்த நிமிடமே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தாயுள்ளத்தோடு நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. தலைவர் கருணாநிதியோ "உளியின் ஓசை"-க்கு வசனம் எழுதச் சென்றார்கள். அவர்தான் இப்போது நம் ஆட்சியில் சரியாக பணி நடக்கவில்லையென்று கூறுகிறார்கள்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்குப் பதிலாக அக்குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வீடுகள் அளிக்கும் வகையில் 1,000 கோடி ரூபாய் செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு இலட்சம் கான்கிரீட்

[திரு. இரா. துரைக்கண்ணு] [2012 பிப்ரவரி 3

வீடுகள் கட்டும் ஒரு மகத்தான திட்டம். இத்திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிறைவேற்றப்படவுள்ள ஒரு பெரும் சாதனைத் திட்டமாகும்.

வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்கும் வண்ணம் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான திட்டத்தைச் செயல்படுத்த உள்ளார்கள். மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக முன்கூட்டியே நீர் திறக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதால் (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தில் அபரிமிதமான குறுவை விளைச்சல் ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 75.5 இலட்சம் டன் என்ற அளவை விஞ்சி, இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி முதன்முறையாக 100 இலட்சம் டன் அளவினைத் தாண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உற்பத்தியில் சாதனையைச் செயல்படுத்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் நான்கு ஆடுகள் வழங்கும் அம்மாவின் அரசின் சிறப்புமிகு திட்டத்தால் சுமார் 1,12,000 குடும்பங்கள் 2011-2012 ஆம் ஆண்டில் பயன்பெறுவார்கள்.

மீன்வளத் துறையிலும் ஆழ்கடல் மீன் பிடிப்பை ஊக்குவிக்கவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் புதிய முயற்சிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

பாக் வளைகுடா பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்றும், அதற்கு கச்சத் தீவை திரும்பப் பெறுவதன் மூலமே தமிழக மீனவர்கள் இழந்த உரிமையை மீளப் பெற இயலும் என்னும் மாண்புமிகு அம்மா அவர்களின் தீர்க்கமான நடவடிக்கை, தமிழக மீனவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளமாகும்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற கூடுதல் கட்டமைப்பு வசதிகளைப் பள்ளிகளில் ஏற்படுத்தி உள்ளார்கள். ஆசிரியர் பணியிடப் பற்றாக்குறையைப் போக்கிட 33,681 ஆசிரியர் பணியிடங்களுக்கும், 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்களுக்கும், 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.



2012 பிப்ரவரி 3] [திரு. இரா. துரைக்கண்ணு]

முற்பகல் 11-05

அனைவருக்கும் உலகத் தரம் வாய்ந்த உயர் கல்வி கிடைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற முயற்சிகளை எடுத்து வருகின்றார்கள். குறுகிய காலத்தில் 11 கலை அறிவியல் கல்லூரிகளும், 34 அரசுக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகளும் அம்மா அவர்களின் சீரிய முயற்சியினால் தொடங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக விலையில்லா மடிக்கணினி வழங்கும் மகத்தான திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்கள்.

புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 1.34 கோடிக்கும் மேலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில், குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் காப்பீடு பெறும் வகையில், இவ்வாண்டு ஜனவரித் திங்கள் 11 ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் பயன்களை உள்ளடக்கிய இத்திட்டம் ஏழை மக்களுக்குத் தேவையான சிறப்பு சிகிச்சைகளைப் பெற பேருதவியாக இருக்கும்.

தன் பெயரில் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்து சொந்த இலாபம் அடைந்தவர்கள் மத்தியில், மக்களுக்காகப் பயன்பெறக்கூடிய வகையில் அம்மா அவர்களின் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பச்சிளம் குழந்தைகளுக்காக 41 புதிய அவசர சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி, ஏழைத் தாய்மார்களின் மகப்பேறு உதவித் தொகைக்கு இந்திய நாட்டிலேயே மிக அதிகமான அளவாக 12,000 ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1,80,000 ரூபாய் மதிப்பீட்டில் பசுமை வீடு கட்டும் திட்டத்தின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் சூரிய மின்சக்தி வசதி கொண்ட 60,000 பசுமை வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லையென்று சொல்லுவதில்லை. ஆனால், கேட்காமலேயே குறிப்பறிந்து, நிலைமை அறிந்து தாங்களாகவே வாரி வழங்கும் வள்ளலின் வாரிசே, கேட்டதைக் கொடுக்கும் கற்பக விருட்சமே, அஷ்டலட்சுமியே, (மேசையைத் தட்டும் ஒலி) அட்சய பாத்திரமே, அன்னபூரணியே, தாயே, தெய்வமே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே.

"நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற
இந்த நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற
இங்கு நல்லவங்க எல்லாரும் உங்க பின்னாலே
நீங்க நினைச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே
நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற

இந்த நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற." (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அம்மா, வான் உள்ளளவும், வையகம் உள்ளளவும், கார் உள்ளளவும், கடல் உள்ளளவும், உயிரினங்கள் உள்ளளவும், காற்று, ஒலி, ஒளி உள்ளளவும், எங்கள் அம்மா, தெய்வத் திருமகள், வீரத் தமிழ்மகள், சங்கத் தமிழ் வளர்த்து, உலகத் தமிழ் மாநாடு காணப் போகின்ற தமிழ் மகள், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ் நிலைத்திருக்கும். வாழ்த்த வயதில்லை, தகுதியும் இல்லை, வணங்குகிறேன் அம்மா.

இறைவா, தமிழகத்தைக் காப்பாற்ற, இந்தியத் திருநாட்டின் தலைமைப் பொறுப்பேற்று இந்தியாவை வளமாக்க, (மேசையைத் தட்டும் ஒலி) புகழ்மிக்க நாடாக்க வந்த வள்ளலின் வாரிசு எங்களின் குலவிளக்கு, தமிழகத்தின் ஒளிவிளக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 64-வது பிறந்த பொன்னாளில் நீடுழி வாழ வைப்பாயாக, நீடுழி வாழ வைப்பாயாக, நீடுழி வாழ வைப்பாயாக (மேசையைத் தட்டும் ஒலி) என இறைவனை வேண்டி, இருகரம் கூப்பி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதம் வணங்கி, பலகோடி நன்றிப் பூக்களை, அம்மா! தங்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி என் உரையை நிறைவு செய்கிறேன். இறைவா! வணங்குகிறேன் உன் பாதங்களில். அம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடு, நீண்ட ஆயுளைக் கொடு எனக் கேட்டு, அம்மா அவர்களை வணங்கி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

***Dr. NANCY ANN CYNTHIA FRANCIS:** Hon. Speaker Sir, beloved Amma, "The ultimate measure of a person is not when he or she stands in the moments of comfort, but when he or she stands at a time of challenge or controversy" says the late Martin Luther King.

Looking back at major calamities the Tsunami of 2004 and the Thane Cyclone, both of which were so meticulously managed by our beloved Amma, I wish to say that she reached out to the people restoring normalcy in their lives in an unbelievably short time without thinking of herself and her comfort. She worked at a pace greater than that of the Tsunami and the Thane cyclone.

We, the people of Tamilnadu, are really very fortunate to have you as our leader Amma. (Thumping of desks) Sir Issac Newton has been quoted "If I have seen farther than others, it is because I was standing on the shoulder of great giants." Amma not only stood on the shoulder of great giants, but she was also able to see as they saw. Just 8 months have gone by, after you assumed office as our leader, all the promises and schemes you put down on paper have already been implemented. For an ordinary person, this would have taken up a lifetime. Amma, but you have this people in your mind every minute of the day. Every time we met you, you had surprises for us. In December at the Christmas function, your generous heart reached out to the Christians, when you announced pilgrimage to Jerusalem. Thank you Amma. (Thumping of desks) This time, there is yet another surprise; the fitness centre for the lady Members. (Thumping of desks) Thank you Amma, once again. These are only tips of the iceberg of your generous heart. Because of paucity of time, I am unable to mention other things. Before we ask, your great heart reaches out and you give us generously. Thank you once again, Amma. May God bless you always and may you be filled with the abundant blessings of the Almighty. (Thumping of desks)

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2012 பிப்ரவரி 3

பல்வேறுதரப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும்வகையில் அமைந்துள்ள நல்ல அம்சங்களை முதலில் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் மனமார வரவேற்கிறேன். குறிப்பாக, ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூபாய் 1,000 கோடி மதிப்பில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படுமென்ற அறிவிப்பு; இப்பகுதியில் விளைநிலங்கள் ரியல் எஸ்டேட்டுகளாக மாறுவதைத் தடுக்கும்வகையில், முந்திரி உள்ளிட்ட மரங்களை நடுவதற்கும் அவற்றை ஓராண்டு பராமரிப்பதற்கும் அரசே செலவுகளை அளிக்கும் என்ற அறிவிப்பு; நகர்ப்புற வறுமையைப் போக்க முழுமையான திட்டம்; கணினி வன்பொருள் உற்பத்தியில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க நிபுணர் குழு அமைப்பு போன்ற பயனுள்ள அறிவிப்புகளை நான் மனமார வரவேற்கிறேன்.

முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள தமிழக அரசின் நிலைப்பாட்டை நான் வரவேற்கின்றேன். நாடாளுமன்ற நிலைக் குழுவின் பரிசீலனையில் உள்ள அணைகள் பாதுகாப்பு மசோதா 2010, 26(1) பிரிவில் எந்த மாநிலத்தில் அணைகள் உள்ளதோ அந்த மாநிலத்தின் கட்டுப்பாட்டில் அணைகள் வரும் என்று கூறப்பட்டுள்ளது. இது தமிழக நலனுக்கெதிராக உள்ளது. தமிழகம் பராமரிக்கும் முல்லைப் பெரியாறு அணை, பரம்பிக்குளம் அணை, சிறுவாணி அணை, தூணக்கடவு அணை, பெருவழிப்பள்ளம் அணை ஆகியவை கேரளாவில் உள்ளன. அணைகள் பாதுகாப்பு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அது தமிழக நலனுக்கெதிராக முடிந்துவிடும். தமிழகம் பராமரிக்கும் 5 அணைகளும் கேரள அரசின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுவிடும். இந்தப் பிரிவு தமிழகத்தின் நலனுக்கு எதிரானது என்பதை நன்கு உணர்ந்து, அணை எந்த மாநிலத்தின் எல்லையில் இருந்தபோதும் எந்த மாநிலத்தின் நலனுக்காக அது கட்டப்பட்டதோ, அந்த மாநில அரசின் பொறுப்பில்தான் அணையின் பராமரிப்பு இருக்க வேண்டும் என்று திருத்தம் செய்ய வேண்டுமென்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கிறது. மத்தியில் கூட்டணியில் உள்ள தமிழகக் கட்சிகளும் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் விழாவிலே பங்குகொள்ளும்போது நம்முடைய மாண்புமிகு



2012 பிப்ரவரி 3] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மை கிறிஸ்தவ மக்களின் அனைத்து பிரிவினருக்கும் ஜெருசலேம் செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே, டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி, சென்ற ஆண்டு, சென்னையிலே கிறிஸ்துமஸ் விழாவிலே, ஜெருசலேம் செல்வதற்கு முதற்கட்டமாக 500 பேருக்கு தமிழக அரசே ஏற்பாடுகளைச் செய்யும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்துள்ளதை சிறுபான்மையின மக்கள் சார்பாக இந்த நேரத்திலே வரவேற்று என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல, தேர்தல் பிரச்சார வாக்குறுதியில் அளித்ததுபோல தமிழகத்தில் நடைமுறையில் உள்ள பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் அளவை வரும் கல்வியாண்டு முதல் 5 விழுக்காடாக உயர்த்துவதற்கு சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோல, சென்ற தி.மு.க. அரசு கொண்டு வந்த திருமணப் பதிவுச் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு இருக்கும் சங்கடங்கள் நீக்கப்படும் எனத் தேர்தல் பிரச்சாரத்தில் அளித்த வாக்குறுதியும் விரைவில் நிறைவேற்றப்படுமென நம்புகிறேன். கச்சத் தீவை மீட்பதன் மூலமே தமிழக மீனவர்களின் இழந்த உரிமையை மீண்டும் பெற இயலும் என்று ஆளுநர் உரையில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்துள்ள கச்சத் தீவு வழக்கில் நல்ல தீர்ப்பு வரும் என்ற எதிர்பார்ப்பில் கூறுகிறேன். ஆண்டுதோறும் புனித அந்தோணியார் கோவிலிலே திருவிழா நடைபெறுகிறது. இந்த ஆண்டு மார்ச் 3 மற்றும் 4 ஆம் தேதிகளிலே அந்தத் திருவிழா நடைபெற உள்ளது. இந்தத் திருவிழாவிலே கலந்துகொள்வதற்காக அனைத்து மதங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் வருகிறார்கள். கடந்த காலங்களில் இந்த யாத்திரிகர்கள் மீன்பிடி படகுகளிலும், வள்ளங்களிலும்தான் லைஃப் ஜாக்கெட் இல்லாமல் பாதுகாப்பற்ற வகையில் பயணம் செய்வார்கள். இந்த ஆண்டு அந்தத் திருவிழாவிலே பங்குகொள்ள வரும் பயணிகளுக்காக ஒரு கப்பலை, அது Coast Guard-ஐயோ அல்லது தனியார் கப்பலையோ ஏற்பாடு செய்து அனைத்து பயணிகளும் பாதுகாப்பாகச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2012 பிப்ரவரி 3 முற்பகல் 11-15

கூடங்குளம் அணு மின் நிலையத்தை மூடக் கோரி அப்பகுதி மக்கள் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் தன்னிச்சையாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். சமீபகாலமாக தமிழக வரலாற்றில் தொய்வின்றி தொடர்ந்துவரும் போராட்டமாக அணு உலை எதிர்ப்புப் போராட்டம் அங்கு நடைபெற்று வருகிறது. அப்பகுதி மக்களின் உணர்வுகளையும், அவர்கள் வைத்துள்ள கோரிக்கையின் நியாயத்தையும் நன்கு உணர்ந்த தாயுள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு-பலமுறை, போராட்டம் நடத்தும் நமது மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று-வேண்டுகோள் விடுத்தார்கள். அதற்காக நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் நன்றியைச் சொல்கிறேன் என்றால், காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மராட்டிய மாநிலத்தில், ஜெய்தாப்பூரிலே இதுபோன்ற போராட்டம் நடைபெற்று வருகிறது. ஆனால், அங்குள்ள காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் பிரித்வராஜ் சவான் அந்தப் பகுதி மக்களின் உணர்வுகளை மதிக்கவில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மக்களின் உணர்வுகளை மதிப்பவர் என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கூடங்குளம் அணு உலை தொடர்பாக எடுத்துள்ள நிலைப்பாடு அமைந்துள்ளது.

கூடங்குளம் அணு மின் நிலையம் தொடங்கப்பட்டால் தமிழகத்தின் மின் தட்டுப்பாடே தீர்ந்துவிடும் என்ற போலியான தோற்றம் உருவாக்கப்பட்டு வருகிறது. ஆனால் அது உண்மை இல்லை. இதுகுறித்து நான் திரட்டிய சில விவரங்களை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். கூடங்குளம் அணு மின் நிலையத்தில் முதலாவது பிரிவில் (Installed capacity) நிறுவப்பட்ட கொள்ளளவு 1000 மெகா வாட்தான். ஆனால் உற்பத்தி சதவிகிதம் 70 விழுக்காடுதான். இது 700 மெகா வாட் மின்சாரத்தைத் தரும். அதில் 70 சதவிகிதம் Load factor என்பது அதிகபட்சமானது. கல்பாக்கத்தில் அந்த Load factor 50 சதவிகிதம் ஆகத்தான் இருக்கிறது. எனவே, இங்கு உற்பத்தி செய்யப்படும் 700 மெகா வாட்டில் கூடங்குளம் அணு உலைக்கும் அங்கு இருக்கக்கூடிய குடியிருப்புப் பகுதிகளுக்கும் சுமார் 35 மெகா வாட் சென்றுவிடும். இதற்குப் பிறகு பொது விநியோகத்திற்காகக் கிடைக்கக்கூடிய மின்சாரம் 665 மெகா வாட்தான், இதில் தமிழ்நாட்டின் பங்கு 45 சதவிகிதம், அதாவது 299.25 மெகா வாட் தான்; அதாவது 300 மெகா வாட். இதிலே Transmission loss, Distribution loss என்று 20 சதவிகிதம் போய்விட்டால், உண்மையிலேயே தமிழகத்திற்குக் கிடைக்கக்கூடிய மின் அளவு 240 மெகா வாட் ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மின் தேவை 16,285 மெகா வாட். கூடங்குளத்திலிருந்து கிடைக்கும் 300 மெகா வாட் மின்சாரம் இதில் 1.75 விழுக்காடு மட்டும்தான். இதற்காக நாம் சுற்றுச்சூழலை மாசுபடுத்தி நமது மக்களுக்குக் கொடுக்கப்போகும் விலை மிக அதிகமானது.



2012 பிப்ரவரி 3] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

மத்திய அரசு நியமனம் செய்த நிபுணர் குழுவின் அறிக்கையை நான் இணையதளத்தில் வாசித்துப் பார்த்தேன். கூடங்குளம் மக்களின் அச்சத்தினைப் போக்கும் வகையில் அந்த அறிக்கை அமையவில்லை. ரஷ்யாவிற்கும், இந்தியாவிற்கும் இந்தக் கூடங்குளம் அணு உலை சம்பந்தமாக liability ஒப்பந்தம் 2008-ல் போட்டிருக்கிறார்கள். அந்த நிபுணர் குழு, என்னென்ன இழப்பீடு கிடைக்கும் என்பதைக்கூட அதில் வெளிப்படுத்தவில்லை. கூடங்குளம் அணு உலையினுடைய கழிவை என்ன செய்யப்போகிறார்கள் என்பதற்கு மக்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய எந்தப் பதிலையும் அவர்கள் தரவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிபுணர் குழுவைச் சேர்ந்தவர்கள் விளம்பரங்களிலே நடிக்கிறார்கள். பொது மக்களிடமும், கல்லூரிகளிலேயும் பேசுகிறார்கள். ஆனால், அணு உலை எதிர்ப்பாளர்கள் நியமனம் செய்த நிபுணர் குழுவிடம் பேசுவதற்கு, எங்களிடம் mandate இல்லை; எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் அவர்களுடைய நிலைப்பாடு இருக்கிறது. தமிழகம் மீது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2,000 மெகா வாட் உற்பத்தியும், அதிலே 950 மெகா வாட் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்மால் பெரிதும் மதிக்கப்படுகின்ற முன்னாள் ஜனாதிபதி அவர்கள்கூட அதனை ஆய்வு செய்து மிகப் பாதுகாப்பாக இருக்கிறது என்ற செய்தியையும் கூறியிருக்கிறார்கள். பல்வேறு நிபுணர் குழுக்கள்

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்] [2012 பிப்ரவரி 3

அதனை ஆய்ந்து, அது நல்லமுறையில் உள்ளது; அதனால் எந்தவித பாதிப்பும் வராது என்று அறிக்கைகளெல்லாம் தந்திருக்கின்றபோது தவறான தகவலைக் கூறிக்கொண்டிருப்பது என்பது கண்டனத்திற்குரியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை நான் தரவில்லை. ** என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் குடியரசுத் தலைவர் பற்றிக் கூறிய கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

*முற்பகல் 11-20*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** காங்கிரஸ் கட்சியினர் தமிழர்கள் மீது கொலை வெறியில் கூடங்குளம் அணு உலையைத் திணிக்கின்றார்கள். ஆனால், மேற்கு வங்காளத்திலே அவர்களுடைய கூட்டணிக் கட்சியான திரிணாமூல் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு தெரிவித்தவுடன், அங்கே அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள் என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அணு உலை எதிர்ப்பாளர்களைக் கருத்தியலில் சந்திக்க இயலாமல், திருநெல்வேலியில் அவர்கள்மீது தாக்குதல் நடத்திய இந்து முன்னணியினரை காங்கிரஸ்காரர்கள் பாராட்டி இருப்பது வெட்கக்கேடானது. அணு உலை எதிர்ப்பாளர்களுக்கு மதச் சாயம் பூசும் வேலையை காங்கிரஸ் கைவிடவேண்டும். தூத்துக்குடி மறை மாவட்ட . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இப்போது விவரமாக விவாதம் நீடிக்குமானால், ஒரு மணிக்குள் அவை நடவடிக்கைகளை முடிக்க முடியாது. I am very sorry today. No, no. Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நேற்றே சொல்லிவிட்டேன், இன்றைக்கு ஒரு மணிக்குள் அவை நடவடிக்கைகளை முடிக்கவேண்டுமென்று. முனைவர் ஜவாஹிருல்லா, நன்றிசொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 3]

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், இந்து முன்னணியினருக்கு ஒத்துழைப்பாக நாங்கள் எதுவும் பேசவில்லை. காங்கிரஸ்காரர்கள் அதிலே கலந்துகொண்டார்கள் என்று சொன்னபோதுகூட, எங்கள் இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜா அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கும், அந்தத் தாக்குதலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதைச் செய்தித்தாள்கள் மூலமாக அனைவருக்கும் தெரிவித்திருக்கிறார்கள். எங்களுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது; யாரையும் நாங்கள் பாராட்டவில்லை என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** எனது இராமநாதபுரம் தொகுதியில் மூன்று நகராட்சிகள் உள்ளன. ஆனால், மூன்று நகராட்சிகளுக்கும் தனி ஆணையாளர்கள் இல்லை. தற்போது இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் கூடுதலாக கீழக்கரை நகராட்சியைக் கவனித்து வருகிறார். இராமேஸ்வரம் நகராட்சியில் நகராட்சிப் பொறியாளர் கூடுதலாக ஆணையாளர் பொறுப்பைக் கவனிக்கிறார். எனவே, மூன்று நகராட்சிகளுக்கும் தனி ஆணையாளர்களை நியமனம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாம்பன் பாலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பாலத்தின் மையப் பகுதியிலேயே வாகனங்களை நிறுத்தி கடலின் அழகிய காட்சிகளைப் பார்க்கின்றனர். இதன் காரணமாக விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காகப் பாம்பன் பாலம் அருகே நிலப் பகுதியில் நல்ல உயரத்தில் காட்சி கோபுரங்கள் (watch tower) ஏற்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் அதிலிருந்து கடலின் அழகிய காட்சிகளைக் காண ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாம்பன், தங்கச்சிமடம் பகுதியில் சேது சமுத்திரத் திட்டத்தின் தடை உத்தரவு காரணமாக மிக நீண்ட காலமாக அங்கிருக்கும் மக்களுக்குப் பட்டா கிடைப்பதில்லை. தடையுத்தரவை நீக்கி அப்பகுதியில் வாழும் மக்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா)* [2012 பிப்ரவரி 3

எனது தொகுதியில் முதியோர் ஓய்வூதியத்திற்கு புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு ஓய்வூதிய உத்தரவு வழங்க முடியாத நிலை உள்ளது. இதற்குக் காரணம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கான ஒதுக்கீடு முடிவடைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். எனவே, எங்கள் மாவட்டத்திற்கு முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

** சொல்லி இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் ** பற்றி சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மேதகு ஆளுநர் உரையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக உங்களுக்கு நன்றியைச் சொல்வதோடு, உங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எனக்குப் பேச அனுமதி கொடுக்கும்போது நேரம் குறைவாகக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், என்னுடைய நிலைமை என்ன, மொழி என்ன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கிருக்கின்ற அமைச்சர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் தெரியும். நான் முதலில் என்னுடைய தொகுதியிலிருந்து ஆரம்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள், தொகுதி சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையையும் எழுதிக் கொடுத்தால், அது அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்படும் என்று. அதை நீங்கள் எழுதிக் கொடுத்துவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2012 பிப்ரவரி 3]

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, மைனாரிட்டி மொழிகளுடைய நிலைமை மோசமாக இருக்கிறது என்பதை முதலில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கடந்த ஆட்சிக் காலத்திலே, கட்டாயத் தமிழ் கொண்டுவந்ததால்—நாங்கள் தமிழ் எதிர்ப்பாளர்கள் அல்ல—மைனாரிட்டி மொழிகளில் படிக்கின்ற எங்கள் குழந்தைகள், கிட்டத்தட்ட உருது, கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் படிக்கின்ற ஒரு இலட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அவையிலே நான் பலமுறை எடுத்துச் சொல்லியும்கூட அதற்கு இன்று வரை ஒரு தெளிவான, எந்தவிதமான பதிலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அதேபோன்று, இந்த அவையிலே ஒரு காலக்கட்டத்திலே என்னை அறியாமல் excitement-இல் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். அன்றையதினம் அன்றைக்கு இருந்த அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேருமே, "நீங்கள் வருத்தப்படவேண்டாம். ஒரு memorandum மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுங்கள். நாங்கள் செய்கின்றோம்" என்று உறுதிகொடுத்தார்கள். அந்த உறுதி கொடுக்கப்பட்டிருந்தாலும், அதற்கான ஜி.ஓ. இதுவரை கிடைக்கவில்லை.

அதேபோல, நம்முடைய, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது மொழிகளுடைய சேனல்கள் ஒட்டுமொத்தமாக எங்களுக்குக் கிடைக்கவில்லை. டி.வி.யிலே அந்த மொழி சேனல்கள் பார்க்கின்ற வாய்ப்பு குறைவாக இருக்கிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதை மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற்கு எடுத்துச் சென்ற பிறகு, அவர் கூப்பிட்டு அங்கிருக்கின்ற அதிகாரிகளுக்கு அறிவுறுத்திச் சொன்ன பிறகு, சில சேனல்கள் மட்டும் வந்துகொண்டிருக்கின்றன.

ஆனால், ஒட்டுமொத்த தமிழ்நாட்டிலே நாங்கள் விசாரித்த அளவிற்கு திருவள்ளூர் மாவட்டம் ஆகட்டும், வேலூர் மாவட்டம் ஆகட்டும், கன்னியாகுமரி மாவட்டம் ஆகட்டும், பார்டரில் இருக்கின்ற மொழிகள், அதிலும் குறிப்பாக தெலுங்கு சேனல்கள் வரவில்லை. இதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்)*

[2012 பிப்ரவரி 3

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, கேட்க விரும்புவது, *(தெலுங்கில் பேசினார்). (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *(தெலுங்கில் பேசினார்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, *(தெலுங்கில் பேசினார்). (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *(தெலுங்கில் பேசினார்).* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அருமையான வாய்ப்பு. இந்த வாய்ப்பை இன்றைக்கு நான் பயன்படுத்துவதற்கு ஆசைப்படுகிறேன். தயவுசெய்து குறுக்கீடு செய்யாதீர்கள். என் நிலைமையைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எப்போதுமே குறுக்கிட்டது கிடையாது. நான் time maintain செய்பவன். *(குறுக்கீடு)* One minute please, sit down. *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிறுபான்மை மொழியைப் படிக்கின்ற மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அவர் பேசி முடித்த பிறகு அதைச் சொல்லலாம் என்றிருந்தேன். 2006 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் 'Tamil Learning Compulsory Act.'



2012 பிப்ரவரி 3] *[திரு. சி.வி. சண்முகம்]*

அந்தச் சட்டத்தின்படி, ஒவ்வோர் ஆண்டும் அந்த மாணவர்கள் கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும். அதன்படி பார்த்தால், இந்த ஆண்டு, 2011 ஆம் ஆண்டு 6 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதுவரைக்கும் சிறுபான்மை மொழியைப் படிக்கின்ற மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. பொதுத் தேர்வு எழுதுகின்ற மாணவர்கள், பத்தாம் வகுப்புக்கு வருகின்றபோதுதான் அவர்களுக்கு அந்தப் பாதிப்பு.

*முற்பகல் 11-30*

ஆகவே, அதற்குப் பிறகு சிறுபான்மையின வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் கொடுத்த கோரிக்கையின் அடிப்படையிலே, அதற்கு முன்பு பகுதி 3-லே தமிழ் கண்டிப்பாக படிக்கப்பட வேண்டும். பகுதி 4-லே சிறுபான்மையினர் மாணவர்களோ, தெலுங்கு மாணவர்களோ, மலையாளம் படித்த மாணவர்களோ இருந்தால் அவர்கள் தமிழை விருப்பப் பாடமாகப் படித்துக்கொள்ளலாம். அதற்குத் தேர்வு மதிப்பெண் இல்லை என்று முதலிலே போடப்பட்டது. உங்களுடைய கோரிக்கை பெறப்பட்ட பிறகு, அதன் அடிப்படையிலே எங்கள் மாணவர்களுக்கு விருப்பப் பாடமாகத் தேர்வு வைக்கவில்லையென்றால், அவர்கள் அதைப் படிக்கமாட்டார்கள்; ஆகவே, அவர்களுக்குக் கண்டிப்பாக அதற்கும் தேர்வு வைக்கப்பட வேண்டும்; தேர்ச்சி மதிப்பெண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலே அவர்களுக்கும் கண்டிப்பாகத் தேர்வு வைக்கப்பட்டு, தேர்வு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைத் தேர்ச்சிக்குக் கட்டாயமாக்கவில்லை. ஆனால், அதற்கு பகுதி 4-லே மார்க் வைக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, தற்போது அந்த மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு வருகிறது. இனிமேல்தான் படிக்க வேண்டும். இப்போது 6 ஆம் வகுப்பில் தமிழ் படிக்கிறார்கள். அடுத்த வருடம் 7 ஆம் வகுப்பில் தமிழ் படிக்கப் போகிறார்கள். இவர்களுடைய கோரிக்கைதான். உங்களுடைய மாணவர்களுக்குத்தான் கூடுதலாக ஒரு பாடச் சுமையை ஏற்றிக் கொடுக்கிறீர்கள்.

Tamil Learning Compulsory Act 2006-ன்படி அவர்கள் தமிழ் படிக்க வேண்டும். இதனால் சிறுபான்மையினர் என்று சொல்லப்படுகின்ற

[திரு. சி.வி. சண்முகம்] [2012 பிப்ரவரி 3

தெலுங்கு மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால், பக்கத்தில் இருக்கின்ற ஆந்திரா மாநிலத்திலே கண்டிப்பாக அனைவரும் தெலுங்கு படிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. கர்நாடகாவில் கன்னடம் படிக்க வேண்டுமென்று இருக்கிறது, இதேபோல் கேரளாவிலும் இருக்கிறது. கண்டிப்பாக 6 ஆம் வகுப்பு வரை தெலுங்கு படிக்க வேண்டும் என்ற சட்டம் ஆந்திராவிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கம் கொடுத்தார்கள். இதிலே கோரிக்கை என்னவென்றால், 2006-ல் போடப்பட்ட அந்தக் கட்டாயத் தமிழ்க் கல்விச் சட்டம் பற்றி அரசாங்கத்திற்கு ஒரு தவறான தகவலை அதிகாரிகள் தந்து கொண்டிருக்கலாம். நான் practical ஆகப் பேசிக் கொண்டிருக்கிறேன். 2016-ல் குழந்தைகளுடைய நிலைமை மிகவும் சிரமமாக இருக்கும், அதுதான் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது. அதாவது 2006-லிருந்து இதுவரை வெறும் text book மட்டும்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எந்த ஆசிரியர்களும் அங்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால், text book மட்டும்தான் அங்கு இருக்கிறது. அங்கு படிக்கிற மாணவர்கள் இன்னும் தெலுங்கிலேதான் படித்துக் கொண்டிருக்கிறார்கள், உருது படித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தமிழுக்கு விரோதிகள் அல்ல; தமிழ் கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஏற்கெனவே கடந்த 2001-2006 ஆட்சிக் காலத்திலே அறிவியல் தமிழ் என்று நீங்கள் introduce பண்ணிக் கொடுத்தீர்கள். தமிழ் கற்பதற்கு ஒரு வாய்ப்பாகக் கொடுத்து, எங்கள் மொழிகளில் first language Telegu, first language Urdu, first language Kannada, first language Malayalam கற்கலாம் என்று போட்டிருக்கிறது. அதனால், கடந்த ஆட்சிக் காலத்தில் நீங்கள் எப்படிக் கடைப்பிடித்தீர்களோ, அதேமாதிரி கொண்டு வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இப்போதுகூட நீங்கள் ஒரு குழு அமைத்து, deep ஆக போய்ப் பார்த்தீர்கள் என்றால், நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன், என்னுடைய தொகுதியிலே வெங்கடேசபுரம் என்ற பகுதியிலே இருக்கிற உயர்நிலைப் பள்ளியிலே மட்டுமல்ல; எந்த school-களிலுமே ஒரேயொரு



2012 பிப்ரவரி 3] [திரு. கே. கோபிநாத்]

ஆசிரியர்கூட இல்லை, அதேபோல, ஒரேயொரு Headmaster கூட இல்லை. அதேபோல, எனது தொகுதிக்குப் பக்கத்திலுள்ள தளி தொகுதியிலே ஜவளகிரி என்ற ஊரிலே ஒரு Headmaster கூட இல்லை. Headmaster retire ஆனவர். அவரை retain பண்ணி பள்ளி நடந்து கொண்டிருக்கிறது, இது உண்மையான நிகழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த 2006 ஆம் ஆண்டில் போடப்பட்ட இந்தக் கட்டாயத் தமிழ்க் கல்விச் சட்டத்தின்படி, பாடப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டன, ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை, பாடம் கற்பிக்கப்படவில்லை என்று சொல்கின்றார்கள். அதற்கு யார் காரணம்? 5 ஆண்டுக் காலம் அந்தச் சட்டத்தைப் போட்டுவிட்டார்கள். பாடப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டார்கள், ஆசிரியர்களை நியமிக்காமல் தமிழ், தமிழ் என்று சொல்லிவிட்டு, ஊரை ஏமாற்றுவதற்காக அந்தச் சட்டத்தைப் போட்டுவிட்டார்கள். தமிழ் படிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகப் போடப்பட்டது—தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை பேரும் தமிழ் கண்டிப்பாகப் படிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகப் போடப்பட்டது அந்தச் சட்டம். அதை நிறைவேற்றாமல், ஊரை ஏமாற்றுவதற்காகச் சட்டத்தைப் போட்டுவிட்டுச் சென்றவர்கள் அவர்கள். நீங்கள் அவர்களைக் கேட்டிருக்க வேண்டும். அவர்களுடைய ஆட்சியிலே 5 ஆண்டுக் காலம் கூட்டணி வைத்துக்கொண்டு அனுபவித்துவிட்டு, அவர்களைக் கேட்கவில்லை. கடைசி நேரத்தில் ஆட்சியை விட்டுப் போகின்ற போக்கிலே, 28-2-2011 ஆம் ஆண்டு கடைசி நாள் தேர்தல் அறிவிப்புக்கு முன்பு ஓர் அரசாணையைப் போட்டார்கள். அதுதான் அந்தப் பகுதி 4-லே, சிறுபான்மையின மாணவர்கள் தேர்வு எழுதலாம், அவர்களுக்கு மார்க் கொடுக்கலாம் என்று ஓர் அரசாணையைப் போட்டுவிட்டு, அதை அமல்படுத்தாமல் சென்றுவிட்டார்கள். இப்போது அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அம்மாவிடம் அந்தக் கோரிக்கை மனு வந்தபிறகு அந்த சிறுபான்மையின மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது, அதற்கு என்னென்னவெல்லாம் நடவடிக்கை எடுக்கலாம் என்று இப்போது அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்குப் பரிந்துரை செய்து கல்வித் துறை மூலமாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், உண்மையிலேயே நீங்கள்

சொன்ன சட்டம் போடப்பட்ட பிறகு, இன்றுவரைக்கும் 1 ஆம் வகுப்பு படித்த மாணவன், 6 ஆம் வகுப்பு வரைக்கும் தமிழ் படித்திருக்க வேண்டும். 10 ஆம் வகுப்பு போகிற வரைக்கும் அவன் படித்திருப்பான். ஆனால் தவறு எங்களுடைய ஆட்சியில் அல்ல. கடந்த ஆட்சியிலே தமிழ் என்ற பெயரைச் சொல்லி வியாபாரம் செய்தது அவர்களுடைய தவறு.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-ல் அவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். அவர்களுடன் நாங்கள் கூட்டணி வைத்திருந்தோம் என்பது உண்மைதான். அப்போது, நீங்களும் இதே அவையில் இருந்தீர்கள். நான் பேசும்போதெல்லாம் இதை வலியுறுத்தியிருக்கிறேன். நீங்கள் அதை மறுக்க முடியாது. நாங்கள் அவர்களுடன் கூட்டணி வைத்திருந்தாலும், அதுபற்றி கேட்காமல் இல்லை. இந்த மொழிப் பிரச்சினை வரும்போது நாங்கள் கண்டிப்பாகக் கேட்டிருக்கிறோம். நீங்கள் சொல்லியது மாதிரி படித்திருக்க வேண்டுமென்பது வெறும் யூகம். படிக்கவில்லை, அதுதான் யதார்த்தம். இன்றுவரை படிக்கவில்லை, இந்த நிமிடம் வரை படிக்கவில்லை. ஆனால் 2016-ல் படிக்கிற குழந்தைகளுடைய நிலைமை என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் படிக்கின்ற மாணவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய தாய் மொழி எதுவாக இருந்தாலும், கட்டாயமாக தமிழ் படித்தாக வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகத்தில் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவியர், கன்னடம் படிக்காமல் அந்தப் பள்ளிகளில் அவர்கள் தொடர்ந்து படிக்க முடியாது. அதைப்போலவே, ஆந்திரப் பிரதேசத்திலும் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள் யாராக இருந்தாலும், அங்கே கட்டாயமாக தெலுங்குப் பாடத்தைப் படித்தாக வேண்டும். ஆகவே, தமிழ்நாட்டில் படிக்கின்ற குழந்தைகள் கட்டாயமாகத் தமிழ் படித்தாக வேண்டும் என்பதில் எந்தத் தவறும் இல்லை. அதில் எந்த மாற்றமும் இருக்கப்போவதும்





இல்லை. ஆனால், குறிப்பிட்ட பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லை, Headmasters இல்லை என்ற குறைபாடுகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். அந்தக் குறைகளைக் களைவதற்கு, காலி இடங்களை நிரப்புவதற்கு, இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. கோபிநாத்:** (தெலுங்கில் பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கோபிநாத், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தை தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அடுத்த subject—க்குப் போங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** (தெலுங்கில் பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. 15 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டது, உட்காருங்கள். இன்று ஒரு மணிக்குள் அவையை முடிக்க வேண்டும். (குறுக்கீடு) No, no. One second-ல் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்திற்கான மெகா வாட் மிகவும் குறைவாக இருக்கிறது; அதனால் எந்தவிதமான பலனும் நமக்கு இல்லை; அங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகள் அத்தனைக்கும் காரணம் காங்கிரஸ் கட்சியும், அங்கே இருக்கிற பி.ஜே.பி-கட்சியும்தான் என்று ஒரு தவறான தகவலைப் பதிவு செய்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணுமின் நிலையம் என்பது இன்று நேற்று வந்தது அல்ல. அது ரஷ்யாவின் உதவியோடு கிட்டத்தட்ட 14,000 கோடி ரூபாயில் 12 வருடங்களாகக் கட்டப்பட்ட ஒரு Nuclear Power Plant. அதனால் அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை. மாண்புமிகு திரு. அப்துல் கலாம் அவர்கள் சொல்லியும்கூட, அங்கே இருக்கிற சில சமூக விரோதிகள், இன்னும் சொல்லப்போனால், எனக்கு இருக்கிற அச்சம் என்னவென்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கோபிநாத், உட்காருங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** அங்கேயிருக்கிற சில சமூக விரோதிகள் இன்னும் சொல்லப்போனால், Out of country-ல் இருப்பவர்களுடைய

[திரு. கே. கோபிநாத்] [2012 பிப்ரவரி 3

*தூண்டுதல் இருப்பதாக எங்களுக்கு அச்சம் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசாங்கத்தை அணுகி அதற்கான உண்மையான நிலைமையை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் நாம் இங்கே* free fan *கொடுக்கிறோம்;* free grinder *கொடுக்கிறோம்;* free mixie *கொடுக்கிறோம். இவற்றுக்காக நமக்கு மின்சாரத் தேவை இருக்கிறது. தயவுசெய்து உடனடியாக நமக்கு அந்த மின்சாரம் வேண்டுமென்றால் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு* second *தானே கேட்டீர்கள்?*

*முற்பகல் 11-40*

**திரு. கே. கோபிநாத்:** *(கன்னடத்தில் பேசினார்)*

Hon'ble Speaker Sir,

I, on behalf of the people of my constituency, the leaders of my party in the state as well as in the National level, offer my salutations and I take pleasure in participating in the motion of thanking the Honourable Governor of Tamilnadu for his addressing the Legislature.

The Congress party whole heartedly extends its co-operation in implementing the policies of the Government as enunciated by respectful Governor in his address. The whole state will be ever obliged to the Hon'ble Chief Minister and keep her in high place of history for her magnanimity in extending the benefits to the poor in implementing the freebies without any discrimination. Similarly, the effective changes being brought out in the power supply in the state are also to be welcomed by all. Inspite of her best efforts, the supply is not being improved and the farming community are very much disappointed as the supply with low voltage is being crippled resulting into set back in farm activities. The farmers of Hosur Taluk are depending upon borewells and the poor supply of power resulted into dwindling in farm production. I, therefore pray the Hon'ble Chief Minister to take necessary action to improve the position of power supply in the state by augmenting the resources like Nuclear Power Project and by promoting solar industry.



2012 பிப்ரவரி 3] [திரு. கே. கோபிநாத்]

In fact, there are lakhs of farmers waiting across the state to get power supply under self financing scheme which the Electricity Board could not provide power supply since many years on account of paucity of power storage and development in power generation. I request the Hon'ble Chief Minister to attach special priority in providing power supply to the farmers under self financing scheme without any prejudice to the priority scheme now in force. The floriculturists in the state are unable to clear the huge power bills under commercial tariff. The floriculturists could be saved by allowing them to use power supply meant for agriculture purpose.

The free schemes announced by our respected Chief Minister are properly not reaching the poor and needy since the beneficiaries list prepared as "Below Poverty Line" scale was a faulty one which was prepared long ago by few officials in the Taluk level according to their whims and fancies. Hence, I request the Hon'ble Chief Minister to order preparation of BPL list afresh in order to facilitate impartial distribution of freebies in the State.

I am aware of the fact that the Government of India is putforthing all the efforts to streamline the public distribution system in the country. The Government of Tamilnadu have not failed in improving the system. In spite of all the efforts by the Government of India and the State Government the plight of the consumers in the long queues in the rural areas looks miserable. Hence, I suggest to the Hon'ble Chief Minister of Tamilnadu to open as many as more ration shops to expedite the distribution of essential commodities in the state.

The action taken by the Hon'ble Chief Minister of Tamilnadu to improve the transport system across the State is laudable. The public are very much suffering with inadequate transport system in the rural areas. I, therefore, request the Hon'ble Chief Minister to take urgent action to repair the damaged roads in the rural area and provide additional buses facilitating safe journey to the aged, sick and school going children.

During the last academic year, the Government of Tamilnadu was kind enough to upgrade more number of High Schools into that of Higher Secondary Schools. Similarly, many cases relating to upgradation of schools (Bilingual) are pending with the Government of Tamilnadu. I request the Hon'ble Chief Minister of Tamilnadu to accord sanction of upgradation of High Schools (Bilingual) from the ensuing academic year. I request your

[திரு. கே. கோபிநாத்] [2012 பிப்ரவரி 3

kindself to bifurcate the High School, Berikai into Boys and Girls High School besides upgrading the said school under RMSA schemes from the academic year 2012-2013. I also request the Hon'ble Chief Minister of Tamilnadu to fill up the vacant teacher posts in the Secondary, BT and PG levels in Hosur Taluk and particularly the minority language posts in the schools. Time and again, I have been requesting the Government of Tamilnadu in the floor of the Assembly and in other forums to shun the language bias in the broader interest of the linguistic minorities in the State of Tamilnadu, but in vain. The linguistic minorities have suffered a set back again during the last month as the T.V. channels, the sole major communication help line to the public failed to telecast the Telegu Channels like Gemini, Maa TV, EE TV, TV9 Telugu, Gemini Music, and other Telegu channels. To some extent the District Administration has set the telecast right in response to my request. But, I do not find clarity in telecast and the linguistic minorities are in utter despair as the lone entertainment itself is taken away due to the political feuds. This opportunity should not be denied to the linguistic minorities in the State as it happens to be their fundamental right enshrined in the Constitution of India. I therefore, pray the Hon'ble Chief Minister of Tamilnadu to direct the concerned authorities to arrange telecast of the programmes in the T.V.'s through the channels as usual in the interest of the Telugu, Kannada and Malayalam people.

The Government of Tamil Nadu have not accorded sanction of a Government Degree College in my constituency in spite of my repeated request even though the deposit with required site for establishment of a Government Degree College is kept ready. The drop out rate of the student community is ever increasing on account of non-availability of a Degree College in my constituency. I, therefore, request your kindself to accord sanction for a degree college in my constituency at Hosur.

The Government of Tamil Nadu was kind enough to establish a Floriculture park at Hosur called "TANFLORA" in the past which is in the verge of closer now. The hundreds of crores of rupees invested for encouragement of Floriculture in the taluk with the sole aim of encouraging the farmers to take up floriculture as their occupation should not go unnoticed. Hence, I humbly pray the Hon'ble Chief Minister of Tamil Nadu to revive the "TANFLORA" with reorganisation of the park.



2012 பிப்ரவரி 3] [திரு. கே. கோபிநாத்]

The Government of Tamil Nadu have helped the farmers of Hosur area to cultivate by constructing Kelavarapalli and Kodiyalam dams across the South Pennar River. The cultivable irrigation area could be further expanded in case the "Lift Irrigation" scheme is sanctioned to the above said two dams. In addition to the present 10,000 acres irrigation in this area, another 20,000 acres irrigation could be expanded through the above dams linking more than 30 small and medium irrigation tanks. I, therefore, request the Hon'ble Chief Minister to accord sanction of "Lift Irrigation Schemes" as the ground water is completely depleted throwing away the farmers from their hereditary occupation. I earnestly implore the Hon'ble Chief Minister to save the farmers of Hosur Taluk who are wholly depending upon agriculture.

In the past also, I have been requesting for increase in the strength of police force in the Hosur Town as the border of Karnataka in the proximity of 5 kms gradually becoming a Crime Prone zone. Often the corpses are strewn within the border of Tamil Nadu State and also the Crime rate is increasing. Hence, the existing police strength at Hosur seem to be inadequate and hence surplus staff is needed. Hence, I request the Hon'ble Chief Minister of Tamil Nadu to accord sanction enhancing the police strength at Hosur.

The long awaiting

(i) Underground drainage system at Hosur.

(ii) Widening of roads in Hosur Town.

(iii) Construction of commercial taxes sales tax buildings within the same compound in the site selected at Hosur.

(iv) Filling up the Ramanaicken Eri with the surplus water available in the Kelavarapalli Dam enabling improvement of underground water table in the Borewells in and around Hosur Town.

(v) Construction of Electric crematorium at Hosur.

(vi) Telugu Academy in the interest of the Telugu Linguistic Minorities.

(vii) Revival of closed sick industries in SIPCOT, Hosur.

(viii) Construction of cold storage to the farmers to store their produce.

(ix) Desilting of irrigation tanks in the Taluk.

[திரு. கே. கோபிநாத்] [2012 பிப்ரவரி 3

(x) Upgradation of the Government Hospital, Hosur providing with latest equipments in all the departments opening of accident trauma care and an eye block with water facilities are to be seen the light of the day.

**SAFEGUARDS TO THE LINGUISTIC MINORITIES-TELUGU**

The Government of Tamil Nadu headed by Hon'ble Chief Minister J. Jayalalitha was kind enough to issue the order vide G.O.Ms. No.83, dated 29-12-1993 safeguarding the rights of Linguistic Minorities specifying the list of local areas where 15% of the people speak the language other than majority language. In the said Government Order, people of Hosur and Denkanikottai Taluks in Dharmapuri District could use Telugu and Kannada for official purposes. The plight and fear of the Telugu linguistic minorities could be allayed by implementing the said order in the State of Tamil Nadu Koodankulam Anu Min Nilayam (Nuclear Power Project) which withstood Tsunami also in the past free from natural calamities. It is a project meant for generating 2000 m.w. power supply ultimately the share vests with Tamil Nadu is 1000 m.w. The project with 14,000 Crore expenditure is likely to take off in a short period. The 12 year long duration of the scientists nervousness job is likely to produce good results. Such a project is being subjected to chaos and confusion among public. Even the foreign interference in the issue is to be suspected. The State of Tamil Nadu is reeling under low voltage power supply. At this stage, the state is in need of Nuclear power supply to supply power for agriculture, industry and domestic purposes. Hence, the Government of Tamil Nadu protect the project.

**SURVEY AND GRANTING OF PATTAS TO THE INAM LANDS AT CHENNASANDIRAM**

Even after abolishing of Inams in the State and constructing a dam in the Paimaish lands at Chennasandiram village of Hosur Taluk across the South Penna river resulting into special legislation in the Government of Tamil Nadu when Dr. M.G.R. was the Chief Minister, the lands under cultivation by the small and medium farmers of 6 villages of Chennasandiram Panchayat were not allowed pattas on account of non-survey of the villages by the Government. As a result, the cultivators do not possess any right over the lands under their cultivation. Hence, I pray the Hon'ble Chief Minister of Tamil Nadu to arrange for survey and grant of pattas to the farmers for more than 1000 acres of land.



2012 பிப்ரவரி 3] [திரு. கே. கோபிநாத்]

I, therefore, pray the powerful, Madam Chief Minister to accord sanction and help the people of Hosur Taluk who would always oblige and remember for a very long period in the history.

இந்த அரிய வாய்ப்பிற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்ன point of order? சொல்லுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள் கன்னடத்திலே உரையாற்றியிருக்கிறார். அவர் பேசியது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கான ஆங்கில மொழியாக்கத்தை ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். Based on that, அது அவைக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஆளுநர் உரையின்மீது ஒருசில கருத்துகளை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆளுநர் உரையில், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், ஒட்டுமொத்தமான தொகுப்புதான் இது என்று சொல்வதில் எங்களுக்கு ஆட்சேபணை உண்டு. அப்படியல்ல. நான் முதலிலே என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது ஒட்டுமொத்தமான தொகுப்பு அல்ல. தமிழகத்தின் வளர்ச்சிக்கான ஒட்டுமொத்தமான நல்ல பல திட்டங்கள் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றன என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அடிப்படையான நிலை.

ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய, மாநிலத்தில் வறுமையை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள்,

பொது விநியோக முறையைப் பலப்படுத்துவது, முறைப்படுத்துவது, அதை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள், 'தானே' புயலால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் 1,000 கோடி ரூபாயில் 1 இலட்சம் பேருக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான பிரம்மாண்டமான மிகப் பெரிய திட்டம், இதுபோன்று இருக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

முல்லைப் பெரியாறு அணை சம்பந்தமாக இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பது, அநேகமாக நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், கேரள மாநிலத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் இடையே ஒரு முரண்பாடான சூழ்நிலை உருவாகாமல் இருப்பதற்கான முறையில், லாவகமான முறையைக் கையாண்டிருக்கின்றார்கள் என்பதுதான் எங்களுடைய கருத்து. இரண்டு மாநிலங்களுக்கிடையிலும் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் சமயோசித ஆலோசனையோடு, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான முறையிலே லாவகமாக இந்தப் பிரச்சினை கையாளப்பட்டிருக்கின்றது.

இந்த ஆளுநர் உரையின் 10-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பது, மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் மத்திய அரசு சட்டங்களை இயற்றத் தொடர்ந்து முயற்சி செய்துவருவதும், திட்டங்களை வடிவமைப்பதில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான அணுகுமுறையைத் திணிப்பதும், மத்திய, மாநில உறவுகளில் ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்பட வழிவகுக்காது என்பதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு முழுமையான உடன்பாடு உண்டு என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நில அபகரிப்பு சம்பந்தமாக தமிழகத்திலே தொடரப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு வழக்குகளைப் பற்றி நான் விவரமாக எடுத்துச்சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சாதாரண ஏழை, எளிய மக்கள், 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்களின் நிலங்களையெல்லாம் அபகரித்ததோடு மட்டுமல்லாமல், அரசுக்குச் சொந்தமான நிலங்களைக்கூட அபகரித்து, கையிலே வைத்துக்கொண்டு அதிகாரத்தைச் செலுத்தியவர்களெல்லாம்





இன்றையதினம் கைது செய்யப்பட்டு, நடவடிக்கைகளிலே இருந்துகொண்டிருக்கக்கூடிய நிலையில், அவற்றை அரசாங்கம் கையகப்படுத்தி மீண்டும் அவர்களுக்கே ஒப்படைக்கக்கூடிய நிலையை உருவாக்கியிருப்பது பாராட்டக்கூடிய, வரவேற்கக்கூடிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த அரசு 1,85,000 கோடி ரூபாயை திட்டப் பணிகளுக்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மத்திய அரசுடன் மாநில அரசின் நிதியையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைக்கேற்ப அந்தந்த மாநில அரசுகளுக்கே திட்டங்களை வடிவமைக்கும் சுதந்திரத்தை அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துவது, மாநில அரசுகளின் உரிமையை மத்திய அரசு பறிப்பதற்கானச் செயல்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருப்பது வரவேற்கக்கூடியது. மத்திய அரசாங்கம் மாநிலங்களுடைய அதிகாரங்களைத் தொடர்ந்து பறிப்பது குறித்து நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலேகூட தீர்மானங்களை நிறைவேற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்; மக்களைத் திரட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்திய அரசாங்கத்திற்கு இராணுவத்தை வைத்துக்கொள்வதற்கு அதிகாரம் இருக்கலாம். கரன்சி அச்சடிக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கையிலே இருக்கலாம். விமான சர்வீஸ், ரெயில்வே சர்வீஸ் போன்று இருக்கக்கூடிய, வெளிநாட்டுக் கொள்கையிலே மத்திய அரசாங்கத்தினுடைய அதிகாரங்கள் கையிலே இருக்கலாம். ஆனால், ஒரு மாநிலத்தில் ஒரு நதியைப் பயன்படுத்துவதற்குக்கூட அந்த அரசாங்கத்துக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்ற முறையில், மாநிலங்களை மத்திய அரசாங்கம் பார்ப்பது என்பது சரியான நடைமுறை இல்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதற்கான காலம் வந்துவிட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். எனவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரத்தை, மத்திய அரசாங்கம் கையிலே குவியலாக வைத்துக்கொண்டிருக்கக்கூடிய அந்த அதிகாரங்களை, முழுவதும் மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்கான முறையில் தமிழகத்திலிருந்தே அதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும். சட்டமன்றத்திலே அதற்கான தீர்மானங்கள்

[திரு. எம். ஆறுமுகம்] [2012 பிப்ரவரி 3

நிறைவேற்றப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருவது பாராட்டுதலுக்குரியது. 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களெல்லாம் அதற்கான மாநாடுகளையெல்லாம் நடத்தி, கும்பமேளம் நடத்தினார்களே தவிர, தமிழ் மொழியைக் காப்பாற்றக்கூடியவர்களாக இல்லை என்பதனை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த ஆட்சி, தமிழ் மொழியை, மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும் என்பதைக்கூட சட்டமன்றத்திலே தீர்மானங்களாக நிறைவேற்றுவதில்கூட தவறில்லை என்று நான் கருதுகிறேன்.

வறுமை, வேலையின்மையோடு தொடர்புடைய பிரச்சினையாகும் என்பதை ஒப்புக்கொண்டு, திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் மூலமாக இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறும் தகுதியுடையவர்களாக உருவாக்குவதையும், புதிய தொழில் முனைவோர்களை ஊக்குவித்து வேலைவாய்ப்பைப் பெருக்குவதையும் இரு முனை நடவடிக்கையாக இந்த அரசு செயல்படுத்தி வருவதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. வறுமை, வேலையின்மை என்பது இந்த நாட்டில் பிடித்திருக்கக்கூடிய மிகப் பெரிய நோயாக இருந்து கொண்டிருக்கின்றது. இதற்கு மத்திய அரசும் காரணம் என்பதை நாம் உணர வேண்டும். எனவே, அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

வேளாண் உற்பத்தியில் விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுதலுக்குரியன. சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில், நுண்ணீர்ப் பாசனத் திட்டம், சேமிப்புக் கிடங்கு வசதிகளை மேம்படுத்துதல், சந்தைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்றவை வேளாண்மைத் துறையில் புத்துயிர் பெற ஏற்பாடுகள் செய்யப்படுவது மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத்



2012 பிப்ரவரி 3] [திரு. எம். ஆறுமுகம்]

துறையை மேம்படுத்துவதற்காகவும், விவசாயிகளினுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை உருவாக்குவதற்கான திட்டமாகவும் நாங்கள் கருதுகிறோம்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது குறித்து ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை மறைக்கவில்லை. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் இவ்வரசுக்கு ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளதென்று குறிப்பிடப்பட்டிருப்பது மீனவர்கள்மீது இவ்வரசு உள்ளார்ந்த பற்று கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. எனவே, இதற்கு யார் காரணம்? தொடர்ந்து தமிழக மீனவர்கள்மீது தொடுக்கக்கூடிய தாக்குதலை மத்திய அரசாங்கம் தடுத்து நிறுத்தாதது மட்டுமல்ல; இலங்கை அரசோடு நெருக்கமான உறவுகளை வைத்துக்கொண்டு, இலங்கையிலிருந்து வரக்கூடிய அதிபர்களை இந்தியாவிலே சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கக்கூடிய ஒன்றாக இருப்பது, தமிழ் மக்களை, தமிழ் இன உணர்வு படைத்தவர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருப்பதில் மத்திய அரசாங்கம் பாராமுகமாக இருந்து கொண்டிருப்பதை நாம் கண்டித்தாக வேண்டும். இந்த அவையிலே நாம் கண்டித்திருக்கின்றோம். இதற்கு முழுமையான தீர்வு ஏற்பட வேண்டுமென்று சொன்னால், கச்சத் தீவைத் திரும்பப் பெறுவது மட்டுமே இதற்கு ஒரே தீர்வாக அமையும் என்று சுட்டிக்காட்டியிருப்பது என்பது, இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய தீர்மானமாக இருந்தாலுங்கூட, மீண்டும் கச்சத் தீவை நாம் பெறுவதற்கான முறையில் தமிழக மக்களுடைய ஒட்டுமொத்தமான ஆதரவைத் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரட்ட வேண்டும் என்பதே எங்களுக்கு இருக்கக்கூடிய கருத்து. நிச்சயமாக கச்சத் தீவை நாம் மீட்டே தீரவேண்டும். மத்திய அரசாங்கம் அதற்குத் தடையாக இருக்குமேயானால், மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கையை மக்கள் மத்தியிலே அம்பலப்படுத்தக்கூடிய முறையில் நம்முடைய நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழக அரசு பெறும் உணவு தானிய ஒதுக்கீட்டையும் குறைத்துக் கொடுத்துவரும் நடவடிக்கையை இப்பேரவை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இப்பொழுது தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பொது விநியோகக் கடைகளுக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கக்கூடிய உணவு

[திரு. எம். ஆறுமுகம்] [2012 பிப்ரவரி 3

தானியங்களைக்கூட குறைத்துக் கொடுத்திருப்பதும், மண்ணெண்ணெய், அரிசி, பருப்பு, கோதுமை, ரவை போன்ற பொருட்களை ஒட்டுமொத்த தொகுப்பிலிருந்து தமிழக அரசுக்குக் கொடுக்கவேண்டியதை குறைத்திருப்பது என்பது இந்த அரசுக்குத் தமிழக மக்களிடத்தில் கெட்டப் பெயரை உருவாக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்து கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய இந்த நடவடிக்கையைக் கண்டித்தாக வேண்டும்.

*முற்பகல் 11-50*

எங்களுடைய கோவை மாவட்டத்தில், நொய்யல் ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும்பொருட்டு, பொதுக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்படச் செய்ய இவ்வரசு எடுத்துவரும் அனைத்து முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் பாராட்டுகிறோம். நொய்யல் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.75 கோடி மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வழங்கியுள்ளதையும் நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், நம்முடைய மாநிலத்தில், இப்பொழுது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த காலத்திலேயே கடுமையான மின்சார வெட்டு, நெருக்கடிகள், ஆலை மூடல்கள் போன்றவை தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இந்த நிலை இப்பொழுதும் இருந்துகொண்டிருந்தாலும்கூட, இந்த அரசால் இரண்டு ஆண்டுகளில் 4,704 மெகா வாட் அளவிற்கு கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, துவக்கப்படும் என்ற அறிவிப்பை காலத்தே செய்து முடிக்கவேண்டும். அது தமிழக மக்கள் மத்தியிலே பால் வார்த்ததைப்போல இருக்கும் என்று கருதுகிறேன். இதை முடித்தெடுக்கவேண்டும். ஆலைகள் முழுமையாக இயங்குவதற்கும், பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு முழுவதுமாகக் கிடைப்பதற்கும், இந்த 4,704 மெகாவாட் அளவிற்கான கூடுதல் மின்சாரத்தைத் திட்டமிட்டு காலத்தே தொடங்கி முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆசிரியர் பணியிடப் பற்றாக்குறையைப் போக்கக்கூடிய முறையில், 33,683 ஆசிரியர் பணியிடங்கள், 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்கள், 5,000 ஆசிரியர் அல்லாத



2012 பிப்ரவரி 3] [திரு. எம். ஆறுமுகம்]

பணியிடங்களை நிரப்ப அனுமதி அளித்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. அதை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

அதேபோல, உழவர் பாதுகாப்புத் திட்டம் இந்த அரசினால் கொண்டுவரப்பட்டிருப்பது என்பது பாராட்டப்படவேண்டிய, வரவேற்கக்கூடிய ஒன்றாகும். 'தானே' புயலினால் ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான நெருக்கடி குறித்து ஆளுநர் உரையிலே மிகவும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக, கடலூர், விழுப்புரம் மாவட்டங்கள், அழிந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில், அழிந்தே விட்டது என்றே சொல்லலாம். ஆனால் போர்க்கால நடவடிக்கையாக தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேர்களையும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் நிவாரணப் பணிகளில் உட்படுத்தி, இந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய மக்களே பாராட்டக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை மறுக்கமுடியாது. சில இடங்களில் சில தவறுகள் நடக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை, பாராட்டப்படக்கூடிய நடவடிக்கை மட்டுமல்ல; அதேநேரத்தில் அங்கே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்களுக்கு, குடிசைகளில் வாழக்கூடியவர்களுக்கு 1,000 கோடி ரூபாயில் ஒரு இலட்சம் வீடுகள் (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுவதற்கான திட்டத்தை அறிவித்திருப்பது என்பது இதுதான் முதல் முறை என்று நான் கருதுகிறேன். இதில் வருத்தப்படக்கூடிய விஷயம் என்னவென்றால், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்கள் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. தமிழக அரசு மத்திய அரசிடம் கேட்டிருக்கக்கூடிய தொகை ரூ.5,200 கோடி. ஆனால், மத்திய அரசோ தமிழகத்திற்குக் கொடுத்திருக்கக்கூடிய தொகை ரூ.500 கோடி. யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவதைப்போல 500 கோடி ரூபாயைக் கொடுத்துவிட்டு, தமிழகத்தினுடைய இரண்டு மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டுமென்று இங்கே பேசுவது என்பது எனக்குப் புரியவில்லை. எனவே, மத்திய அரசாங்கத்தின் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயல் நிவாரணப் பணிகளுக்காக

[செல்வி ஜெ ஜெயலலிதா][2012 பிப்ரவரி 3

மத்திய அரசிடம் 5,000 கோடி ரூபாய் மாநில அரசு கேட்டு, வெறும் 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு, அது யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவது போன்றதாகும் என்று குறிப்பிட்டார். இந்த 500 கோடி ரூபாய்கூட எப்படிக் கொடுத்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. அதாவது, இந்தப் புயல் அடித்த பின்னர், உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டோம். முதல் நாள் தொடங்கி, தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டேயிருந்தோம். நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கித் தாருங்கள், நிதி உதவி செய்யுங்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டும், மத்திய அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நிதி உதவியும் வரவில்லை. சரி, இப்படியே நாம் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால், இது வேலைக்கு ஆகாது, எந்தப் பணியும் நடைபெறாது என்று மாநில அரசால் முடிந்த தொகையான ரூ.850 கோடியை ஒதுக்கிவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணப் பணிகளைத் தொடங்கிவிட்டோம். அதன் பின்னர் மாநில அரசிடம் போதிய நிதியில்லை என்பதற்காகப் பத்திரிகைகளில் ஒரு விளம்பரத்தை வெளியிட்டோம். மாநில அரசு சார்பாக நல்ல மனம் படைத்தவர்கள் அனைவரும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக உதவி செய்யவேண்டும். குறிப்பாக, இந்த 'தானே' புயல் நிவாரணப் பணிகளுக்காகப் பொது மக்கள் வாரி வழங்க வேண்டுமென்ற விளம்பரத்தை நாங்கள் வெளியிட்டோம். அன்றையதினம், காலையில் எல்லா நாளேடுகளிலும், தினசரிகளிலும் இந்த விளம்பரம் வந்தது. அது வந்தபிறகு, மத்திய அரசு வெட்கப்பட்டுவிட்டதோ என்னவோ தெரியவில்லை. அன்று பிற்பகல்தான் இந்த 500 கோடி ரூபாய் தருவதாக அறிவித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-55*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து நம்முடைய தமிழக மீனவர்களைத் தாக்குவதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார். அதற்கு ஒரே வழி, கச்சத் தீவை மீட்பதுதான் என்றும் குறிப்பிட்டார். தமிழக மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி இடங்களில், இலங்கைக் கடற்படையினரால் எவ்வித இன்னலுக்கும் உள்ளாகாமல் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு, தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல்



2012 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இருக்க வேண்டும் என்றால் அதற்கான நிரந்தரத் தீர்வு, தாரைவார்க்கப்பட்ட கச்சத் தீவை மீட்டெடுப்பதுதான். இதற்கான நடவடிக்கையை நாம்தான் எடுக்க முடியும் என்பதால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் நான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருந்தேன். தற்போது இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இந்த வழக்கிற்கு மேலும் வலுவூட்டும் வகையில், ஆவணங்களைத் தன்னிடம் கொண்டுள்ள தமிழக அரசின் வருவாய்த் துறையும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. தமிழக மீனவர்களின் வாழ்வாதார உரிமையைக் கட்டிக் காக்க, கச்சத் தீவை மீட்கும் வரை நான் ஓயமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்னதுபோல், வெட்கப்பட்டோ என்னவோ தெரியவில்லை, நம் மத்திய அரசாங்கம் 500 கோடி ரூபாயை அதற்குப் பின்னாலே அறிவித்தார்கள் என்பதுதான் உண்மை என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. அதுதான் உண்மையாக இருக்கலாம். ஏன், தமிழக மக்கள் நிதியுதவி கொடுக்க வேண்டுமென்ற அறிவிப்பு வந்ததற்குப் பின்னாலேதான் இந்த நிதி வந்திருப்பது என்பது, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்தை எப்படிப் பார்க்கின்றது என்பதற்கான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இடைக்கால நிவாரணமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள், பொன்னை வைக்கிற இடத்தில், பூவை வைக்கின்றோம் என்று. பூவை வைத்திருக்கின்றோம், விரைவிலே பொன்னை வைத்துவிடுவோம் என்பதை நாங்களும், வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய மாநிலத் தலைவர் திரு. ஞானதேசிகன் அவர்கள் நேற்று முன்தினம் எங்களையெல்லாம் அழைத்துப் பேசினார்கள். அப்போதுகூட, தமிழகம் கேட்ட நிதியை

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்] [2012 பிப்ரவரி 3

நீங்கள் பெற்றுத் தருவதற்கு முழுமையான முயற்சியை எடுக்க வேண்டும்; தமிழகப் புயல் நிவாரணப் பணிகளுக்கான நிதியைப் பெற்றுத் தர வேண்டுமென்று நாங்கள் 5 பேரும் வலியுறுத்தியிருக்கிறோம் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை நான் குறை சொல்லவே இல்லை. பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழக மக்கள் வாக்களித்து இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக தமிழகத்திற்குத் தேவையான உதவி கிடைக்க வேண்டும் என்றுதான் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள்மீது எந்தத் தவறும் இல்லை. மத்திய அரசு பாராமுகமாக இருக்கிறது. இதே தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அரசில் அமைச்சர்களாக இருக்கின்ற திரு. சிதம்பரம் போன்றவர்களெல்லாம் பாராமுகமாக இருக்கிறார்கள் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னை வைக்கிற இடத்தில் ஒரு பூவை வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார். இதை கடலூர் மாவட்டத்தில் இருக்கின்றவர்களும், விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கின்றவர்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதில் மத்திய அரசாங்கத்தில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இடம் பெற்றுள்ள தமிழக அமைச்சர்களுடைய கடமை என்ன? தமிழகத்தில் இப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய 'தானே' புயலால் இரண்டு மாவட்டங்களும் கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு இருப்பதைப் பற்றி இதுவரை நாடாளுமன்றத்திலே எடுத்துச்சொல்லி, தமிழக அரசு கேட்டிருக்கக்கூடிய அந்த நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்தார்களா என்பதுதான் எனக்கு இருக்கக்கூடிய கேள்வி.



2012 பிப்ரவரி 3] [திரு. எம். ஆறுமுகம்]

எனவே, ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு கருத்துகளை இந்த நேரத்தில் சொல்கின்றபோது, இரண்டு விஷயங்களை நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமீபத்தில் நீங்கள் அறிவித்திருக்கக்கூடிய பஸ் கட்டண உயர்வு. அதில் பல்வேறு கருத்துகளை நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். சாதாரண ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், கட்டுமானப் பணியிலே ஈடுபடக்கூடியவர்கள், இவர்களெல்லாம் பஸ்ஸிலே பிரயாணம் செய்கின்றபோது, கட்டணம் 100 சதவீதம் உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கக்கூடியவர்கள், எக்ஸ்பிரஸ் என்று போட்டுக்கொள்கிறார்கள், எல்.எஸ்.எஸ். என்று போட்டுக் கொள்கிறார்கள். அரசு அறிவித்திருக்கக்கூடிய அந்தக் கட்டணத்திற்கு மேலே வசூல் செய்வதாகக்கூட சொல்லப்படுகிறது. என்னுடைய வால்பாறை தொகுதியில்கூட, வால்பாறையிலிருந்து பொள்ளாச்சிக்கு வருவதற்கு, முன்பு 21 ரூபாயாக இருந்த கட்டணம் இப்பொழுது 42 ரூபாய் ஆகிவிட்டது. இப்பொழுது பார்த்தோமானால், எல்லா பேருந்துகளும் L.S.S., Express போன்றவையாக இருக்கின்றன. அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உருவாக்கக்கூடிய நோக்கத்தோடு அரசு அதிகாரிகள் இதையெல்லாம் செய்கிறார்களா என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய நிலை கடந்த கால ஆட்சியிலே இருந்தது. ஏனென்று சொன்னால், சென்னையிலே ஓடுகிற 3,200 பேருந்துகளில் வெறும் 600 பேருந்துகள் மட்டுமே சாதாரணக் கட்டணப் பேருந்துகளாக இயக்கப்பட்டன. 19,184 பேருந்துகளில் 9,389 பேருந்துகளை, அதாவது 49 சதவீதம் பேருந்துகளை சாதாரணக் கட்டணப் பேருந்துகளாக, ஏழை எளிய மக்களுக்காக இயக்கிட உத்தரவிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2012 பிப்ரவரி 3

பேருந்துக் கட்டண உயர்வினைப் பொறுத்தவரை, கிலோ மீட்டருக்கு 28 பைசாவிலிருந்து 42 பைசா என்பதுதான் உயர்வு. இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால், கேரளாவில் ஒரு கிலோ மீட்டருக்கு 55 பைசாவும், ஆந்திராவில் ஒரு கிலோ மீட்டருக்கு 50 பைசாவும், மஹாராஷ்டிராவில் ஒரு கிலோ மீட்டருக்கு 70 பைசா எனவும் பேருந்துக் கட்டணங்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1991-1996-ல் போக்குவரத்துக் கழகங்கள் 142 கோடி ரூபாய் ரொக்க இலாபத்தில் இயங்கின. 1996-2001-ல் தி.மு.க. ஆட்சியில் 674 கோடி ரூபாய் ரொக்க நஷ்டம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2001-2006-ல் 65 கோடி ரூபாய் மீண்டும் ரொக்க இலாபத்தில் போக்குவரத்துக் கழகங்கள் இயங்கின. (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் 2006-2011-ல் கருணாநிதி ஆட்சியில், 1,094 கோடி ரூபாய் ரொக்க நஷ்டம். மொத்த நஷ்டம் என்பது, 6,150 கோடி ரூபாய் அளவுக்குப் போக்குவரத்துக் கழகங்கள் கடன்பட்டிருக்கின்றன. இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைவிட, ஏழை எளிய மக்கள் மீது அக்கறை கொண்டு, மிகக் குறைந்த கட்டணத்தில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று ஆணையிட்டவர் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றி நான் குறையே சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 140 டெப்போக்கள் அடைமானம் வைக்கப்பட்டிருந்ததாகப் பத்திரிகைகளிலே வந்த செய்திகளை நான் பார்த்தேன். மீட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. இப்படி L.S.S., என்றும், Express என்றும் போட்டுக்கொண்டு, அதிகாரிகளே அதிகமான கட்டணம் வசூல் செய்கிறார்களா என்ற ஓர் அச்சம் எனக்கு இருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தமிழக அரசு அறிவித்த . . .



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 49 சதவீதம் அளவுக்கு சாதாரணக் கட்டணப் பேருந்துகள் பெரும்பான்மையாக இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, ஏதேனும் ஒரு வழித்தடத்தைச் சுட்டிக்காட்டுகின்றபோது, அந்த இடத்திலே ஏதேனும் தவறு நடக்கின்ற பட்சத்தில், அதிகாரிகள் அப்படிப்பட்ட தவறுகளில் ஈடுபட்டிருப்பார்களேயானால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுத்து, ஏழை எளிய மக்கள் சாதாரணக் கட்டணப் பேருந்துகளில் செல்வதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** முடித்துவிடுகிறேன். தமிழக அரசு அறிவித்திருக்கக்கூடிய புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உண்மையிலேயே ஓர் அற்புதமான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை யாருமே வரவேற்றதில்லை. டாக்டர் கலைஞரே அந்தத் திட்டத்தை வரவேற்றிருக்கின்றார் என்று பத்திரிகைகளில் செய்தியைப் படித்தேன். தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களே இந்தத் திட்டம் அற்புதமான திட்டம், வரவேற்க வேண்டுமென்று சொல்லி வரவேற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால், அந்தத் திட்டத்தைக் குறையே சொல்ல முடியாது. உண்மையிலேயே ஏழை எளிய மக்கள் பயன்பெறக்கூடிய ஓர் அற்புதமான, மிகச் சிறந்த திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். சில மருத்துவமனைகளில் அந்தத் திட்டத்தை இணைத்துக்கொள்வதற்குக்கூட தயாராக இருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அந்தத் திட்டம் முழுமையாக ஏழைகளுக்குப் பயன்பட வேண்டும். அந்த அடிப்படையிலே தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற 'தானே' புயல் தொடர்பான நிவாரண நடவடிக்கைகள், குறிப்பாக, ஒரு இலட்சம் வீடுகள் மற்றும் நடவடிக்கைகள், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் நம்முடைய அரசு பின்பற்றியிருக்கின்ற அணுகுமுறை, முதன்மைத் துறையான விவசாயத்தை, மீன்பிடிப்பை, கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகள், பொது விநியோகத்திலே உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசாங்கம் இழைக்கவிருக்கின்ற கெடுதியைப் போக்க வேண்டுமென்கிற எச்சரிக்கை போன்ற அனைத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம்.*

*அனைவரும் பயன்பெறத்தக்க நிலையான வளர்ச்சியால் ஏற்படும் பயனுக்கு அரசு உதவிகளும், மானியங்களும் ஈடாக அமையாது என்று நம்முடைய அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, மிகச் சரியான ஒரு நிர்ணயிப்பு. விலையில்லா அரிசி மற்றும் பல்வேறு உதவிகளை, மானியங்களை மக்களுக்கு நாம் செய்கிறோம். நகர்ப்புறங்களிலே கடுமையான வறுமை இருக்கிறது என்பதைப் பற்றியும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுடைய பின்னணியிலே இப்போது ஏற்பட்டிருக்கிற விலையேற்றங்களை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. விலையில்லா அரிசியால் ஒரு குடும்பத்திற்கு மாதத்திற்கு 20 ரூபாய் மிச்சம் என்றால், ½ லிட்டர் பால் வாங்கினாலே ஒரு மாதத்திற்கு 90 ரூபாய் அந்தக் குடும்பத்திற்குக் கூடுதலாகச் செலவாகிறது. தனியார் பால் தரங்கெட்டது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மிகச் சரியாகவே இங்கு கோபத்தோடு குறிப்பிட்டார்கள். அதிக விலைக்கும் அவர்கள் விற்கிறார்கள். . . .*

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கணக்கில் ஒரு தவறு இருக்கிறது. 20 கிலோ விலையில்லா அரிசி வழங்குவதால்*



2012 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*20 ரூபாய் மிச்சம் என்றார். அதற்குக் காரணம், அவர் என்ன கணக்கு சொல்ல வருகிறார் என்றால், பொது விநியோக முறையில்,* Public Distribution System-*ல் ரேஷன் கடைகளில் ஏற்கெனவே கிலோவிற்கு 1 ரூபாய் என்ற விலையில் வழங்கப்பட்டது. ஆகவே, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்றால், 20 கிலோ அரிசிக்கு 20 ரூபாய் மிச்சம் என்கிறார். இதே 20 கிலோ அரிசியை வெளிச் சந்தையில் வாங்க வேண்டுமென்றால் என்ன விலையாகும்? கணக்குப் போட்டுப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொது விநியோக முறை அரிசியைச் சார்ந்து இருக்கிற மக்கள்தான் மிகப் பெரும்பாலோர் என்பதால் நான் அந்தக் கணக்கைச் சொன்னேன். நம்முடைய அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளபடி ஏழ்மை எந்த அளவிற்குக் கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைத்துத்தான் சொன்னேன்.*

*அதேபோல, பால் விலை ஏற்றத்திற்கு மாற்று என்ன செய்யலாம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அது சரியான அணுகுமுறை. என்னைப் பொறுத்தவரையிலே, பால் விற்பனையை நாம் இன்னும் அதிகமாகச் செய்வதற்குரிய ஏற்பாடுகளை நம்முடைய பால் பண்ணைகள் மூலமாகச் செய்யவேண்டும் என்பது ஒன்று. இரண்டு, இதர தனியார் பால் பண்ணைகளில் தயிர் விற்கிறார்கள்; மோர் விற்கிறார்கள்; இதுபோன்ற பல பொருட்களை விற்கிறார்கள். தமிழகத்திலே பல நூற்றுக்கணக்கான பார்லர்களை வைப்பதன்மூலம், இப்போது நம்முடைய பீச்சிலே இருக்கிற பார்லர் மிக இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. மைசூர் பாக், ஐஸ் கிரீம், தயிர், யோகர்ட் போன்ற உபபொருட்களை நாம் நூற்றுக்கணக்கான பார்லர்கள்மூலம் விற்பனை செய்வதன் மூலமாக மிகப் பெரிய இலாபத்தை ஈட்டமுடியும், பாலை இன்னும் மலிவாகக்கூடக் கொடுக்கமுடியும். இனிமேலாவது அந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 பிப்ரவரி 3

*மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தரங்கெட்ட பால் என்று குறிப்பிடவில்லை. அதாவது, ஆவின் நிறுவனம் பாலைக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. தனியார் பால் பண்ணைகள் தரமான பால் வழங்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், இலாப நோக்கு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதிக விலைக்கு பால் விற்பனை செய்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். ஏனென்றால், சில தனியார் பால் பண்ணைகளின் பாலினைப் பரிசோதனை செய்தபோது, மாவுப் பொருட்கள் மற்றும் வேதிப் பொருட்கள் அதிகமாகக் கலந்திருப்பது கண்டறியப்பட்டு, ஆவின் நிருவாகத்தின் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனால்தான், அந்தப் பாலைப் பற்றிக் குறிப்பிட்டேன் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பால் உற்பத்தி என்பது ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே அதிக பால் உற்பத்தி தமிழ்நாட்டிலே செய்யப்பட்டது. அதற்குப் பின்னால், கடந்த ஆட்சியிலே பால் உற்பத்தி குறைந்து போய்விட்டது. ஏனென்றால், அவர்கள் தனியார் பால் பண்ணையை ஊக்குவித்தார்கள். தனியார் பால் பண்ணைகளுக்கு ஆவின் நிருவாகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பயன்படுத்தி, ஆவின் பால் அங்கு செல்வதற்கு வழிவகுத்தார்கள். தற்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் திருநெல்வேலி ஒன்றியத்திலே சில இடத்தில் நடைபெற்ற நிலைமையைக் கண்டறிந்து, அப்படி தனியார் பால் பண்ணைகளுக்கு பால் கொடுத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, இப்போது அவர்களை விசாரணை செய்து, அவர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை இந்தச் சமயத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தனியார் பால் உபபொருட்களைவிட, நம்முடைய ஆவினால் செய்யப்படுகின்ற பால் உபபொருட்கள் தரமானதாகவும், சுவையாகவும் இருக்கின்றன என்று மக்கள் நினைக்கின்றார்கள்; அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த வகையிலே, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, கறவை மாடுகள் அதிகமாகத் தரப்படுவதாலும், அதேபோன்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரிலே பால் உற்பத்தியாளர்களுக்கு 2 ரூபாய் அதிகமாகக் கொடுத்து இருப்பதினாலும், பால் உற்பத்தியானது கடந்த ஆட்சியைவிட நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இரண்டு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி கூடி இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 பிப்ரவரி 3] [திரு. வி. மூர்த்தி]

அதாவது, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல், வெண்மைப் புரட்சியை அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அந்தவகையிலே, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பின்படி ஒரு இலட்சம் லிட்டர் பால் விற்பனைக்கு வருகிறது. அந்தப் பாலைக் கொண்டு உபபொருட்கள் தரமாகச் செய்யப்பட்டு பல பார்லர்களில் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு நன்றி. தனியார், பாலை நம்மைவிட அதிகமான விலைக்கு விற்கிறார்கள் என்று தாங்கள் குறிப்பிட்டீர்கள். அவர்களுடைய பால் விலையை நம்முடைய பால் விலை அளவிற்குக் குறைப்பதற்கு நாம் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். இஷ்டத்திற்கு விலை வைத்துக்கொள்ள அவர்களை நாம் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அரசால் பால் விற்பனை விலையைக் கட்டுப்படுத்தலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் அந்த விலைக் கட்டுப்பாட்டை மத்திய அரசு எடுத்துக்கொண்டது. அதனால் பாலை எந்த விலைக்கு விற்கலாம் என்று நிர்ணயம் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

[2012 பிப்ரவரி 3

**திரு. அ. சவுந்தரராசன்:** அடுத்து பஸ் கட்டண உயர்வு மிகக் கடுமையான சிரமத்தை உண்டாக்கியிருக்கிறது. எந்த அளவிற்கு சிரமத்தை உண்டாக்கியிருக்கிறது என்றால், பஸ் பயணத்தை மக்கள் தவிர்த்துக்கொள்கின்ற அளவிற்கு சிரமத்தை உண்டாக்கியிருக்கிறது. 70 சதவிகிதம் பஸ் கட்டண உயர்வு இருக்கிற வழித்தடங்களில் நமக்குக் கூடுதலாக வருகிற வருமானம் 40 சதவிகிதம்தான். அப்படியானால், ஏற்கெனவே எத்தனை பேர் பயணம் செய்தார்களோ அந்தப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது குறைந்து விட்டது. நான் வேறு தடங்களைச் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஊரான கரூர்-திருச்சி வழித்தடம் மற்றும் கரூர்-திருப்பூர் வழித்தடம் ஆகிய இந்த இரண்டு வழித்தடங்களில் மிகப் பெரும்பாலான நாட்களில் 40 சதவிகிதம் அளவிற்குக்கூட கூடுதலான வருமானம் வரவில்லை. அதனுடைய பொருள், இந்தக் கட்டணத்தைக் கொடுக்க இயலாது என்று மக்கள் பஸ் பயணத்தைத் தவிர்த்துவிட்டார்கள். Consumer resistance வருகிற அளவிற்கு இந்த விலையேற்றம் இருந்திருக்கிறது என்பதை நாம் கவலையோடு பார்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விண்ணப்பம்.

அதேபோல, இலவச பஸ் பாஸ் திட்டத்தை 1989-லிருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக கல்வித் துறையிலிருந்து, நம்முடைய அரசிலிருந்து போக்குவரத்துத் துறைக்குக் கொடுக்கக்கூடிய ஈடுகட்டும் தொகையை, நாம் பெரும்பாலான கழகங்களுக்கு வழங்காமலேயே இருந்தோம். சென்னைப் பெருநகரப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் மதுரையில் இருக்கிற கழகத்திற்கு மட்டுமே வழங்கினோம். இந்த 22 ஆண்டுகளுக்கு மட்டும் கணக்கிட்டால் கிட்டத்தட்ட ரூ.1,000 கோடிக்கு மேல்—நாம் அந்த ஈடு கட்டும் தொகையை மட்டுமே செலுத்த வேண்டியிருக்கிறது. நான் எந்த அரசு என்றெல்லாம் சொல்லவில்லை. அவ்வப்போது இந்தத் தொகை செலுத்தப்பட்டு வந்திருக்குமானால், போக்குவரத்துக் கழகங்கள் இவ்வளவு பெரிய நெருக்கடியைச் சந்தித்து இருக்காது என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்து.

அடுத்து, ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது, ஆலோசனை வேண்டுமென்று சொன்னார்கள். வருமானம் உள்ள வழித்தடங்கள் அத்தனையும் தனியாருக்கு இருக்கிறது. நாம் நம்முடைய ஏராளமான நேரங்களை



2012 பிப்ரவரி 3] [திரு. அ. சவுந்தரராசன்]

விட்டுக்கொடுத்திருக்கிறோம். நமக்கு 3 நிமிடத்திற்குப் பிறகு ஒரு தனியார் பேருந்து புறப்படுகிற வழித்தடத்தில்கூட 3 நிமிடத்திற்கு முன் புறப்படுகிற நம்முடைய பேருந்துக்கு நாம் சிறப்புப் பேருந்து என்று வைத்து அதிக கட்டணம் வைத்திருக்கிறோம். ½ மணி நேரம் காத்திருந்துகூட மக்கள் தனியார் பேருந்துகளில் போகிறார்கள் என்பதை ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் பஸ் நிலையங்களில் நான் பார்த்து சேகரித்த விவரங்களின் அடிப்படையிலே சொல்கிறேன். ஆகவே, அதிகாரிகள்மீது நம்முடைய அரசாங்கம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, தனியார் பஸ் 3 நிமிடத்திற்குப் பின்னால் இருக்குமானால், அங்கே நம்முடைய சாதாரணக் கட்டணப் பேருந்துதான் ஓட வேண்டும் என்று சொன்னாலே நம்முடைய வருவாய் கூடும் என்பது என்னுடைய ஆலோசனை. அதேபோல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27 ஆம் தேதி நடைபெற்ற போக்குவரத்துக் கழகங்களினுடைய மேலாண்மை இயக்குநர்கள் கூட்டத்தில், போக்குவரத்துத் துறையினுடைய செயலாளர் அவர்களும் கலந்துகொண்டார். அந்தக் கூட்டத்தில் அனைத்து மேலாண்மை இயக்குநர்களுக்கும் தெரிவித்த கருத்து என்னவென்றால், எந்தெந்த வழித்தடங்களில் தனியார் பேருந்துகள் செல்கின்றனவோ அந்த வழித்தடங்களுக்கு முன்பாகவும், அந்தப் பேருந்துகளுக்குப் பின்பாகச் செல்கின்ற அனைத்து அரசுப் பேருந்துகளும் சாதாரணக் கட்டணத்தில் இயங்க வேண்டுமென்று ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டு, இயக்கப்படுகின்றன. அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற பயணிகளினுடைய எண்ணிக்கை குறைவு என்று சொன்னார்கள். அது தவறான தகவல். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 8 போக்குவரத்துக் கழகங்களிலே, திருச்சி-கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகம் அதிக வருவாய் ஈட்டுகின்ற போக்குவரத்துக் கழகமாக முதல் இடத்திலே இருக்கிறது. இந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிக்கின்ற பயணிகளின் எண்ணிக்கை என்பது இதுவரை குறையவில்லை. சாதாரணமாக, சென்னையிலே மாதாந்திர மற்றும் வாராந்திர பயண அட்டைகளின்மூலம் பயணம் செய்கின்ற பயணிகளின் எண்ணிக்கை கூடியிருக்கிறது.

வழக்கத்திற்குமாறாக, கடந்த காலங்களில் இருந்ததைவிட, இப்போது பயண அட்டைகளின்மூலம் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *நாம் சென்னையை இதற்கு உதாரணமாகக் காட்டக் கூடாது. சென்னை முழுக்க, முழுக்க பொதுவுடைமை பேருந்துகள் ஓடக்கூடிய நகரம். நம்முடைய ஏகபோக இடம். மீதியுள்ள இடங்களில் இந்த நிலைமை இல்லை என்பதை நான் சொல்கிறேன். நேற்றைக்கு முன்தினம் எனக்கு அங்கிருந்து வந்த தகவலைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் சொல்கிறபடி நடந்திருக்குமானால் அது மிக மிக வரவேற்கத்தக்க ஒரு விஷயம். அப்படி நம்முடைய வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆம்னி பஸ்கள் regular சர்வீஸ் போல் சட்டவிரோதமாகச் செயல்படுவதை. . .*

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி மற்றும் உபபொருட்கள் விற்பனையானாலும் சரி, போக்குவரத்துத் துறையானாலும் சரி, தனியார் துறையோடு போட்டி போட்டு, இலாபம் சம்பாதிப்பது அரசுத் துறைகளின், அரசு நிறுவனங்களின் நோக்கம் அல்ல. தனியார் துறையுடன் போட்டி போடுவது அரசு நிறுவனத்தின் வேலையும் அல்ல; இலாபம் ஈட்டுவது அரசின் நோக்கமும் அல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கெல்லாம் தனியார் துறை, தனியார் பேருந்துகளை இயக்க விரும்பவில்லையோ, அங்கெல்லாம் இயக்க வேண்டியது அரசின் கடமை. இலாபம் ஈட்டும் வழித்தடங்களை மட்டும் அரசு தேர்ந்தெடுக்க முடியாது. தனியார் துறையினர் பேருந்துகளை இயக்க விரும்பாத வழித்தடங்களில் இயக்குவதுதான் அரசின் கடமை. ஆகவே, வெறும் இலாப நஷ்டக் கணக்கைப் பார்த்து, அரசு நிறுவனங்கள், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செயல்படவில்லை என்பதை முதலில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.





மேலும், பேருந்துக் கட்டணத்தைப் பற்றித் திரும்பத் திரும்ப இங்கே பேசுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். எந்த அரசும், குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மக்கள்மீது எந்தச் சுமையையும் திணிக்க விரும்புவதில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எப்பொழுது ஆட்சியில் இருந்தாலும், மக்கள்மீது இருக்கின்ற சுமையைக் குறைக்க வேண்டுமென்றுதான் எண்ணுகிறோமே தவிர, *(மேசையைத் தட்டும் ஒலி)* நாங்கள் மனதார விரும்பி எந்தக் கட்டணத்தையும் ஏற்றவில்லை. கடந்த கால ஆட்சியில், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம், எப்படி நிருவாகச் சீர்கேட்டினால் திவாலாகும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டன என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகவே தெரியும். தெரிந்தும் அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

ஆகவே, இன்றைக்கு இந்த நடவடிக்கைகளை எடுத்ததால்தான், போக்குவரத்துக் கழகங்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது. அதனால்தான், மீண்டும் பேருந்துகளைத் தொடர்ந்து இயக்க முடிகிறது. பேருந்துக் கட்டணங்களை உயர்த்தவில்லை என்றால், போக்குவரத்துக் கழகங்களையே இழுத்து மூடவேண்டிய ஒரு நிலைதான் ஏற்பட்டிருக்கும்; எல்லாமே திவாலாகியிருக்கும். அடகு வைத்திருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும் மீட்டெடுக்க முடியாது. ஆகவே, மக்களுக்குத் தொடர்ந்து தரமான சேவை வழங்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். அதனால்தான், மிகவும் வேதனைப்பட்டு, வேறு வழியின்றி எல்லாவற்றையும் தெளிவாக மக்களுக்கே விளக்கிச் சொல்லி, அதன் பிறகுதான் இந்தப் பேருந்துக் கட்டண உயர்வுகளை நாங்கள் நிகழ்த்தியிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் குறை சொல்வதாக தயவுசெய்து எடுத்துக் கொள்ளக் கூடாது. இலாபமுள்ள வழித்தடத்தில் மட்டும்தான் ஓட்டவேண்டுமென்று நான் வாதிடவில்லை. அரசுக்கு ஏராளமான சமூகப் பொறுப்பு இருக்கிறது. இலாபமுள்ள வழித்தடங்களை இயக்க வாய்ப்பிருந்தும், அந்த வழித்தடங்கள்*

[திரு. அ. சவுந்தரராசன்] [2012 பிப்ரவரி 3

விட்டுத் தரப்பட்டிருக்கின்றன என்றுதான் சொல்கிறேன். அது சம்பந்தமாக 7, 8 ஆண்டுக் கால வரலாற்றை நான் சொல்ல முடியும். நேரமில்லாத காரணத்தினால்தான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது கடந்த கால தி.மு.க. ஆட்சியில். கடந்த கால தி.மு.க. ஆட்சியில் வருமானம் வரக்கூடிய பல்வேறு வழித்தடங்களுடைய நேரங்களை மாற்றி, தனியார் பேருந்துகளுடைய உரிமையாளர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட அரசு கடந்த கால தி.மு.க. அரசு. இப்போது அப்படி எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகளின் நேரங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் அதனைச் சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படி உரிய நேரத்தில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உங்களுடைய உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு)* No, no. I am not allowing you. Please, *உட்காருங்கள். உங்களுடைய கருத்தை பக்கத்திலே பேசுகிற உங்கள் உறுப்பினரிடம் சொல்லுங்கள். அவர் அதைப் பற்றிப் பேசுவார். (குறுக்கீடு) இல்லை, வேறு யாராவது பேசினால் பரவாயில்லை. உங்களுடைய உறுப்பினர் உங்களுக்குப் பக்கத்திலேயே இருந்து பேசுகிறார். நீங்கள் உங்கள் கருத்தை அவரிடம் சொல்லுங்கள். அதை அவர் பேசுவார். (குறுக்கீடு) இல்லை, உங்களுடைய உறுப்பினர்தான் பக்கத்திலே பேசுகிறார். (குறுக்கீடு) நான் ஒன்றும் கருத்தைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லையே! உங்கள் உறுப்பினர் பேசுகிறார். உங்களுடைய கருத்தை அவர்மூலம் சொல்லலாமே!*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோன்று, மின்சாரத் துறையைப்பற்றி நாம் கடந்த மூன்று நாட்களாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒழுங்குமுறை ஆணையம் என்று வருகிறபோது, நம்முடைய



2012 பிப்ரவரி 3] [திரு. அ. சவுந்தரராசன்]

TANGEDCO-தான் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று கோரியிருக்கிறது. அதனடிப்படையிலேதான் இன்றைக்கு ஆணையத்தின் ஆலோசனைக் கூட்டங்களில் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே ஒழுங்குமுறை ஆணையத்திற்கு நம்முடைய TANGEDCO 19-9-2011-ல் கொடுத்திருக்கக்கூடிய affidavit-லே, ஜூன் 2012 வரைதான் மின் வெட்டு இருக்கும் என்று அதிலே வாக்குறுதி அளித்திருக்கிறது. ஆனால், அது சில நேரங்களிலே தள்ளிப் போகிறது. அப்படி தள்ளிப் போவதைப் பற்றியும் பிரச்சினையில்லை. அதிலே அவர்கள் சொல்கிறபோது, அடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நாம் மிகை மாநிலம் ஆவோம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதுபோல, 4,704 மெகா வாட் அளவிற்குக் கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்களை நாம் செயல்படுத்திய பிறகும்கூட, புதிய தேவைகள் போன்றவற்றைக்கூட ஈடுகட்ட முடியாமல் போகுமோ என்கிற அளவிற்குத்தான், அந்த affidavit-லே செய்தி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12-20*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்பது சுய அங்கீகாரம் படைத்த ஓர் அமைப்பு. அது நீதிமன்ற அந்தஸ்தைப் பெற்ற அமைப்பு. தமிழ்நாடு மின்சார வாரியம் என்ன கட்டணத்தை நிர்ணயிக்கச் சொல்லி மனு கொடுத்தாலும், அதிலே நியாயம் இருக்கிறதா, அந்தக் கோரிக்கை சரியானதுதானா என்று ஆய்வு செய்து அதை மாற்றியமைப்பதற்கும், அதை ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது குறைப்பதற்கும், கூட்டுவதற்கும் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு. ஆகவே, தமிழ்நாடு மின்சார வாரியம் நிர்ணயித்த கட்டணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.*

*ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தீர்ப்பளிப்பதற்கு முன்பாக சில வரைமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்திச் செலவிற்கும், விநியோகச் செலவிற்குமிடையே இடைவெளியில்லாமல் ஈடுசெய்கின்ற வகையிலே அந்தக் கட்டணங்கள் அமைய வேண்டுமென்று அவர்களுக்கும் சில வழிகாட்டு நெறிமுறைகள் உண்டு. அந்த அடிப்படையிலேதான்,*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 பிப்ரவரி 3

நான் என்ன கோரிக்கை வைத்தாலும், அது ஏற்புடையது என்று, அவர்கள் சரியானதென்று கருதினால், அந்தக் கட்டணத்தை ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே, தமிழ்நாடு மின்சார வாரியம் நேரடியாக அந்தக் கட்டணத்தை நிர்ணயித்தது என்று பொருள் கொள்ள முடியாது.

அடுத்து, மின் உற்பத்தியைப் பொறுத்தளவிலே 4,024 மெகா வாட் மட்டும்தான் இப்பொழுது சொல்லியிருக்கிறது. 2013 ஆம் ஆண்டுக்குள் கிடைக்கக்கூடிய மின் உற்பத்தி 4,024 மெகா வாட் என்று இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகத்தில் படிப்படியாக மின்வெட்டை குறைப்போம். 2016 ஆம் ஆண்டில் மின்வெட்டே இல்லை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி, அதற்கு அடுத்தகட்டமாக தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகம் மின் உற்பத்தியில் மிகை மாநிலம் என்ற நிலையை உருவாக்குவதற்காக இப்பொழுது சில புதிய திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அத்தனையும் இதிலே உங்களுக்கு விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது புதியதாக அறிவித்திருக்கின்ற திட்டங்களெல்லாம் உற்பத்தியைத் தொடங்கினால், பிற்காலத்திலே எப்பொழுதுமே தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தொலைநோக்குப் பார்வையோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. முல்லைப் பெரியாறு பிரச்சினையிலே தண்ணீரும், பாதுகாப்பும் எப்படி முக்கியமோ, அதேபோல கூடங்குளத்திலே பாதுகாப்பும், மின்சாரமும் முக்கியம். அதற்குரிய வகையிலே நம்முடைய மாநில அரசு, டெல்லி அரசோடு விவரங்களை, விவகாரங்களை விரைவுபடுத்தச் சொல்லி இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். மின்சாரத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்குமானால், விரைவில் அதைப் பெற வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 3] [திரு. அ. சவுந்தரராசன்]

சட்டம், ஒழுங்குப் பிரச்சினையிலே உணர்ச்சிவசப்பட்டு நடைபெறுகிற கொலைகளை அரசின் குற்றமாகச் சொல்லக் கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேநேரத்தில், உணர்ச்சிவசப்படுவது, சமீபகாலத்தில் தமிழகத்திலே திடீரென்று அதிகமாகிவிட்டது என்கிற ஒரு பிரச்சினை இருக்கிறது. அது ஏன் என்று பார்க்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. காவல் துறை இந்த விஷயத்தில் எடுக்கிற உறுதியான நடவடிக்கை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணர்ச்சிவசப்பட்டு, அதனால் கொலைக் குற்றங்கள் நிகழ்வது என்பது தமிழ்நாட்டில் திடீரென்று அதிகமாகி விட்டதுபோல் தெரிகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உணர்ச்சிவசப்பட்டு கொலைக் குற்றங்கள் நிகழ்த்துவது திடீரென அதிகமாகவில்லை. முன்பு இதைவிட அதிகமாக இருந்தது. வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்பொழுது அத்தகைய குற்றங்கள் நடைபெறும்போது காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்கு ஏதோ திடீரென்று இந்தச் சம்பவங்கள் அதிகரித்ததுபோல் தெரிகிறதுபோலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. சென்னை, கே-7, ஐசிஎஃப் காவல் நிலையத்திலே நித்தியராஜ் என்பவர் லாக்கப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். நடவடிக்கை வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தேரூர் பகுதியிலே நவம்பர் மாதத்தில், வனக் காவலரும், அவரது மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதுகுறித்து இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது.

அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புற ஏழ்மையைப் பற்றி நம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டதற்கேற்ப என்னுடைய ஒரு கோரிக்கையை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன். குறைந்தபட்ச ஊதியம் என்பதை அரசுத் துறையிலே பணியாற்றக்கூடிய கடைநிலை ஊழியர்களுக்கு, 'டி' பிரிவிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு இணையான சம்பளமாவது நாம் நம்முடைய இதர எல்லா தொழிலாளிகளுக்கும் வழங்குவதற்கான ஒரு சட்டம் இயற்றினால் அது மிகப் பெரிய அளவிற்கு வறுமையைக் குறைக்க உதவும். தனியாரிடமிருந்து வரும் பணம் அந்த வறுமைக் குறைப்பு நடவடிக்கைக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

ICDS, சத்துணவு, உள்ளாட்சி, கூட்டுறவுத் துறை, டாஸ்மாக் போன்ற பணிகளில் இருக்கக்கூடிய தொகுப்பூதிய, மதிப்பூதிய தொழிலாளிகளுடைய பிரச்சினைக்கும், இதேபோல கடைநிலை ஊழியர்களுக்கு உள்ள சம்பளத்தையாவது நாம் வழங்க வேண்டும் என்று நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சங்கப் பிரச்சினையிலேயும், தொழில் உறவு தளத்திலேயும், தொழிற்சங்க அங்கீகாரச் சட்டம் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் 2001 முதல் 2006 ஆம் ஆண்டுவரை அவர்களுக்கு அதிகமான சம்பளம் வழங்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்தது. ஆனால், இப்போது அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகளெல்லாம், 12 நாட்கள் விடுப்பு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணைப்படி, 365 நாட்களுமே அவர்கள் பணிக்கு வரவேண்டும். காரணம், 365 நாட்களுக்கும் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட வேண்டும். இது உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை. ஆகவே அவர்கள் பணிக்கு வருகிறார்கள். ஆக, தொடர்ந்து 12 நாட்கள் வேலைக்கு வராமல் இருப்பதற்கு, விடுப்பு எடுப்பதற்கு அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். அந்த 12 நாட்களிலேகூட சுழற்சி முறையிலே விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்கிற ஒரு ஆணையைக்கூட நாங்கள் தந்திருக்கிறோம். அந்த சுழற்சி முறையிலே வரக்கூடிய வேலைவாய்ப்பை அவர்கள் தொடர்ந்து பெறவேண்டுமென்று சொன்னால், உச்ச நீதிமன்ற ஆணையைப் புறக்கணிப்பதாக ஆகிவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மத்திய அரசாங்கம் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சம்பளத்திற்காகத் தருகிற நிதியைக்கூட தங்களுக்குத் தரவில்லை என்ற குறையைச் சொல்கிறார்கள். இதனை அரசு பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தொழிற்சங்க அங்கீகாரச் சட்டம் என்பது மிக மிக அடிப்படையான ஒரு தேவையாக இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பண்ணைசாராக் கடன், கூட்டுறவுத் துறையின் மூலமும், நம்முடைய வீட்டு வசதி வாரியத்திலும் வீடுகள் பெறுவதற்காகக் கடன் பெற்றவர்கள், அதற்கு வட்டி, அபராத வட்டி என்கிற முறையிலே ஏராளமான பணத்தை, அதாவது அவர்கள் வாங்கியதைப்போல 10 மடங்கு, 15 மடங்கு பணத்தைக் கட்ட வேண்டும் என்கிற ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதாக அவர்கள் குறை சொல்கிறார்கள். அதையும் நம்முடைய அரசாங்கம் கனிவோடு பரிசீலித்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டா வழங்குவதற்கு வசதியாகவும், வாய்ப்பாகவும் வகை மாற்றங்களைச் செய்து கிட்டத்தட்ட 50 இலட்சம் பேருக்கு மேல் பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். 50, 60 ஆண்டுகளுக்கு மேல் குடியிருக்கிற இடத்திற்குப் பட்டா வேண்டுமென்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தக் கோரிக்கையையும் நம்முடைய அரசு கனிவோடு பரிசீலித்து இந்த மிக முக்கியமான கோரிக்கையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, குடியிருக்கின்றவர்களுக்கு பட்டாக்கள் வழங்குகின்ற நிலைகளைக் குறித்துக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு ஒரே ஆண்டிலே ஒரு இலட்சம் பேர்களுக்கு பட்டாக்கள் வழங்கி சாதனை படைக்கிற ஒரு துறையாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறை மிக விரைவிலே விளங்கவிருக்கிறது என்பதனை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே பட்டாக்கள் வழங்கியபோது பட்டா ஒரு இடத்தில் இருக்கும், குடியிருப்பு வேறொரு இடத்திலே இருந்த நிலைகள்கூட உங்களுக்குத் தெரியும். அந்த நிலை இல்லாமல் யார் அங்கே குடியிருக்கிறார்களோ அவர்களுக்கு, உரியவர்களுக்கு பட்டாக்கள் விரைந்து வழங்கிக்கொண்டிருக்கிறது அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அன்புகூர்ந்து உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் தரவேண்டியதைத்தான் நான் சொன்னேன். அந்த வகை மாற்றம் வேண்டுமென்று திரும்பத் திரும்ப, வருவாய்த் துறையிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இல்லை, நான் முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போதுமே ஐம்பது ஆண்டுகள் குடியிருக்கிறவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று



2012 பிப்ரவரி 3] [திரு. பி. தங்கமணி]

கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக, கடந்த முறை திருப்பூரிலே குடியிருப்பவர்களுக்கு 27 ஆண்டுக் காலமாக தண்ணீர் வரவில்லை. அங்கே பட்டா வேண்டுமென்று கேட்டார்கள். கடந்த ஆண்டு பெய்த மழை வெள்ளத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டு 8 உயிர்களுக்கு இழப்பு ஏற்பட்டது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல், நாம் பட்டா கொடுப்பதாக இருந்தாலுங்கூட, நீர்நிலைப் புறம்போக்கில் எங்கெல்லாம், யாரெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களையெல்லாம் அகற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கின்றது. அதற்குப் பின்னாலுங்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் வாணிப நோக்கத்தில் இருப்பவர்களை மட்டும் அகற்றிவிட்டு வீடுகளை அகற்ற வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இப்படி இருக்கின்றபோது 50 ஆண்டுக் காலமாக நீர்நிலைப் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு எப்படி பட்டா கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** ஏற்கெனவே நீர்நிலையாக இருந்த பல இடங்களில் இப்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கிறது; பஸ் நிலையங்கள் இருக்கின்றன; நீதிமன்றங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் எங்கள் மனுவிலேயும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். எந்தெந்த இடங்களில் சாத்தியமோ அங்கே நீங்கள் செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன். நீதிமன்றங்கள் அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. சரி இதை நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்நிலைப் பகுதிகளிலே இருக்கின்றவர்கள், குடிசைகளிலே வாழ்கின்றவர்கள். நீங்கள் குறிப்பிட்டதைப்போல, முந்தைய ஆட்சிக் காலத்திலேதான் அதுபோல தவறுகள் நடைபெற்று இருக்கின்றனவே தவிர, மாண்புமிகு அம்மா அவர்கள்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2012 பிப்ரவரி 3

ஆட்சிப் பொறுப்பேற்ற எந்தக் காலத்திலும் நீர்நிலைப் புறம்போக்கிலே கட்டடங்கள் கட்டப்படவில்லை என்பதை நான் அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இப்போது அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிற சில இடங்கள் குடிசைப் பகுதிகளாக நீர்நிலைப் பகுதிகளிலே இருக்கின்றபோது, வெள்ளம் வந்தால் சேதம் ஏற்படுகிறது. அதற்கும் நீங்கள்தான் போராட்டத்தை நடத்துகிறீர்கள். வெள்ளத்தாலே குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன என்றும் சொல்கிறீர்கள், அவர்களுக்கு பட்டா தாருங்கள் என்றும் சொல்கிறீர்கள், பட்டா கொடுத்த பின்னால் மக்கள் வெள்ளத்தில் அடித்துச் சென்றால் அதற்கும் நிவாரண உதவிகள் தாருங்கள் என்று இருமுறையாகப் பேசுவது சரியாக இருக்குமா என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்தினுடைய தடை இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** ஒரு நிமிடம் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** திடக்கழிவு மேலாண்மை குறித்து ஆளுநர் உரையிலே செய்தி இருக்கிறது. நான் மிகுந்த மகிழ்ச்சிகொள்கிற ஒரு விஷயம் அது. ஆனால், சென்னை மாநகரத்திலேயே திடக்கழிவு விஷயத்தில், பெருங்குடியிலும் சரி, கொடுங்கையூரிலும் சரி, 40, 50 அடி உயரத்திற்கு மலைபோல் குப்பை குவிக்கப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை ஹெலிகாப்டர் மூலமாகப் பார்த்து அவர்கள் ஓர் அறிக்கை கொடுத்தார்கள். அதுவும் எங்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியைத் தந்தது. கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. இரண்டாவது, மூத்த தமிழ் அறிஞர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கேற்ப ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்



2012 பிப்ரவரி 3] [திரு. கே.பி. முனுசாமி]

தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில் அந்தத் திடக் கழிவுகளை எல்லாம் சீர் செய்து, இப்போது 30 ஏக்கருக்குள் எல்லா திடக் கழிவுகளும் கொண்டு வரப்பட்டு சீர் செய்யக்கூடிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. ஆளுநர் உரையிலே மூத்த தமிழ் அறிஞர்களுக்கு மாத ஓய்வூதியம் ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவர்களுக்கு, மொழிப் போர் தியாகிகளுக்கு வழங்குகிற அளவுக்கு ஓய்வூதியம் வழங்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குப் படுகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கனிவோடு கவனித்து அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருக்கிற திட்டங்கள் கவர்ச்சிகரமாக உள்ளதே தவிர, வளர்ச்சிகரமான திட்டங்களாக இல்லை. கடந்த ஆட்சியில் தமிழகத்தின் கடன் சுமை ஒரு இலட்சம் கோடி ரூபாய் எனவும், ஒரு இலட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்கிற தலைக்குனிவிலிருந்து மீட்டு தன்மானத்துடன் வாழ முயற்சி எடுக்கப்படும் எனவும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்டது. ஆனால், மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே தமிழகத்தின் கடன் சுமையைக் குறைப்பதற்கான திட்டங்களோ, சாத்தியக்கூறுகளோ, வழிவகைகளோ இருப்பதாகக் குறிப்பிடப்படவில்லை. புதிதாகப் பொறுப்பேற்ற இந்த அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் மேலும் கடனை அதிகமாக்கியது. எனவே, கடன் சுமை குறையுமா என நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று 'தானே' புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட கடலூர்,

[திரு. எல். வெங்கடேசன்] [2012 பிப்ரவரி 3

விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் வழங்குகின்ற பணி துரிதமாக நடைபெறுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் கூறினார்கள். 'தானே' புயலால் பயிர்கள், குடிசைகள், படகுகள், மீன்பிடி வலைகள், சாலையோரத்திலே இருந்த ஆயிரக்கணக்கான மரங்கள் என அனைத்தும் பாதிக்கப்பட்டன. வரலாறு காணாத வகையில் சேதம் ஏற்பட்டது. எங்கள் விழுப்புரம் மாவட்டத்திலும் நிறைய சேதங்கள் ஏற்பட்டன. எனது திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட வலையாம்பட்டு, மேலமங்கலம், திருவினைநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட காந்திகுப்பம் போன்ற பல கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இயற்கைச் சீற்றத்தால் ஏற்படுகிற அழிவை, பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அடையாளம் காண வேண்டிய வருவாய்த் துறை அதிகாரிகள், கிராம நிருவாக அலுவலர்கள், 'இங்கே பாதிப்பு குறைவு, அங்கே பாதிப்பு குறைவு' எனவும், குறைந்தபட்சம் 50 சதவிகிதம் பாதிப்பு இருந்தால்தான் நிதியுதவி தர முடியும் என அரசாணை உள்ளது என்றெல்லாம் கூறுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தருவதைப் போன்று இல்லை. மாறாக வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல உள்ளது. சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்க மறுக்கின்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாதி சேதம் ஏற்பட்டால் மட்டும்தான் நிதியுதவி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படியல்ல. அந்தப் பகுதிகளிலே குடிசைகளிலே வாழ்கிற அத்தனை பேருக்கும் அந்த நிதி கொடுக்கப்படுகிறது. 4 இலட்சத்திற்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் இருக்கைகளில் அமரக் கேட்டுக்கொள்கிறேன். திரு. கலைராஜன், எங்கே போகிறீர்கள்? (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நிதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே



2012 பிப்ரவரி 3] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

இருக்கிறது. தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

பிற்பகல் 12-35

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்குத் தவறான தகவலைக் கூறவில்லை. வேண்டுமென்றால் அதற்கு உதாரணங்களை நான் இங்கே கூறுகிறேன். ** உதாரணமாக, கண்டமங்கலம் ஒன்றியத்தை உள்ளடக்கிய சொர்ணாவூர், மேல்பாதி, கீழ்பாதி என்ற இரண்டு ஊராட்சிகள் இருக்கின்றன. இதிலே, சொர்ணாவூர் கீழ்பாதியில் 940 குடும்பங்கள் இருக்கின்றன. அந்த 940 குடும்பங்களிலே 687 குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டிருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அதேசமயத்திலே, சொர்ணாவூர் மேல்பாதி கிராமத்தில் 428 குடும்பங்கள் இருக்கின்றன. அந்த 428 குடும்பங்களிலே வருவாய்த் துறை அதிகாரிகளால் 402 குடும்பங்கள் மட்டும் கணக்கெடுக்கப்படுகின்றன. நிவாரண நிதிக்கு உகந்தவை என 402 குடும்பங்கள் கணக்கெடுக்கப்படுகின்றன. கணக்கெடுத்து டோக்கனும் வழங்கப்படுகிறது. அந்த 402 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றபோது 352 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்போவதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்த 50 பேர் இன்றும் டோக்கனோடு காத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன், பேசிக்கொண்டிருக்காதீர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** ** நான் இதுவரையிலே குறை சொல்லவில்லை. மிகப் பெரிய அழிவு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பொத்தாம்பொதுவாகச் சொல்கிறார். அங்கு கணக்கு எடுக்கப்பட்ட

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம்.சி. சம்பத்] [2012 பிப்ரவரி 3

குடும்பங்கள் ஓட்டு வீடுகள் மற்றும் குடிசை வீடுகள்தான். கான்கிரீட் வீடுகளுக்கு மட்டும்தான் தற்போது நிவாரணம் வழங்கவில்லை. அந்த அடிப்படையிலே வழங்கப்பட்டதன் காரணமாக ஒட்டுமொத்த ஓட்டு வீடுகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, நான் வழங்கப்படவில்லை என்று சொல்லவில்லை. குடிசை வீடுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நானும் இந்த அரசுக்கு சில தகவல்களைத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆதாரங்கள் இருந்தால் நீங்கள் குறிப்பிட்டுக் காட்டலாம். அந்த அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கண்டமங்கலம் கிராமத்திலே நானே நேரில் சென்று நிவாரணம் வழங்கியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அந்த நிவாரணம் வழங்குகின்றபோது சில இடங்களிலே ஒரே வீட்டிலிருந்து 2 பேர் டோக்கன் எடுத்து வருவார்கள். நானே அதைப் பார்த்து இரண்டு டோக்கன் உங்களுக்கு எதற்கென்று அந்த டோக்கனைப் பறிமுதல் செய்திருக்கின்றேன். தவறுகளைக் களைந்திருக்கின்றோம். நீங்கள் சொல்வது மாடி வீடு வைத்திருக்கிறவர்களுக்கு. உங்கள் கட்சிக்காரர் உங்களிடம் முறையிட்டிருப்பார்கள். இந்தக் கிராமத்திலே 450 பேர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 3] *[திரு. சி.வி. சண்முகம்]*

இருக்கிறார்கள். 352 பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். மீதி 50 பேருக்குக் கொடுக்கவில்லை என்று நீங்கள் சொல்லியிருப்பீர்கள். ஆனால், நீங்கள் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்திருக்க மாட்டீர்கள். நீங்கள் சொல்கின்ற அந்த 40 வீடுகளும் கல் வீடுகள். மாண்புமிகு அம்மாவைப் பொறுத்தவரை அனைவருக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறி அனைவருக்கும் நிதி கொடுத்திருக்கின்றோம். விழுப்புரம் மாவட்டத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரம் வீடுகளுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு, இன்றைய தேதிவரை அத்தனை பேருக்கும் 100 சதவீதம், 1 இலட்சத்து 45 ஆயிரம் வீடுகளுக்கு நிவாரண நிதி கொடுத்து முடிக்கப்பட்டு விட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* கொடுத்து முடிக்கப்பட்டு விட்டது. அதிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார். நீங்களும் பார்த்திருப்பீர்கள். அதிலும், யாராவது உண்மையிலேயே கணக்கெடுப்பில் விடுபட்டிருந்தால் நேரடியாக வட்டாட்சியரையோ அல்லது மாவட்ட ஆட்சியரையோ அணுகினால் அவர்களுக்குக் கண்டிப்பாகக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி உண்மையிலேயே விடுபட்டிருக்கிறதென்று நீங்கள் சொன்னால், அதை சம்பந்தப்பட்ட அலுவலரிடம் சொன்னால், கண்டிப்பாக நிவாரணம் கொடுக்கப்படும்.

*பிற்பகல் 12-40*

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர், விழுப்புரம் நகரத்திலே 14-வது வார்டு மகளிர் அணியைச் சேர்ந்தவர், அவர் வார்டிலே உள்ள மீனவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும், அது நகரத்தின் முக்கியப் பகுதியில் உள்ளது என்றும், அங்கு மாடி வீடுகளாகத்தான் உள்ளன என்றும், எங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் கடந்த 4 நாட்களுக்கு முன் என்னை நேரடியாகச் சந்தித்துக் கேட்டபோது, நானே அவர்களை நேரடியாக வைத்துக்கொண்டு வட்டாட்சியருக்கு தொலைபேசியில் பரிந்துரை செய்து, உண்மையிலேயே அவர் சொல்கின்ற பகுதி பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க நீங்கள் ஆய்வு செய்து கொடுங்கள் என்று சொன்னேன். அவர்கள் 150 பேர் கொடுத்திருந்தார்கள். அதில் 72 பேர் தகுதியுடையவர்கள் என்பதால், இன்றைக்கு அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பயனாளி தகுதியிருந்தும் விடுபட்டிருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கலாம். எனவே, நீங்கள் கூறிய அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, நீங்கள் கூறிய குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிவாரணப் பணிகள் நடக்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒரு டோக்கன் கொடுக்கிறார்கள். அந்த டோக்கனை வாங்கிக்கொண்டுதான் நிவாரணம் வழங்குகிறார்களே தவிர, டோக்கன் இல்லாமல் யாருக்கும் நிவாரணம் வழங்குவதில்லை. மேலும், டோக்கன் தருகின்றவர்களுக்கு மட்டும்தான் அந்த நிவாரணம் வழங்கப்படுகிறது. டோக்கனோடு மட்டுமல்ல; கையெழுத்தும் வாங்கப்படுகிறது. ஆகவே, இதில் தவறு நடப்பதற்கு வாய்ப்பே இல்லை. அதுமட்டுமல்ல; மூன்று கையெழுத்துக்கள் வாங்கப்படுகின்றன. அவர் குறிப்பிட்டதைப்போல, இரண்டு பேர் ஒரே வீட்டில் இருந்துகொண்டு, ஒரே குடிசையில் இருந்துகொண்டு ஒரே டோக்கன் வாங்கிவிடலாம். தவறு இருக்கலாம். தவறு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, ஒவ்வொன்றையும் சரியாகச் செய்து அதற்கு மேலும் தவறு இருக்குமானால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மேலே உள்ள உரிய அதிகாரிகளுக்கு இதுகுறித்த தகவலைத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Specific mention ஏதும் இல்லாததனால் குற்றஞ்சாட்டிப் பேசிய பகுதி நீக்கப்படுகிறது. தகுதி இருந்தும் நீக்கப்பட்டிருந்தால், அந்தப் பட்டியலை நீங்கள் கொடுக்கலாம்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது என்னவென்று எங்கள் மாவட்ட அமைச்சருக்குத் தெரியும். ** (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அதுபோல் உங்களிடம் ஆதாரம் இருந்தால் கொடுங்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) நேரம் ஆகிறது. பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மீதோ, அந்தத் துறையில் இருக்கின்ற அலுவலர்கள் மீதோ எந்தக் குற்றச்சாட்டைச் கூறினாலும், ஆதாரங்களை வழங்கவேண்டும். நிவாரணப் பணிகளை ஆற்றுகின்றபோது பெரிய அளவிலே இதுபோல் தவறு நடந்திருக்கிறது என்று குற்றச்சாட்டு சொல்லி பத்திரிகையில் பதிவு செய்யலாம் என்பது தவறான கருத்து. உங்களிடத்தில் ஆதாரம் இருந்தால் அதைக் கொடுத்துவிட்டு அந்தக் கருத்துகளைச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொல்லிவிட்டேன். ஆதாரம் இருந்தால் கொடுங்கள். ஆதாரம் இருந்தால் நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும். அதுவரை அவைக் குறிப்பில் இடம்பெறாது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை மட்டும் பதிவு செய்துகொள்கிறேன். அங்கு பணியாற்றுகின்ற அலுவலர்கள் மீது ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு இயற்கை இடர்ப்பாடு ஏற்படுகின்றபோது அங்கு பணியாற்றுகின்ற அலுவலர்கள் எந்தச் சூழ்நிலையிலே பணியாற்றுகிறார்கள் என்பதை அறிவோம். அதுவும் பல்வேறு அரசுத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்கின்ற பணி, வருவாய்த் துறையினைச் சேர்ந்த கிராம அலுவலர்களிடம்தான் உள்ளது. அவர்கள் 24 மணி நேரமும் பணியாற்றினார்கள். உங்களுக்கே தெரியும். அந்தக் கிராம அலுவலர்களிடம் எனக்குக் கொடு, அவர்களுக்குக் கொடு என்று சொல்லி அந்தக் கிராம அலுவலர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள்கூட நடந்தேறியிருக்கின்றன. அதையும் தாங்கிக்கொண்டு அந்த அலுவலர்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் கொடுக்கப்படுகின்ற அந்த நிவாரணம் உடனடியாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்று பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் பாராட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது இந்தச் சம்பவம் தொடர்பாக மாவட்ட வருவாய் அதிகாரிகளிடத்திலும் தொடர்பு கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெங்கடேசன், நான்தான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவர் பேசுகிறார். நீங்கள் ஏன் எழுந்தீர்கள்? தவறு, எழக்கூடாது.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நீங்கள் ஆதாரத்தை வருவாய்த் துறை அதிகாரிகளிடம் கொடுத்தது என்பதெல்லாம் இல்லை. சட்டமன்றத்தில் நீங்கள் பேசுகிறீர்கள்; அதனால் நாங்கள் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, ஆதாரம் இருந்தால் அந்த நகலைக் கொடுத்துவிட்டு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இருந்திருந்தால் அதை நீங்கள் இன்று காலை என்னுடைய அறைக்கு வந்து கொடுத்துவிட்டு இப்போது பேசியிருக்கலாம். இப்போதுகூட ஒன்றும் இல்லை. நீங்கள் சொன்னதற்கான ஆதாரத்தைக் கொடுத்தால், அது அவைக் குறிப்பில் இருக்கும். நீங்கள் ஆதாரம் கொடுக்கவில்லை என்றால் அது அவைக் குறிப்பில் இருக்காது. இதுதான் எனது தீர்ப்பு. நீங்கள் அடுத்த subject-க்குப் போங்கள்.

பிற்பகல் 12-45

**திரு. எல். வெங்கடேசன்:** அதேபோல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கும், இயற்கை இடர்ப்பாடுகளிலும், திடீர் தீ விபத்துகளிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வழங்கப்படும் I.A.Y. என்கின்ற இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திலே ** கடந்த காலங்களில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டதோ . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.A.Y. திட்டத்தைப் பற்றி இங்கே சொன்னார். அதிலே சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார். ** என்பதை ஆதாரத்தோடு கூறவேண்டும். இல்லாவிட்டால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், இந்த இடத்தில் தகுதி இல்லாதவர்களுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

allotment கொடுத்தார்கள்; இதை நான் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்; இதில் மேல் நடவடிக்கை எடுங்கள் என்று குறிப்பிட்டு சொன்னால்தான் சரியானதாக இருக்கும். பொத்தாம் பொதுவாக திட்டத்தைக் குறை சொல்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அதனால் அதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடுகள்) இப்போது அவைக் குறிப்பிலே இருக்காது என்று சொல்கிறேன். ஆதாரம் கொடுத்தீர்கள் என்றால் அவைக் குறிப்பில் இடம்பெறும்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சொல்லிவிட்டீர்கள். நாங்கள் கொடுக்கிறோம். என்னுடைய தொகுதி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆதாரம் கொடுத்தீர்கள் என்றால் அவைக் குறிப்பில் இருக்கும்.

**திரு. எல். வெங்கடேசன்:** என்னுடைய தொகுதி முகையூர் ஒன்றியத்திலேகூட 251 இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகள் வந்திருக்கின்றன. (குறுக்கீடுகள்) இல்லை, 251 வீடுகள் வந்திருக்கின்றன. என்னிடத்திலே மனு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசாங்கத்தின் செயலைப் பொறுத்தவரையில், Act, Rule, G.O., guidelines போன்றவைமூலமே அவை செயல்படுத்தப்படும். ஆணையில்லாமல் ஒரு செயலைச் செயல்படுத்த முடியாது. இந்தப் பகுதியில், இதுமாதிரி ஆளே இல்லாதவர்களுக்கு நிவாரணம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள் என்று, அரசின் order கொண்டு வந்து கொடுத்தால் அதை விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ள முடியும். அதனால், பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. எந்த ஊரில், எந்த இடத்தில் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திரா நினைவுக் குடியிருப்பு என்பது, ஏதோ வழியில் போகின்றவர்களுக்கு எடுத்துக் கொடுத்துவிட முடியாது. எந்த B.D.O.-வும் எடுத்து வைத்துவிடமுடியாது. மத்திய அரசு சரியான சட்டத்தைத் தீட்டி சரியாகக் கொடுத்திருக்கிறது. கிராம சபைக் கூட்டத்தைக் கூட்டவேண்டும். அந்தக் கிராம சபைக் கூட்டத்திலே இந்திரா நினைவுக் குடியிருப்பு யார், யார் கேட்கின்றார்கள் என்று

[திரு. கே.பி. முனுசாமி] [2012 பிப்ரவரி 3

*மனு கொடுக்கவேண்டும். அந்த மனுவின் அடிப்படையில் பயனாளிகளை அறிந்து, அதற்குத் தகுதியானவர்கள் என்று கிராம சபையில் முடிவு செய்து, அந்தக் கிராம சபை வாயிலாக பஞ்சாயத்துத் தலைவர் கொடுக்கவேண்டும். இவ்வளவு நடைமுறைகள் இருக்கின்றன. இந்த நடைமுறைகளை விட்டுவிட்டு ஏதோ தான்தோன்றித்தனமாக யாருக்கோ கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது மிகத் தவறான செயல். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ** இன்னும் 347 பேர்கள் என்று சொல்கிறார்கள். 400 பேர்கள் என்று சொல்கிறார்கள். பெயரைச் சொல்லுங்கள். வீட்டைச் சொல்லுங்கள். வீட்டு நம்பரைச் சொல்லுங்கள். இவர்கள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். ** தவறு செய்திருந்தால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அதேமாதிரி இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் கொடுக்கின்ற வீடுகள் முழுவதுமே கிராம சபையில் வைத்து கிராம சபை அங்கீகாரம் கொடுத்து, கிராம சபை வாயிலாக அந்தத் துறைக்கு வருகின்றபோது அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஏதோ அரசாங்கம் கொடுக்கின்ற பணத்தில் வழிப்போக்கில் எடுத்துக் கொடுத்துவிட முடியாது என்பதை மாண்புமிகு புதிய உறுப்பினர் தெரிந்துகொள்ளவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இன்றைக்கு ஒரு மணிக்கு அவை நடவடிக்கைகளை முடிக்கவேண்டும். அதனால்* no Point of Order. *(குறுக்கீடுகள்) இன்றைக்கு* no Point of Order.

**திரு. எல். வெங்கடேசன்:** *புதிய உறுப்பினராக இருந்தாலும், தொகுதியிலே உள்ள பிரச்சினையை நான் இங்கே குறிப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. ஆதாரம் இருக்கிறது. கிராம சபையிலே வைக்கவேண்டும். கிராம சபையிலே நிறைவேற்றவேண்டும். பசுமை வீடு திட்டமும் அப்படி கிராம சபையிலே வைக்கவேண்டுமென்று எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2012 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருக்கிறது, ஆதாரம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையிலே கருத்துகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதுபோன்ற கருத்துகளை அவைக் குறிப்பிலே ஏற்றக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்* clear-*ஆக* ruling *கொடுத்துவிட்டேன். ஆதாரம் இருந்து கொடுத்த பின்னரே அவைக் குறிப்பிலே இருக்கும். ஆதாரம் இல்லாமல் பேசியிருந்தால் அவைக் குறிப்பிலே எதுவுமே ஏறாது. இது என்னுடைய* ruling. *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Administrative lapses *என்பது வேறு.* Charges *என்பது வேறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மீதோ அல்லது இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மீதோ குற்றச்சாட்டு கூறுவது என்பது வேறு. அதற்குத் தகுந்த ஆதாரம் வேண்டும். ஆனால், அதே நேரத்தில் ஒரு நிருவாகம் என்பது பல இலட்சக்கணக்கான அலுவலர்கள் பணியாற்றுகிற இடம், எங்கேயாவது* administrative lapse *இருக்குமேயானால், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு (குறுக்கீடு) இருங்கள், இருங்கள் சொல்லி முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபொழுது, அதை அவர் விசாரிக்கலாம். விசாரித்து அதை சரி செய்யலாம். அதன்மூலம் அந்த நிருவாகம் செம்மைப்படுமே தவிர, அந்த நிருவாகத்திற்கு இழுக்கு வராது. ஆகையினால், அமைச்சரவைக்கோ, அரசுக்கோ அதனால் களங்கம் வராது. **சுட்டிக்காட்டுகிறார். மாண்புமிகு அமைச்சர்கள் அதுகுறித்து விசாரித்து, அதை சரி செய்தால் இன்னும் நிருவாகம் செம்மைப்படுமே தவிர, அதற்கு எந்தக் குறைவும் ஏற்படாது.*

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2012 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ரொம்ப அழகாகப் பதில் சொன்னார். அதாவது, குற்றச்சாட்டு நடைபெற்றிருக்கிறது என்று அமைச்சரிடத்தில் முறையிடும்போது, அவர்கள் அதை விசாரிக்க வேண்டுமென்று சொன்னார். எந்தக் குற்றச்சாட்டு, எந்த இடத்தில், யாரால் நிகழ்த்தப்பட்டது என்பதை அவர் புள்ளிவிவரத்தோடு சொல்ல வேண்டும். ஆனால், அவர் அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, சொல்லவில்லை. ஆதாரத்துடன் சொல்லுங்கள் என்று நான் திரும்பத் திரும்ப கேட்டேனே? ஆனால், அவர்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி, சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு, அதாவது, நிருவாகத்தின்மீது (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் பேசியது நிருவாகத்தின்மீது; மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, அந்த lapses பற்றிச் சொல்லலாம். ஆனால், அரசாங்கத்தின்மீது பொத்தாம்பொதுவாக ஒரு குற்றச்சாட்டு சொல்லும்போது ஆதாரமில்லாமல் பேசக்கூடாது. நீங்கள் சொன்னது குற்றச்சாட்டு. Lapse கிடையாது. குற்றச்சாட்டு இருக்கும்போது ஆதாரம் இருக்க வேண்டும். நீங்கள் ஆதாரம் இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தனக்கே உரிய பாணியில் தங்கள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருடைய கருத்தை நியாயப்படுத்தினார். Lapse என்பது-- எந்தச் சூழ்நிலையிலும் பொதுவாகச் சொல்லக்கூடாது. அரசாங்க அதிகாரிகள் செய்கின்ற தவறு என்று அவர் கருத்தை மாற்றிச் சொல்ல முயற்சி செய்கிறார். ஆனால், அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அரசாங்க அதிகாரியின்மீது குற்றம் சாட்டவில்லை. அங்கே இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகள் ** என்று கூறுகிறார். ** யார் கொடுக்கமுடியும்? அரசு அலுவலர் கொடுத்தால் நிச்சயமாக அவர் சஸ்பென்ட் ஆகிவிடுவார். தகுதியான உறுப்பினர்களை, பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது கிராம சபை. கிராம சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய அதிகாரிகளிடத்திலே கொடுக்கப்படுகிறது. அந்தப் பணியையும் கிராம சபையே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 3] [திரு. கே.பி. முனுசாமி]

கண்காணிக்கிறது. அதனடிப்படையிலேதான் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ** இந்த ஊரில், இந்தக் கிராமத்தில், கிராம சபையால் தேர்ந்தெடுக்கப்படாத ஓர் உறுப்பினருக்கு இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடு கொடுக்கப்பட்டிருக்கிறது, அவருக்கு வசதி இருக்கிறது, இரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது, ஏற்கெனவே மச்சு வீடு இருக்கிறது, இதுவும் பெற்றிருக்கிறார் என்று ஆதாரத்தோடு கொடுத்தால் உடனடியாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே, இதுபோன்ற கருத்துகள் சொல்வதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இன்றைக்கு என்னால் உங்களைப் பேச அனுமதிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், நீங்கள் மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல, ஆதாரத்துடன்கூடிய குற்றச்சாட்டுகள் இருந்தால் சொல்லலாம்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நான் சொல்ல வருவது புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, 1000 கோடி ரூபாய் செலவிலே ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற சிறிய குறைகள் அதிலே இருக்கக்கூடாது. அதாவது, அந்த ஒரு இலட்சம் பேருக்கு, பாதிக்கப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறை நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏற்கெனவே புயலால் எத்தனைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கம் கணக்கெடுத்து வைத்திருக்கிறது. அந்தக் கணக்கின்படிதான் இந்த ஒரு இலட்சம் வீடுகளும் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*பிற்பகல் 12-55*

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2012) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2012), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2012) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 3-2-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, (4-2-2012) சனிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 12-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*





# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*11. பொதுக் கணக்குக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2011-2012)*

*12. பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2011-2012)*

*13. பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2011-2012)*

*14. பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை. (2011-2012)*

*15. பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2011-2012)*

*16. மனுக்கள் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2011-2012)*

*17. மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2011-2012)*

*18. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2011-2012)*

*19. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) 1 முதல் 100 வரை)*